மலர் 11. ரிஜிஸ்டர் நெ. M. 3157.

# சிவபக்தன்.

மாதவெளியீடு

## யுவ-வருஷம் ஆனித்திங்கள்.

விநாயகர் துதி.

அத்தி முகத்தனை யானை முகத்தனை
இந்துவிளம் பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன்றனை ஞானவிளக்கைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

சிவபக்தன்
(1934)



சுத்தஸ்படிக இஷ்டலிங்கம் 1-க்கு விலை ரூ 0—8—0

பத்திராதிபர்.
வை. செ. குருசாமி ஐயர்,
சூகை, சேலம்.

# வேண்டுகோள்.

ஆஸ்திக சிகாமணிகளான சிவபக்தர்களாயுள்ள பிரதியொரு வரும் இப்பத்திரிக்கையை ஆதரிக்கவேண்டியது, மானிடர்களின் முதற் கடமையும் முக்கியகடமை (பிரதான முறமை)யுமாகும். ஆகையாலிதைக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருட சந்தா ரூ 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச் சேரவேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது. ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிக்கைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த(உட்)கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் படித்தால் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும் (மிருதியாக விளங்கும்.)

இப்பத்திரிக்கையை வி. பி. யில் அனுப்புவதால் அதிக சிலவும், வீசிரமமுமேற்படுகிறபடியால் அன்பர்கள் வருடசந்தா ரூ 1-8-0 முன்னதாகவே மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

வைத்தியர்களுக்கும் மிக அவசியமானது.

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்திய, பர்மா, சிலோன், முதலான உள்நாடுகளுக்கு | ரூ. 1—8—0 |
| | பினாங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| தனிப்பிரதி | ... ... ... 1-க்கு விலை | 0—2—0 |
| ,, | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது அணா | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் கொண்டு பத்திரிக்கை அனுப்பப்படும்.

பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவதில்லை. ஆகையால் சந்தா தொகையை முன்னதாக மணியார்டர் செய்தனுப்ப வேண்டியது.


## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ 5—0—0 |
| அரை பக்கத்திற்கு | ரூ 2–12—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ 1—8—0 |

நீடித்த விளம்பரத்திற்கும் துண்டு பிரசுரங்களை சேர்த்தனுப்புவதற்கும், ரிப்ளை கார்ட்டு எழுதி தெரிந்துகொள்ளவும்.

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர், குகை, சேலம்.**



ஆசிரியர்:—


வை. செ. குருசாமி ஐயர்,

வைத்தியம், குகை, சேலம்.

# ஏகேஸ்வர பக்தி.

லிங்கிப்பிராஹ்மணர்களிற் சிலர் சாஸ்திரங்களின் கருத்தையறியாமல் எல்லாப் பெயருள்ள கடவுளும் தெய்வமே? தெய்வத்தினிடத்தில் பேத பாவனை ஏன் நினைக்கவேண்டும். எல்லாத் தெய்வங்களும் சமமெனத்தெரிந்து எல்லாத்தேவர்களையும் பூசிக்கிறோ மென்பார்கள். ஒரு ஸ்திரீயானவள் என் புருஷனைப் போல சர்வரும் புருடர்களே யெனச் சகலர்களிடத்திலும் பதி பாவனையுடன் நடந்துக்கொண்டால் யோக்கியமாயிருக்குமா? நம் தந்தையைப்போல மற்ற ஜனங்களனைவரையும் தந்தையாகப் பாவித்தாலும் நம் பெயரை எழுதும்போது உண்மையான தந்தையின் பெயரை ஏன் எழுதவேண்டும். மற்றவர்களின் பெயரை எழுதுவது யோக்கியமாகுமா? நமது உண்மையான தந்தையின் சொத்துக்களுக்கே நாம் வாரிசாகிறோமேயல்லாமல் இதரர்களின் சொத்துக்கு என்றைக்கும் வாரிசாவதில்லை. ஆனதால் நமது தெய்வமான இஷ்டலிங்கமூர்த்தியினிடத்திலேயே நாம் பக்தியை வைக்கவேண்டியது. ஜகத்தில் தெய்வ மொருவனேயல்லாமல் இருவரில்லை. ஒருவனே அநாதி சம்சித்தனும் நிகமாகம பிரசித்தனும் யோகஜனசாத்தியனும் பவரோகவைத்தியனும் வேதாந்தவித்தியா வேத்தியனும் சச்சிதாநந்த மயமான சங்கரனொருவனே யல்லாமல் வேறொரு தெய்வமுண்டா? இதர தெய்வங்களெல்லாம் சேவகர்களே யொழிய மூலகரல்ல. சர்வதேவதைகளிலும் அதிகமானவ னென்னும் ஈஸ்வரனுக்கு மஹாதேவ னென்னும் பெயரிருக்கின்றது. மஹாதேவ னென்றால் பெரிய தெய்வ மென்றர்த்தமாகின்றது. இந்நாமமானது இதர எந்த தெய்வத்திற்கு மில்லாத காரணம் மீதமுள்ள தெய்வங்களெல்லாரும் சேவகர்களென ஸ்பஷ்டமாகின்றதல்லவா. இவ்விஷயத்தில் நீலகண்ட சம்பூ கிரந்தத்தில் சொல்லியிருப்பதென்னவெனில்:—

திருஷ்ட்வா கௌஸ்துபமஸ்சரோகணமபி பிரகாந்த வாதாமிதோ
கீர்வாணு: கதிவா நசம்தி புவனே பாராதிவ : கேவலம்
நிஷ்கிராந்தே கரலேத்ருதே சுரகணே நிச்சேஷ்டிதே விஷ்டபே
மாபிருஷ்டீதி கிராவீரா சதுரயோ தேவஸ்தமேவஸ்தும:— 1

ஸ்ரீ ஜகத்குரு விஸ்வாராத்திய குரு புங்கவருடைய சச்சிஷ்யனை துர்வாசமஹரிஷியினுடைய சாபத்தின் மஹத்துவத்தால் சமுத்திரத்தில்முழுகிப்போன இந்திரனுடையசகல சம்பத்துகளையும் அப்புறப்படுத்தும் நிமித்தமாக அக்கடலையழிக்க எண்ணங்கொண்டு கடலைக்கடையும் காலத்தில் கௌஸ்துபரத்தினமும் அப்சரஸ்த்ரீகள் இத்தியாதிமோஹமான பதார்த்தங்கள் தோன்றினவுடனே எனக்கு உனக்கென கலகம் செய்துக்கொண்டு அவைகளையடைந்து சுகப்படும் சுவர்க்க மென்னும் பூதேவிக்கு கேவலம்

பாரபூதர்களான தேவர்களனேகருண்டு, ஆனால் உலகத்தையேநாச மாக்கும் ஹாலாஹல விஷத்தின் பயங்கர சப்தங்கள் பிறந்தவுடனே தேவர்கள் எனக்கு வேண்டாம். எங்களுக்கு வேண்டாமென ஓடினார்கள். சிலர் மூர்ச்சையடைந்தார்கள். மற்றும் சிலர்கள் பரசிவனை ஸ்துதி செய்யவும் அப்பொழுதந்த தயா சமுத்திரனானவன் பயங்கர விஷத்தைக் குடித்து கண்டத்திலிருத்தினான். அப்படிப்பட்ட தெய்வத்தையே ஸ்துதிக்கிறேனென நீலகண்ட தீக்ஷிதர் சொல்லியிருக்கிறார்.

இதற்குச் சிலர்கள் விஷத்தைக் குடித்தபிறகு சங்கரனுக்கு விசேஷமான கஷ்டமான காரணத்தால் தசரதனின் புத்திரனான ராமனைத் தியானம் செய்தாரெனச் சிலர் சொல்லுவதுண்டு. ஆனால் தசரதனுடைய புத்திரன் ராமனுடைய ஜனனமெப்பொழுது ஹாலாஹல விஷ பிராசன மெப்பொழுது. ராமன் விஷ்ணுவின் அவதாரியல்லவே? அப்படியானால் சமயத்திலிருந்த விஷ்ணுவு கௌஸ்துபமணியை 'மாத்திரம் ஸ்வீகரித்து விஷத்தைக் கிரகிக்காமல் பரசிவனிடத்தில் முறையிடும் காரணமென்னவிருந்தது. பரசிவனுக்கு கஷ்டமுண்டாயிருந்தால் பானம் செய்வாரா, அவருக்கு அவ்வளவு தெரியவில்லையா என்ன? ஆத்மாராமனை ஸ்துதி செய்தாரெனச் சிலர் சொல்வதுண்டு, பரசிவனே ஆத்மா ராமனாக இருந்துக்கொண்டிருக்க மற்றொரு ஆத்மா ராமனெங்கிருந்து வந்தான்? பரசிவன் விஷத்தை லீலா மாத்திரத்தால் பானம் செய்தானே யொழிய கஷ்டத்தினாலல்ல. விஷ்ணு தன்னுடைய தசாவதாரங்களிலெல்லாம் சிவலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜித்திருப்பது சாஸ்திர சித்தமாகயிருக்கிறது. மச்சாவதாரத்தில் இலங்கையில் மச்சேஸ்வரனையும், கூர்மாவதாரத்தில் கூர்மேஸ்வரனையும், வராஹாவதாரத்தில் வராஹேஸ்வரனையும், வாமனாவதாரத்தில் வாமனேஸ்வரனையும், ராமாவதாரத்தில் ராமேஸ்வரனையும், ஸ்தாபித்துப் பூஜித்து தன்னுடைய அவதாரங்களை சமாப்தி செய்திருக்கும் விஷயமானது புராணாதிகளில் பிரசித்தமாயிருக்கிறது.

ராமாவதாரத்தில் ராமசந்திரன், ராவணனுடைய வதையைச் செய்த பிறகு ராமனுக்கு பகலிருளும், "ராவண" என்னும் சப்தமே பின் தொடர்ந்திருந்ததால், இதினுடைய நிவிர்த்திக்காக என்ன செய்யவேண்டுமென தம்பியான லட்சுமணனை விசாரிக்கவும், லட்சுமணன் சொன்னதென்னவெனில் அண்ணா ராவணன் பரசிவபக்தன். ஆனதினால் அவனைக் கொன்ற தோஷத்தினால் பிரஹ்மராக்ஷசரூபமாக அவன் பெயரானது, நம்மைப் பற்றியிருக்கிறது, இதின் நிவிர்த்தியாக வேண்டுமானால் சர்வரின் இச்சித பலத்திற்கு காம்தேனுஸ்வரூப தெய்வமானபோளா சங்கர சிவனை ஸ்மரிக்கவேண்டும். இதனால் நம்ம தோஷமானது நஷ்டமாகுமே

யல்லாமல் வேறொரு உபாயமுமில்லை, யெனச் சொல்லவும். அந ஜனவாக்கியத்தைக் கேட்டு ராமன் சந்துஷ்டனாகி அநேக விடங்களில் சிவலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜித்தார். ஸ்ரீகாசியி (பனாசி)ல் ராமலிங்கமிருக்கிறது. பார்ஸி தாலூக்கா "ஏடசி" என்னுமிடத்தில் ராமலிங்க தேவாலய மிருக்கின்றது. தார்வாட ஜில்லாவில், "கங்கிபாவி" என்னுமிடத்தில் ராமலிங்கமிருக்கிறது.

"குல்பார்க்கா" ஜில்லாவில் ஜாகீர், ஜீவரி, கெயில், ராமலிங்கமிருக்கிறது. பிஜாப்பூர் ஜில்லா, "கட்லவாட" என்னுமிடத்தில் ராமலிங்கமும் மற்றும் தென்கோடியான ராமேஸ்வரத்தில் ராமலிங்கமும் இப்படியாக அநேக விடங்களில் அநேக லிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜித்திருப்பதல்லாமல் மற்றும் சோலாப்பூர் ஜில்லா "தீர்த்த" மென்னும் கிராமத்தில் ராமலிங்கமென்னும் லிங்கத்தை ஸ்தாபித்துப் பூசிக்கவும் அவ்விடம் பரமாத்மன் பிரசன்னமாகி ராமனுக்கு தீர்த்தம் கொடுத்து நீ இன்னொரு லிங்கத்தை ஸ்தாபித்தால் உன் இச்சை பலிக்குமென் றாசீர்வாதம் செய்தார். ஆனதினால் எந்த விடத்தில் ராமனுக்கு பரசிவனால் தீர்த்தம் கிடைத்ததோ அவ்விடத்தில் தீர்த்த மென்னும் கிராமம் உற்பத்தியாயிருக்கிறது. பிறகு ராமன், ஆளந்த தாலூக்காவிலொரு ரம்மியமான ஸ்தலத்திற்குப்போய் அவ்விடம் "ராமலிங்க" மென்னும் மூர்த்தியை ஸ்தாபித்துப் பூசிக்கவும் அப்பொழுது, ராவண, ராவண, வென்னும் சப்தமானது இல்லாமலிருந்ததற்காக ராமன் "நராவண:" எனச்சொன்னதினால் அன்று முதல் அவ்விடத்திலுள்ள கிராமத்திற்கு "நராவண" வென்னும் பெயருண்டாயிற்றாம். தற்காலமுமவ்விடத்திற்கு "நராவணி" என்னும் பெயர் மாறியிருக்கிறது. அவ்விடம் ராமனுக்கு பலப்பிராப்தி கிடைத்ததற்காக "க்ஷேத்திரபல" ராமலிங்கேஸ்வரன் என்னும் நாமமிருந்து வருகிறது. இப்படியாக ராமன் தன்னுடைய சவுக்கியத்திற்காக அநேக தடவை சிவலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜித்திருப்பது சாஸ்திரங்களினாலும், இதிகாசங்களாலும், பிரத்தியக்ஷாநு பவங்களாலும் காணப்பட்டாலும் சிலர் பரமாத்மன் விஷபானம் செய்தபோது ராமனுடைய ஸ்துதியைச் செய்தாரென்பது மூர்க்கத்தனமல்லவா. இம்மாதிரியாக சர்வ அவதாரிகளும் தெய்வங்களும்.

சிவயேகோத் யேய : சிவம்கர : சர்வமன்யத் ப்ரித் யஜ்ய

என்னும் வேத வாக்கியத்தைப்போல ஒருவனே ஈஸ்வரனெனத் தெரிந்து ஸ்தாபித்துப் பூஜித்து சுகிகளாயிருக்கிறார் இதுவே நிஜமான ஏகேஸ்வர பக்தியாகும்.

ராமன் ராமேஸ்வராதி மூர்த்தி பூஜைகளினால் முக்தனான பிறகு அவனுடைய பரம பக்தனான ஹனுமான் எனக்குமோக்ஷமார்க்கத்தைக் காட்டெனக் கேட்கவும், ராமன் நான் பரசிவனுடைய ஸ்மரணையினால் முக்தனாயிருக்க உன்னை முக்தனாகச் செய்

யும் சாமர்த்தியம் எனக்கேது, நீயும் பரசிவனை ஸ்மரித்தால் உனக்கு முக்தி கிடைப்பதில் சம்சயமில்லை யெனச்சொல்லவும் ஆஞ்சனேயன் அதேமாதிரி பரசிவனை பக்தி பூர்வகமாக தியானம் செய்யவும் கானபிரியனுன பரமாத்மன் பிரத்தியக்ஷனுகி உன் இச்சை என்னவெனக்கேட்கவும், ✳ ஆஞ்சனேயன் எனக்குமோக்ஷமார்க்கத்தைக்கொடுக்கவேண்டு மெனக் கேட்கவும், சங்கரன் உனக்கு உத்தம குருவையனுப்புகிறேன், அவருல் உன் இச்சை பூர்த்தியாகு மெனச்சொல்லி வீரபத்திரரையனுப்பித்தார் அப்பொழுது வீரபத்திரனுல் ஆஞ்சனேயனுக்கு லிங்கதாரணமாகி நித்தியமும் அவன் அத்தியந்த பக்தியுக்தனுகி பரசிவனை ஸ்மரித்துக்கொண்டிருக்கவும் கான பிரியனுன பரசிவன் இவன் கானத்திற்கு மெச்சி மேலே கானம் செய்துக்கொண்டிருக்கவும், ஒரு நாள் அதிக நேரமாகியும் விடாமலிருக்கவும் உன் பூஜைக்குநேரமாகிறதென்று ஹநுமான் ஸ்வஸ்தானத்திற்குப்போய் சிவார்ச்சனைக்கு உட்கார்ந்துக் கொள்ளவும் அப்பொழுதவனிடமிருந்த லிங்கமானது மாயமாயிருந்தது. இது அப்பரமாத்மனுடைய மாயையேயல்லாமல் வேறு எக்காரணமுமல்ல

சிவேகிருத்தே குருஸ்த்ராதா குரௌ கிருத்தேன கச்சன.

அரன்கோபித்தால் குரு, ரக்ஷகன்,, குரு, கோபித்தால் ரக்ஷகரில்லை,, என்பதைச் சம்பூர்ணமாகத் தெரிந்த ஹநுமான் தன் குருவாயனுன ஸ்ரீவீரபத்திரனை ஸ்மரணை செய்து மாயமாயிருந்த லிங்கத்தை மறுபடியும் அடைந்து போஜனுதிகளை முடித்தானென புராணக்கதைகளுண்டு. இக்கதல்லவா ஏகேஸ்வர பக்தி. பூர்வத்திலிருந்த ஹிரண்ய கசிபுவினுடைய மகனுன பிரஹலாதனின் பக்திக்காக தூணில் நரசிம்ஹன் அவதரித்தான் எங்கள் விஷ்ணு மூர்த்தி தூணிலவதரித்ததைப்போல உங்கள் சங்கரன் எவ்விடமிருக்கிருன் காட்டுங்களெனச் சில வைஷ்ணவர்கள் வாதித்தார்களாம். அதற்கு சிவபக்தர்கள் ஒரு கொடியிலுள்ள காய்களில் அநேகானேக பஞ்ச சூஸ்த்திரத்திற்கும் சரியாக உள்ள லிங்கங்களைக் காண்பித்து எங்கள சிவன் இப்போதும் அணு ரேணு திருண காஷ்டங்களிலுங்கூட சம்பூர்ண பரிதனுயிருக்கிருனென்பதற்கு இக்கொடியே சாக்ஷி எனச் சொன்னுர்கள். அக்கொடியானது எல்லா விடங்களிலுமிருக்கிறது. தற்காலமும் அக்கொடிகளின்

✳ பத்ம புராணம் ராகவாம்க காவியத்திலும் இவ்விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும், பல்லாரி ஜில்லாவில் பம்பா க்ஷேத்திரத்தில் வீரபத்திரன் ஹநுமானுக்கு லிங்கதாரணம் செய்வித்த சிலா சித்திரமும், (கல்லால் செய்த உருவச்சிலையும்) மற்றுமவ்விடமே வீரபத்திரர் கோவிலுக்கெதிரில் ஹநுமான் கோவிலும் பிரத்தியக்ஷமாக தற்காலமும், இருந்து வருகிறது. பூஜாதிகளும் நடைபெற்று வருகின்றன.

காய்களில் லிங்காகாரமான விதைகளிருப்பது பிரத்தியக்ஷமாயி ருக்கிறது. அதின் காய்கள் பிருதிவீயாகாயத்தைப்போல கோலா கிருதியாயிருக்கிறது. இக்கொடியை மஹா லிங்கக்கொடி, என் பார்கள். சமஸ்கிருதபாஷையில் லிங்கவல்லி, என்பார்கள், நாக லிங்க புஷ்பமும் கூட நாகபடத்தின் கீழ் லிங்காகாரமாகவே இருக் கிறது. பிறதியொரு ஜாதியின் மனிதனும் சஸ்திராஞ்ஜலி பக்த னாக உட்கார்ந்தால் கேவலம் லிங்காகாரமாகவே காணப்படுவான். ஆகையாலிச் ஜெகத்திற்கு மூலகாரண பூதனான லிங்காகாரமான சிவனொருவனேயல்லாமல் வேறொருவருமில்லை. கேசவனைவிட அதிகமானவர்யாருமில்லை. எனச்சொன்ன வியாசமுனிவர் தன் தோளை ஸ்தம்பனம் செய்துக்கொண்டு பிறகு கிரிஜாரமணனுடைய சரண ஸ்மரணையினாலேயே அக்கையை யடைந்தான். விஷ்ணு சங்கரனை ஸ்மரணை செய்து சுதர்சன சக்கரத்தையும் சாங்த்துரு வென்னும் புத்திரனையும் அடைந்தான். லட்சுமியானவள் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களாலர்ச்சிக்கும்போது ஒரு புஷ்பமில்லாதிரு க்கவும் விரதபங்கமாகு மென்றறிந்து குசத்தை (முலையை) யறு த்து பரமாத்மனுக்கு தரிப்பிக்கவும் அவர் சந்துஷ்டனாகி உன் பூஜைக்கு மெச்சி அதின் ஸ்மரணார்த்தமாகப் பூலோகத்தில் வில்வ விருக்ஷத்தையுற்பத்தி செய்து அவ்விருக்ஷத்திற்கு "ஸ்ரீவிருக்ஷ', மென்னும் நாமகரணம் செய்தாரென, பில்வோப நிஷத்தில் சொல் லியிருக்கிறது. விஸ்வாமித்திரனானவன் சிவதியானத்தினால் மறு படியும் சிருஷ்டிக்கச் சமர்த்தனானான். வசிஷ்ட, கண்வ, ததீசி, பராசரர், சாநந்தர், ஜனகன் ஜனத் குமாரன் கௌதமன் முதலான ரிஷிபுங்கவர்களெல்லாம் பரம சிவபக்தர்கள். ராவணன் பரசிவ தியானத்தினால்அஷ்டதிக்குப் பாலகர்களையே வீட்டின்காவற்கார ர்களாகவும் சூரிய சந்திரர்களை விளக்குகளாகவும், வாயுதேவனை வீட்டின் குப்பை கூழங்களை சுத்திகரிப்பவனாகவும் செய்து அஷ் டைஸ்வரியத்தையும்அடையவில்லையா? கும்பகர்ணன் வரத்தைக் கேட்கும்போது வித்தியாசமானாலும் மஹா பராக்கிரமியாயிருக்க வில்லையா. பரம வைஷ்ணவனான விபீஷணன் சர்வ தத்துவத் தையுமறிந்து அண்ணனான ராவணனுடைய ஆக்ஞையின் காரண மாக மூன்றுகோடி சிவலிங்கத்தை ஏககாலத்திலேயே மஹா மஹிமை சாலியான ஸ்ரீஜகத்குரு ரேணுகாசார்ய பகவத் பாதரி னால் ஸ்தாபிக்கவில்லையா? நளன், நீலன், ஜாம்பவந்தன், சுக்ரீவன். வாலி. இத்தியாதி கபிபுங்கவர்கள் பரசிவ பக்தர்களென்பதற்கு புதப்பேட்டை மலையின் மீதுள்ளதும் ஜாம்புவனால் ஸ்தாபித மானதுமான "ஜம்புலிங்கமே" பலமான சாக்ஷியல்லவா? மற்றும் ஹம்பியில் எப்பொழுதும் நளன், சுக்ரீவாதிகள் ஸ்ரீ விரூபாக்ஷேஸ் வரமூர்த்தியை பூஜித்துக்கொண்டிருந்தார்களென்பது விசேஷ சாக்ஷியாகும்.

ஹம்பெயில் எவ்விடங்களில் பார்த்தாலும் சிவலிங்க ங்களை கண்ணிற்குக் காணுமல்லாமல் மற்றுமெத்தனையோ

முனிபுங்கவர்கள் ஆஸ்ரமமும் செய்துக்கொண்டு அவ்விடமிருந்து விரூபாக்ஷேஸ்வரனைப் பூஜித்து முக்தர்களானார்களென்பது இப்போதும் அவ்விடத்தைப் பார்த்தவர்களுக்கு பக்தியை யுண்டாக்காமலிருப்பதில்லை. இப்படிப்பட்ட சிவக்ஷேத்திரத்தில் விட்டலராயனுடைய மூர்த்தி யொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென பண்டரீபுரத்திலிருந்து வந்த ஒரு வைஷ்ணவ கனவான் பிரயத்தினம் செய்வதை யறிந்து ஸ்ரீவிரூபாக்ஷேஸ்வரன் யோகி வேடத்துடன் அவன் சுவற்பனத்தில்போய் இது சிவக்ஷேத்திரம் இவ்விடத்தில் இதர தேவதைகள் பூஜ்யராகார்கள். ஆனதினால் இந்தக்காரியத்தைக்கைக்கொள்ளக்கூடா தெனச்சொல்லியும் தூரபிமான துர்விரக்தனான அவன் மற்று மதிகமாகப் பிரயத்தினம் செய்வித்து விட்டலராயனுடைய மூர்த்தியை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரூபாக்ஷேஸ்வரன் கோயிலைவிட உன்னதமான கோயிலைக்கட்ட வேண்டுமென அதி ரமணீயமானஆலயத்தைக் கட்டிமுடித்து மூர்த்தி ஸ்தாபனத்திற்கு முகூர்த்தத்தை தேடவும் உத்தம முகூர்த்தம் கிடைத்தாலும் ஸ்தாபித்தவனுடைய வம்சமே நஷ்டமாக வேண்டுமென்றிருக்கவும் மறுபடியும் விரூபாக்ஷேஸ்வரனுக்கு ருத்திராபிஷேகாதிகளால் பூஜித்து என் அபராதத்தை மன்னித்து யோக்கியமான முகூர்த்தத்தை ஆக்ஞாபித்தால்கைங்கர்ய பாவனையுடன் அம்மூர்த்தியை ஸ்தாபிக்கிறேன். இல்லாவிட்டால் இல்லையெனச்சொல் லென்று நினைத்துப் படுக்கவும் சுவர்ப்பனத்தில் உன் இச்சாநுசாரமாக முகூர்த்தத்தைச் சொல்லுகிறேன். அம்மூர்த்தியை ஆறு மணி காலத்திற்குள்ளாக இவ்விடம் கொண்டு வந்து ஸ்தாபிக்கவேணும் 6-மணியான பிறகு ஸ்தாபித்தால் உன் வம்சமே உலோபமாகிறதென ஆக்ஞாபித்தார். அதுமாதிரி இவன் ஜகத்திலுள்ள வைஷ்ணவர்களை யெல்லாமழைத்து பண்டரீபுரமிருந்து ஹம்பெ கிராமம் வரைக்கும் நான்கு நான்கு அடிக்கொருவராக நிறுத்தி பிராதக்காலம் 6-மணிக்குச் சரியாக பண்டரீபுரத்தில் மூர்த்தியை எடுத்து ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொண்டு துங்கபத்திரா நதி தடாகத்தின்மீது வரவும், 5-மணிகளாயிற்று. நதியின் அக்கரையில் கோவிலிருக்கிறது. இன்னு மெந்த பயமுமில்லை. நாம் கைகொண்ட காரியம் நிறைவேறிற்று என அச்சனங்களின் கர்விஷ்டனாகிப் பேசத்துடங்கினார்கள். ஈஸ்வரேச்சா கரீயசி,, என்பதைப்போல அம்மூர்த்தியை நதியின் மத்திய பாகத்திற்குக்கொண்டு வருவதற்குள் 6-மணியாயிற்று. அப்போது அனைவரும்பசுஷாதாபப்பட்டு அம் மூர்த்தியைஅந்நதியிலேயே போட்டுவிட்டார்களாம். இப்போதும், அவ்விடம் விட்டலராயனுடைய ஆலயத்தில் மூர்த்தியே இல்லாமலிருக்கிறது. சிவனுடைய மஹிமையின் முன்பு இதர மஹிமை நடைபெறுமா. "கர்தும கர்த்து மன்யதா கர்த்தும்" சமர்த்தனான ஈஸ்வரனைவிட்டு இதரரின் பிரதிக்ஞை நடைபெறுமா ?.

# ஸ்ரீ கேதாரநாத மஹா தேவாலயம்.

சாலியவாஹன-ஸஹ 1957-வது சைத்திர கிருஷ்ண 11-ம் திதிக்குச் சரியான 29—4—35-வது திங்கட்கிழமை பிராதக் (விடியற்) காலம் விருஷபலக்கினயுக்தமான பவுத்திர முஹூர்த்தத்தில் புராதன வழக்கத்தை யநுசரித்து கபாடோத்காடன (கதவுதிறக்கும்) உற்சவம் விமரிசையாக நடைபெறும்.

இந்தக்கேதார நாதனுடைய யாத்திரைக்கு ஸ்ரீடிஹரி தர்பார் மஹா ராஜரின் புரோஹிதர்களும் ஸ்ரீகேதார ஜகத்குரு மஹா சம்ஸ்தானத்து புரோகிதர்களும், அர்ச்சகர்களும் அநேக மாஹேஸ்வரர்களும் கவர்ன்மெண்ட் அதிகாரிகளும்ஸ்ரீகேதாரநாத சேவாமண்டலியவர்களும், ஓகீமடத்தின் மஹா சமஸ்தானத்திலிருந்து 24—4—35-ல் பிரயாணம் செய்வார்கள். ஸ்ரீகேதார நாத ஜோதிர் லிங்கத்தின் மஹா பூஜையானது ஷெ முஹூர்த்தத்தில் ஆரம்பமாகி கார்த்தீக சுத்த 2-தேதி வரைக்கும் நடைபெறும். "ஹிமாலயேது கேதாரம்" என்பதால் ஹிமாலயத்தில் கேதாரநாத ஜோதிர் லிங்கம் சோபித்துக் கொண்டிருக்குமென்பது சமஸ்த ஜனங்களுக்கும் தெரிந்ததேயாயிற்று. இம்மஹாலிங்கத்தின் புராதன இதிகாசமானது. வேதவியாச பிரணீத, சகல புராண இதிகாசங்களினுலும், கண்டாகோஷமாகச் சொல்லி இருக்கின்றது. இச்ஜோதிர் லிங்கமானது நான்கு யுகங்களிலும், ராஜாதிராஜர்களும், மஹரிஷிகளும், பூஜித்துக்கொண்டு வந்திருக்கிறுர்கள். இந்த யுகத்தில் சகரவ வமிசத்து சக்கிரவர்த்தியான மாந்தாத்ரு, பிரபிருதி மஹாராஜரும், நளபிரபிருதி சக்கிரவர்த்தியும், உஷாபிரபிருதி ராஜ மஹாராஜரும், உபன்யு பிரபிருதி மஹரிஷிகளும் பூஜித்து சிவ சாம்ராஜ்யத்தை யடைந்து தன்னிய (தீவினை நீங்கினேு) ராஞர்கள் துவாபரயுகத்தில் வேதவியாச முனிவர், ஸ்காந்த புராணம், கோதாரகாண்டத்தில், இச்ஜோதிர் லிங்கத்தின் எல்லா சாகோப சாசெயின் சர்வ க்ஷேத்திரங்களின் மஹிமையும், சொல்லியிருக்கிறுர். இம்மஹாபுராணமானது "பம்பாய்" வெங்கடேஸ்வர முத்திராலயத்தின் அதிபதிகள் ஹிந்தி வியாக்யானத்துடன் இப்புராணத்தை அச்சிட்டிருக்கிறுர். இக்கோதார பீடத்தின், 22, மடம் கோவில்களில் முக்கியமான சில சித்திர (உருவ) ங்களை, மைசூர் ராஜதானியிலுள்ள ஸ்ரீ பஞ்சாசார்ய "அச்சாபீசார்" பிளாக், (உருவம்) செய்து அச்சிட்டிருக்கிறுர்கள். இக்கேதாரநாதன் கோவிலானது பனி மஹா பர்வதத்தின் சிகரபாகத்தில் நிர்மிதமாயிருப்பதுமல்லாமல், கங்கா, மந்தாகினி, க்ஷீரகங்கா மது கங்கா, இவைகளின் சங்கமத்தில் நிர்மிதமாய் இருக்கின்றது. கோவிலின் கோபுரமானது தெற்குமுகமாகயிருக்கிறது. மஹா கோபுரத்தில் ஆராச்சி மணி இருக்கிறது. இதின் சப்தமா (ஓசையா)னது ஆறு மைல்கள் வரைக்கும்கேட்கின்றன. இது நேபாள மஹாராஜரால் செய்து வைக்கப்பட்டவையாகும். கோயிலின் முன் கட்டிடத்தில் பிருஹதாகிருதிய நந்தி மூர்த்தி இருக்கிறது. இது அதிசயமான புராதன மூர்த்தியாயிருக்கின்றது. இம்மூர்த்தியின் முன்பாகவே இவ்வருடம்நேபாள சர்காரார் மற்றெரு பெரிய ஆராச்சிமணி ஆலத்தைக் கட்டியிருக்கிறுர்கள். இக்கோவிலின்

நான்குபுறங்களிலும், பிரகாரங்கள் நூதனமாகக் கட்ட ஆரம்பம் செய்திருக்கிறார்கள். இக்கேதார நாதனுடைய ஜோதிர் லிங்கத்தின் கர்ப்பக்கிரஹமானது 4—ஆயிர வருடங்களுக்கு முந்தினதென்னும் ஐதீகமிருக்கிறது. டிஹரி ராஜ்யத்தின் வஜீரபண்டித ஹரி கிருஷ்ண தோடிசாஹேபு,, கடவாலா இதிகாச மென்னும் கிரந்தத்தில், ஸ்ரீகேதாரநாதன் கோவிலும் மற்றும் ஸ்ரீ கேதார பீடத்தின் ஆசார்யரான, பூகுண்ட சிவாசார்யருடைய காலநிர்ணயத்தை, சுர், ரமேச சந்திரருடைய கிரந்தா தாரத்தினாலும், ஸ்ரீகேதார பீடத்தின் சாசனங்களினாலும், பாரத யுத்தமான பிறகு பாண்டவர்களின் ஸ்வர்க்கா ரோஹன காலத்திலிருக்கவேண்டுமென பதிப்பித்திருக்கிறார்கள். பாண்டவர்கள் மறுபடியும் தேசத்தை சம்பாதித்து அபிமன்யுவினுடைய பௌத்திரனுக்கு ராஜ்ஜியத்தை ஒப்புவித்து கேதாரஹத்யா தோஷ நிவிர்த்திக்காக வியாசமஹ ரிஷிகளின் உபதேசாநுசாரமாக மஹா பிரஸ்தானத்தைச் செய்தார்களென்று கேதாரகாண்டபுராணம் போதிக்கின்றது, இக்கலியுகத்தின் சரித்திர மென்னவெனில் சிவாம்ச சம்பூதனான பீமனானவன் பாத்ரு பந்துக்களுடன் சுவர்க்காரோஹண பதத்திற்கு காமியா (இச்சித்தவனா)கி சுவர்க்ககங்கையின் (சோனகங்காவின்) சமீபத்தில்,. பார்வதீபதிய,, வனமஹிஷாகிருதியினால் மார்க்கதர்சகனாகி (வழிபார்த்துக் கொண்டே) பர்வதங்க (மலைக)ளின் ஒழுங்கு வரியாக தாண்டிநடந்தான். பிறகு பீமனானவன் அவனுடைய மஹிஷாகிருதி மூர்த்தியை யநுசரித்து நடந்தான். இம்மாதிரியாக கடைசியில் மந்தாகினீ கங்கையின் சுவர்க்க கங்கையின் உகமஸ்தானத்தில் பின் தொடரும் பீமனை வஞ்சித்து பூகர்ப்ப சாயவாய்க்கொண்டிருக்கும் பார்வதீ பதியைப் பீமன் பக்தியுடன் அநுசரித்து பிருஷ்டபாகத்தில் கதையினால் ஸ்பர்சனம் செய்து (பின் பக்கம் தண்டாயுதத்தாலுணர்ச்சியுண்டாக்கி) யுதிஷ்டிராதி பந்துக்களை பக்தி யுத்ரிக்த உச்சஸ்வரத்தினால், ஆஹ்வானித்து பாருங்கள்,, ஈசனே கேதாரநாதன்,, எனக்காண்பித்தான். அப்பொழுது சர்வ பந்துக்களும் பகவானைத் தெரிசித்து சம்ஸ்பர்சனம் செய்து கோத்ர ஹத்யா தோஷத்தினால் விமுக்தர்களா(முக்திக்குரியோரா) னார்கள். இவ்விடத்தி லனேக நாட்கள் வாசம் செய்து தற்போதுள்ள ஸ்ரீகேதாரநாதனுடைய கர்ப்பக்கிரஹத்தை நிர்மித்தார்கள். இப்பிருஷ்டபாக(இந்தப்பின்பக்க)மே கேதாரநாத னென்றும் முகபாக (முன் பக்க)மே,, பசுபதிநாத,, னென்றும் கிரமமாக கேதார நேபாளங்களில் உபய (இரு) லிங்கங்கள் பிரசித்தமாயிருக்கின்றது. இச்சரித்திரமானது உலகத்திற்செல்லாம் தெரிந்தாயிருக்கின்றது, இக்கேதாரத்தின்மஹத்துவமானது,

கேதாரோ தகம் பீத்வா புனர் ஜன்ம நவித்யதே

என்று வியாசமஹ ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது. இக்கேதார மஹா யாத்திரையானது முன்பு அதிகடினமாயிருந்தது. இப்போது அதிசுலபமானதாயிருக்கிறது. ஸ்ரீகேதாரநாதனுடைய தேவாலயமானது ஹாத்துவாரம் ரைல்வே ஸ்டேஷனிலிருந்து 149, மைல் இருக்கின்றது. ஹாத்துவார மிருந்து, 58, மைல் வரைக்கும் நூதனமாக மோடார்சர்வீஸ், தேவப்

பிரயாகை, என்னும், பாகீரதி, அலகநந்தா நதி, சங்கமமுள்ள இடம் வரையில் நடைபெறுகின்றது, இச்சர்விசை டிஹரி சர்க்காரார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தேவப்பிரயாகையிலிருந்து ஸ்ரீநகரமென்னும் பட்டணமிருக்கிறது. இவ்விடமிருந்து மந்தாகினீ, அலக நந்தாநதி சங்கம ஸ்தலமான, ருத்திர பிரயாகை, என்னும் தீர்த்தமிருக்கிறது. இதின் சமீபத்தில் கோசர மென்னுமிடத்திற்கு சென்ற வருடமிருந்து பதரீ நாராயணத்தின் யாத்ரீகளுக்காக ஆகாயவிமானம் வந்துக்கொண்டிருக்கின்றன. இவ்வருடம் தெஹலியிலிருந்து ஸ்ரீகேதாரநாத ஜோதிர்லிங்கத்தின் மஹா யாத்திரார்த்திகளுக்காக, அகஸ்தியமுனி என்னுமிடம் வரையில் விமானம் வரத்தகுந்த நூதன ஏர்ப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அகஸ்தியமுனியிலிருந்துகுப்தகாசி, ஓகிமடங்கள், 12-மைல்களிருக்கின்றன. இவ்வருடம் கேதார பீடத்தின் சார்பாக மூவர்தர்மோபதேசகர்கள், குப்தகாசீ, ஓகீமடம் முதலான விடங்களிலிருப்பார்கள், இவ்விடங்களில் ஔஷதாலயங்களுமிருக்கின்றன. மற்றும் கேதாரநாதனுடைய சேவாமண்டலியின் சுயம் சேவகர்கள். சமஸ்தானத்திலிருந்து அவ்வவ்விடங்களில் யாத்ரீகர்களின் சுக துக்கங்களை விசாரணைச் செய்வார்கள். மற்றும்கேதாரநாதத்தில் தபாலாபீசும் இருக்கின்றது, ருத்திர பிரயாகையில் டெலிகிராப் ஆபீசும், இருக்கிறது. குப்தகாசியில் டெலிபோன் ஆபீஸ் ஏர்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வழியில் போலீஸ் இன்ஸ்பெக்டர், ஹெல்த் ஆபீசர், சிவில் சர்ஜ்ஜன்களின் பங்களாக்களும், பாபாகாலீகமலியவரின் அன்னசத்திரங்களும், தர்மசாலைகளும். இருக்கின்றன. அவ்வவ்விடங்களில் ஜலக்குழாய்களும், தங்குவதற்கு வீடுகளும், கடைகளுமிருக்கின்றன. பால் நெய் முதலான ஆகார சாமான்களும், பாத்திரங்களும், கிடைக்கும். கூலிக்காரர்களும், குதிரைகளும், பல்லக்குகளும், கிடைக்கும். சௌதரி, என்னும் சர்க்கார் மனிதர்கள் பிரத்தியேக இடங்களில்கூலிக்காரர்களின் யோக்கியதாம்சத்தை விசாரிப்பார்கள், மற்றும் மஹத்துவசங்கதி யொன்று இவ்வருடம் தெரிய வந்திருப்பதென்னவெனில்இக்கேதாரநாதத்தில் கார்த்திகை சுக்கில 2-வ விதீயதிதியான பிறகு ஆறுமாதம் அவ்விடத்தில் நரர்கள் வாசம் செய்யும் வழக்கமில்லை ஆனாலுமிவ்வருடத்தி லிருவர்கள் அக்கிரஹாரத்தில் வாசம் செய்துக் கொண்டிருந்தார்கள். அந்த மாஹேஸ்வரரிலொருவன் தேவலோகத்திற்குப்போனான். மற்றொருவன் கௌரீக்ஷேத்திரத்திற்கு வந்து நின்று அதி யாச்சரியகரமான விஷயத்தைச் சொல்லுவதென்ன வெனில் வீட்டினுள் உட்கார்ந்துக் கொண்டிருந்தபோது கந்தருவர்களின் கானபூஜை பஜனைகள். மூன்று பிராகாரங்களிலும் நடந்ததைக்கேட்டுக் கொண்டிருந்து விட்டு வெளியில் வந்துப்பார்க்கஒருவரும்காணப்படவில்லை. ஆறு மாதம் தேவர்களாலும் ஆறு மாதம் மனிதர்களாலும் பூஜிக்கப்படும் கேதாரநாத மஹாஜோதிர் லிங்கத்தையும், மற்றும் பூஜாகாலத்தில் பரம்பரையாக சம்ரக்ஷிதமான அகண்டஸ்ரீஜோதிர்தீபத்தையும், எந்த பாரதியசநாதன பந்துக்கள் தரிசனம் செய்வார்களோ அவர்களேமோக்ஷ சாம்ராஜ்யத்தை யடையத்தக்கவர்கள்.

பூர்வகாலத்தில் பாண்டவர்களின் யுத்தத்தில் தாங்கள் செய்த கோஹத்தியாதி கோர பாவங்களின் நிவாரணார்த்தமாக ஸ்ரீவியாசமஹரிஷிகளின்உத்திரவு பிரகாரம், ஸ்ரீகேதாரேஸ்வரனைக் குறித்து தபசு செய்ததினால், பரமாத்மன் அவர்களுடைய பக்திக்கு மகிழ்ந்து பிரத்தியக்ஷனாகி ஆசிர்வதித்து கைலாயத்திற்குப் போகும் வழியைக்காண்பித்து அந்தர்த்தானமானார். அப் பாண்டவர்கள், பாதசாரிகளாக சுவர்க்கத்திற்குப்போன பாதஅடிகள் ஸ்பஷ்டமாக இன்றைய வரைக்கும் காணப்படுகிறது. அன்று முதலாக சநாதனதர்மாவலம்பிகள் தாம் செய்த சப்த ஜன்மங்களின் பாவம் நிவாரணார்த்தமாக அநேக கஷ்டங்களை யநுபவித்துக்கொண்டு ஹிமாசலத்தில் பிரகாசிக்கும் கேதாரேஸ்வரனுடைய தர்சனத்திற்காக வந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனதால் உத்தர (வட) கண்டம் மோக்ஷஸ்தானமென பிரசித்தமாயிருக்கிறது.

ஸ்காந்த புராணாந்தர்க்கத சூதசம்ஹிதை
யஜ்ஞவைபவகாண்டத்தின், 2-வது அத்தியாயம் 52-வது சுலோகம்,

மஹா தேவம் விநாயோமாம் பஜதே சிரத்தயா சஹ
நாஸ்திதஸ்ய விநிர்மோக்ஷ: சம்சாராஜ் ஜன்மகோடிபி:

மஹா தேவனை விட்டு யார் என்னைப் பக்தியுக்தனாகி பஜிப்பானோ அவன் கோடி ஜனன மெடுத்தாலும் அவனுக்கு இச் சம்சாரத்தினால் மோக்ஷமுண்டாகாது, (முக்தி கிடைக்காது) என விஷ்ணுவானவர் முமுக்ஷுவான சுதாமனுக்குப் போதித்திருக்கிறார், பிறகு அந்தச் சுதாமன் கேதாரேஸ்வரனுடைய ஸ்மரணையினால் மோக்ஷத்தை யடைந்தான்.

## மோக்ஷோபாயம்.

சாது மார்க்கம் பரித்யஜ்ய மார்க்காந்தர முபாசதே
தேசர்வே தப்த நரகே பதந்தி சததம் துருவம்
கிமஸ்தி பஹுநோக்தேன மானுஷம் ஜன்ம துர்லபம்
தத்ராபி துர்லபம் ஜன்ம குலே சைவஸ்ய கஸ்ய சித்
வீரசைவான் வயே ஜன்ம பரமம் துர்லபம் ஸ்மிருதம்
தத்ர ஜாதா நராஸ் சர்வே வீரசைவா நரோத்தமா:

எவர்கள் சாஸ்த்திர சித்தமா (உண்மையா)ன மார்க்கத்தை விட்டு தங்கள் தங்கள் மனதுக்கு வந்த மார்க்கங்களில் பிரவேசித்திருப்பார்களோ அவர்கள் தேஹாந்தியத்தில் நிச்சயமாக கோரமான நரகத்தில் விழுந்து கஷ்டப்படுவார்கள். அநேக வார்த்தைகளால் பிரயோஜனமில்லை. முக்கியமாக சகல ஜன்மங்களுக்குள் மனித ஜன்மத்தை யடைவதே கஷ்டமானது. அப்படிப்பட்ட மனித ஜன்மத்திற்குள் யாதாவதொரு சிவ மதத்தில் ஜன்மத்தைத்தரிப்பது, வெகு கஷ்டமானது. இப்படிப்பட்ட சிவ மதத்திற்குள் அதிசிரேஷ்டமான வீரசைவ (லிங்காயுத) மதத்தில் பிறப்பதாவதும் வெகு கஷ்டமானது வீரசைவ மதத்தில் பிறந்தமானவர்கள், பவித்ராத் (பரிசுத்தாத்) மாராயிருக்கிறார்கள். என வீரசைவ மதத்தின் உத்கிருஷ்டதை (மேன்மை) யை சிவாகமங்கள் தீர்க்கதொனியுடன் புகழ்ந்துக்கொண்டிருப்பதைப்பார்த்தால் வீரசைவ சித்தாந்தமானது முமுக்ஷுக்களான ஜீவாத்மருக்கு வெகு சுலபமாக மோக்ஷத்தைக் கொடுக்கும் மார்க்கமென்று

ஸ்பஷ்டமாகத்தெரிய வருகிறது. ஜீவாத்மன் பரமாத்மனுடைய அம்சபூதனுயிருந்தாலும் சூரியனையாவரித்து மலினகார முள்ள வனுச் செய்யும்மேகங்களைப்போல, ஆணவாதிமலங்கள் ஜீவாத்து மரையாவரித்து தன் பலங் குறைந்தவராச் செய்திருக்கிறது. எப்படி யென்றால் எவ்வளவு தூரம் வரையில் மேகங்கள் சூரியனை யாவரித்திருக்கின்றனவோ அது வரைக்கு முள்ள நாட்களை துர்த் தினங்களென ஜனங்கள் சொல்லிக் கொள்வதைப்போல எது வரைக்கும் ஆத்மர்களை மலங்கள் ஆவரித்திருக்கின்றனவோ அது வரைக்கும் சம்சாரி யெனச் சொல்லுவார்கள், "மலாவ்ருதஸ் சம் சாரீ" மலாவரணமுள்ள ஆத்மனே சம்சாரி புருடனெனப்படுவா னென சத்தி சூத்திரமுங்கூட சம்சாரி புருடனின் லக்ஷணத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது. வீரசைவ சித்தாந்தத்தின் படியாக மலங்கள் ஒருமாதிரியாயிராமல் மூன்று விதங்களாயிருக் கின்றன, ஒன்று ஆணவமலமெனவும், மற்றொன்று மாயாமல மெனவும், இன்னொன்று காமிகமல மெனவும் இவைகளுக்குப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மூன்று மலங்களும் ஆத்துமர்களை ஒன்றின்மேலென்றுசுற்றிக்கொண்டிருக்கிறது. முத லாவது மலம் அதிசூட்ம (வெகு நுட்ப) மானது, இரண்டாவது மலம் சூட்ம (நுட்ப) மானது, மூன்றாவது மலம் ஸ்தூல (உருவ) மானது, இம்மலங்களெது வரையில் ஆத்துமனையாவரித்துக் கொண்டிருக்குமோ அது வரைக்கும் ஆத்துமன் புண்ணிய பாவ க்ர்மானுகுணமாக நாநாயோனிகளில் ஜனன மெடுத்து விஷயங் களையநுபவித்து அல்குலென்னும் சக்கரத்திலகப்பட்ட உடலைப் போல கீழும் மேலும், (துக்க சுகங்களை) யநுபவித்துக்கொண்டி ருப்பதே அநாதி காலத்திலிருந்து வந்த ஜீவாத்மனுடைய சுபாவ மாகப் போயிருக்கிறது. இம்மலங்கள் நாசமடையும் வரைக்கும் ஜீவாத்மன் ஜரா (ஜனன) மரணங்களிலிருந்து விடுதலையடையும் படியாயில்லை, அரிசியானது எது வரையில் துஷ,கம்புக, கிம்சாரு கங்களென்னும் மூன்றுவிதமான புரை (தொலி) களுடன் கூடிக் கொண்டிருக்குமோ அது வரைக்கும் அவ்வரிசியில் முளைக்கும் சக்தி இருந்தே இருக்கிறது. இப்படிப்பட்ட அரிசியை பூமியில் விதைத்து ஜலம் விடுவதினல் முளை முளைக்கிறது, ஆகாதத்து (அடியு)டன் அரிசியின் மீதுள்ள மூன்று விதமான தொலிகளின் சக்தியானது என்று நாசமடையுமோ அன்றையதினம் வரைக் கும் அத்தானியத்திலுள்ள முளைக்கும் சக்தியானது நாசமாகிற தில்லை. ஆனதாலிம் மூன்று மலங்களும் ஆத்துமனை யாவரித்து (அணுகி) இருக்கும் வரைக்கும் ஜெனன நாசமானது ஜீவாத்மனு க்கு தப்புவதில்லை. இப்படி வெகு காலமாக அணுகியுள்ள பவ (ஜெனனமரணத்திற்குச்)சாதகங்களானமலங்கள்கடவுள் உபாசனை யினலேயே நஷ்டமாகவேண்டியிருக்கிறது இப்படிப்பட்ட கட வுளின் உபாசனையை வீரசைவ சித்தாந்தத்தில் சிவலிங்கோபா சனை யெனச் சொல்லுகிறார்கள், மானவனனவன் குருபதேசத் தைப் போலவே பக்தி, ஞான, வைராக்கியாதிகளுடன் கூடி எப் படி எப்படி சிவ லிங்கோபாசனையைச் செய்துக்கொண்டு வருவா னே அப்படி அப்படியே அம்மலங்கள் கிரம கிரமமாக நாசமாய்க்

கொண்டு வருகின்றது. காற்றினால் கலைக்க (நீக்க) ப்பட்ட மேகங்களுள்ள சூரியோபாதியிலும் மலங்களிலிருந்து விடப்பட்ட ஜீவாத்மனிடத்திலும்சர்வக்ஞத்வாதி சக்திகள் பிரகாசத்தையடைந்து பிரபஞ்ச துக்கங்களின் சேர்க்கையி (உலகத்துன்பக் கூட்டுற வி)ல்லாததாகும். கங்கா, கோதாவரி முதலான மஹா நதிகள் தங்கள் தங்களுடைய ஸ்தூலங்களான நாமரூபாதி வியவஹாரங்களை விட்டு கடலை (சமுத்திரத்தை)யடைந்து சமுத்திராகாரமாவதைப் போல அங்கசப்தவாச்சியனான ஜீவாத்துமன்(அடையாளமும் ஒலியும் நிந்தையுமுள்ள சிவனுடன் கூடியுள்ள ஆத்துமன்) திடமான சிவலிங்கோபாசனையினால் தன்னுடைய அங்க நிஷ்ட (சரீரப்பிரியவின்) குணங்களை நாசம் செய்துக் கொண்டு சிவஸ்வரூபனாவான்.

*யதா:த் யஸ்யம்த மானாஸ் சமுத்ரே அஸ்தம்*
*கச்சம்தி நாமரூபே விஹாய*
*ததா வித்வான் நாமரூபாத் விமுக்த:*
*பராத்பரம் புருஷ முபைதி திவ்யம்*

என்னும் உபனிஷத்திலும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவாத்மன் பரிசுத்தனாகிப் பரமாத்மனிடத்தில் சேர்ந்து நித்தியாநந்தத்தை யநுபவிக்கும் ஸ்திதியே லிங்காங்க சாமரஸ்யமென வீரசைவ சித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீரேணுகாசார்ய பகவத்பாதர் உபதேசித்திருக்கிறார். இப்படிப்பட்ட லிங்காங்க சாமரஸ்யரூபமான மோக்ஷத்தையடைய அநேக விதமான சுலப உபாயங்கள் இவ்வீரசைவ மதத்திலிருப்பதினாலும் இவ்வுபாயங்களை பிறகியொரு வீரசைவனும் தெரிந்து உபாசனாமார்க்கத்தில் பிரவேசித்து லிங்காங்க சாமரஸ்ய சித்திபை யடைய யோக்கியனாயிருப்பதினாலும் முமுக்ஷுக்களான மானவர்களுக்கு இவ்வீரசைவ சித்தாந்தமானது சுலபமான மார்க்கமாயிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகிறது. ஆனதினால்

*தத்ர ஜாதா நராசர்வே வீரசைவா நரோத்தமா:*

என்பதைப்போல வீரசைவ மதத்திலுதித்தவர்களுக்கு பரமபுருடார்த்தமான மோக்ஷத்தைச் சாதிக்கும் ஞானமானது சுலபசாத்தியமானதினால் வீரசைவ மதத்தில் ஜன்மதாரணம் செய்தவர்களை தீவினை நீங்கின ஆத்துமர்களென பிரமாணவாக்கியங்கள் உத்கோஷிக்கின்றன. இப்படிப்பட்ட பரிசுத்தமான வேதமானியமான லிங்காயுத மதத்தில் ஜனன மெடுத்திருந்தாலும் அநேகர்கள் தங்கள் மதத்தின் ஸ்வரூபஞானமில்லாதவர்களாகி சாஸ்திரீய உபாசனா மார்க்கத்தையும் முக்திசாதனமான சிவலிங்கத்தை யநுக்கிரகித்த குருக்களை நிராகரித்து தங்கள் தங்கள் மனதுக்கு வந்த மாதிரியாக நடந்துக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்களிம்மதத்தில் ஜனன மெடுக்காமலிருப்பதே உசிதமாயிருக்கிறது. ஆனதால் லிங்கதாரி யென்னும் பெயரையடைந்தவன் லிங்காயுத மதமூல குருக்களிடத்தும் மற்றும் சிவலிங்கத்தினிடத்தும் சிரத்தைவைத்து சாஸ்திரீயமான மார்க்கத்தில் பிரவேசித்து மலாவரணங்களிலிருந்து நிவிர்த்தர்களாகி வீரசைவ னென்னும் தங்கள் அபிதானப் பெயரைஅன்வர்த்தப்படுத்திக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறோம்.

# தத்துப் புத்ர ஸ்வீகார விதானம்.

வாதுளாகமத்தில் சிவபார்வதியின் சம்வாதத்தில் ஸ்ரீபார்வதி தேவி சங்கரனைக்குறித்து, ஹேபகவான், இதுவரைக்கும் உமம் மால், மதபேதம் சைவபேதம், வீரசைவ பிரசம்சா ஜாதக்கர்மாதி சம்ஸ்காரம், அஷ்டாவர்ண லக்ஷணம் பஞ்சாசார ஷடுஸ்தலம் வீரவிரதம் லிங்கதாரண மஹாத்மியம் சிவார்ச்சனுவிதி, மாஹே சதானப் ராசஸ்தயம் குலஸ்திரீகள் நடாவளி இத்யாதி யனேக விஷயங்களைச் சொன்னுலும்,, அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி,, என்பதா, கக்குழந்தை யில்லாதவருக்குக் கதியில்லை என்னும் வாக்கியத்தின் பரிகார உபாயம், சொல்லவில்லையே, என்று கேட்டதற்கு ஸ்ரீ சங்கரன், சொன்னதென்ன வென்றால், ஹேதேவி, பிராகிருத ஜீவர் கள் தேவருணம் ருஷிருணம் பித்ரு ருணம் என்னும் ருணத்ரயங் களினுல் பத்தரா யிருக்கிறார்கள், அதற்காக யாகங்களை யா சரித்து, தேவதைகளினதும், தர்ப்பணத்தினுல் பிதுர்க்களை தும் ருஷிகளின், சிஷ்ருஷையால் ரிஷிகளதும், சந்தானேற்பத் தியினுல் இம்மூன்று ருணங்களைத்தீர்க்க வேண்டியதாகின்றன. தவிர அப்ராகிருத, ஜீவர்கள் சரமசரீகளான, (கடைசி ஜென் மத்தவர்களான) வீரசைவ (லிங்காயுத)ருக்கு ருணத்ரயங்களில்லை வே, யில்லை தேஹம் வர்ஜ்ஜித்த உடனே சாயுஜ்ய பதப் பிராப்தி யாகிறது, இவர்கள் மோக்ஷத்திற்குக் குழந்தையில்லா திருப்பவரு க்கு எவ்விதமான, நிர்ப்பந்தமும், உண்டாக்காது, இவர்களுக்கு ஈஸ்வரனே பித்ரு, சதாசிவனே பிதாமஹன்,சிவனே பிரபிதாமஹன் ஆனதினுல் பிதுருக்களைக் குறித்துச்செய்யும், சிரார்த்தாதி கர்மங் கள், சஹிதம் இவர்களுக்கில்லை, ஆனுலும் பிரதி வருஷம், ஈஸ்வர பிரீதிக்காக கணராதனை மாத்திரம் ஆசரிக்கலாம், சந்ததியில்லா ததினுல் வம்சபாரம் பர்யமாக நடந்து வந்த குருஜங்கமரைப் போல, என் பூஜைகளும், நின்றுவிடு மென்னும். சமுசயமுள்ள பக்த மாஹேஸ்வரர் மாத்திரம் ஸ்வகோத்திரத்தில். நல்ல லக்ஷண யுக்தனுன பாலகனை சம்க்ரஹித்து விதானேக்தமாய்ப் புத்திரனை, ஸ்வீகரித்ததினுல், சம்சய பரிஹாரமாகிறது, என்று சொன்ன சிவன் வாக்கியத்தைக் கேட்டு சங்கரி மறுபடியும், கேட்டதாவது இந்தப்புத்திர ஸ்வீகாரவிதானம் எப்படி பாலகன் எத்தனைவயது டையவனுயிருக்க வேண்டியது எம் மந்திரங்களைச் சொல்ல வே ண்டியது, இவ்விஷயங்களைச் சொல்லவேண்டு மென்றுக் கேட்க வும், ஸ்ரீசிவன் சாத்தியமாகச் சொல்கிறார், இவ்விதானம், கீழே சொல்லியிருக்கிறது, இதைப் போலவே புத்ர ஸ்வீகார கர்மம் ஆசரிக்கத்தக்கது, வெகு ஜனங்கள் விதிவிதானங்களைத் தெரியா மலோ மற்றெந்தக்காரணத்தாலோ, மனதுக்கு வந்தமாதிரிச் செ ய்து, "யத்வாதத்வா" அல்லது (யத்பாவம் தத்பாவம்) (லிங்கவ

ம்சம்) வீரசைவ (லிங்காயுத) மதம் அவைதிகமென்னும், கெட்ட பிருதை அல்லது விரதத்தைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அவைதிகமென்று சொன்ன மாத்திரமே, வேதாகம, உபநிஷத் இதிகாசங்களில் பிரசித்தமான, வீரசைவ மதம் அவைதிகமாக மாட்டாது, ஆனாலும் இக்கெட்ட பெயரினால், லௌகிக வியவஹார கார்யங்களில் விசேஷ தொந்தரவுகளுண்டாய்க்கொண்டிரு க்கும், ஆகையால் இனிமேலாவதும், ஸ்வயேச்சை ஆசாரம், செய் யாது, சாஸ்த்ரோக்தமான ஆசார நடவடிக்கைகளையே ஆசரிக் கத்தக்கது,

## தத்து ஸ்வீகார விதி,

தத்துப் புத்திரனை ஸ்வீகரிக்கும், யஜமானன், சிவபூஜாதி நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு சுபாசனத்திலமர்ந்து, ஆச மனம் பிராணாயாமங்களைச் செய்து, தேசகாலாதிகளைச் சொல்லி,

## (1) சங்கல்பம்.

ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாமஸ்யாம் சுபதினௌ
அஸ்மாகம், சம்தத்ய விச்சேதன மதிய வம்சே, கரிஷ்யமாண:
சிவதர்மானுஷ்டான த்வாரா சிவப்ரசாத, சம்பாதனார்த்தம்
மமவம்சே கரிஷ்யமாண: சிவதர்மா நுஷ்டானத் வாரா
சிவப்ரசாத சம்பாத நார்த்தம், மமவம்சே ஸ்ரீகுருலிங்க
ஜங்கமாரா தநாபி வ்ருத் யர்த்தம், புனரா வ்ர்த்திரஹித
சாஸ்வத சிவைக்யரூப சிவபதப்ராதி யர்த்தம்ச விசேஷண
‡ ( ) கோத்ராத்பன்னஸ்ய ( )
நாம்ந:, வம்செ இதிலேசதி மதிய வம்சாபி வ்ர்த்யர்த்தம்
சகோத்ரோத் பன்னம் அஸ்மதாசார பிரவிஸ்டம் குலீனம்
ரூபவம்தம் பஞ்சவார்ஷிகம் கம்சன மாணவகம்
புத்ரத்வேன, ஸ்வீகுர்மஹே

என்று சங்கல்பம், சொல்லி சர்வபூஜா விதியில் சொன்ன பிர காரம், கணபதிபூஜா ஸ்வஸ்தி புண்யா வாசனம் நாம்தி சமாரா தனம், இவைகளைச்செய்து, தத்து வாங்கிக்கொள்ளவேண்டியது தத்து கொடுப்பவன் புத்திரனை அக்ஷதைசமேதமாக கையில் பிடி த்துக் கொண்டு எழுந்து நின்றுச் சொல்லும், மந்திரமாவது

## (2) மந்திரம்.

கிலவம் சோஸ்மி மஹேசா மமவம் சாபிவ் ருத்தயே
அங்ஞாம் ததவ்ரெ சீக்கிரம், ஸ்வீகர்த்தும், புத்திரகர்மணி

என்று சொல்லி மாஹேஸ்வரர் மீது அக்ஷதாரோ பணம் செய்து தக்ஷிணை தாம்பூலங்களைக் கொடுத்து, உத்தரவுபெற்றுக் கொண்டு குமாரனைக் கொடுப்பவன் ஆசமனம் பிராணாயாமங்க ளைச்செய்து, தேசகாலாதிகளைச் சொல்லி,

‡ (கோத்ரம்) (பெயர்) இவைகளைச்சொல்லவும்.

## (3) சங்கல்பம்

ஏவம் குணவிசேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் சுபதினௌபவத:
அபுத்ரத்வேனயோ தோஷஸ்ய மஜனிதத்தோஷ பரிஹாரார்த்தம்
தவவம்சாபி விருத்யர்த்தம்ச, அஷ்மத் பித்ரூணாம் சாஸ்வத
சிவலோகப் ராப்த் யர்த்தம், மத்புத்ரம் அத்யபக்த
மாஹேஸ்வர சன்னி தௌ தாஸ்வாமி

என்று சங்கல்பம் சொல்லி மங்கள ஸ்நானம் செய்வித்து வஸ்திராபரணங்களாலா லங்கரித்தகுழந்தையை தன் துடைமீதுக்கார வைத்து சிசுவின் இரண்டு கைகளையும், பிடித்துக்கொண்டு,

## (4) புத்ர தான மந்திரம்.

மமபுத்ரம், ப்பரதாஸ்யாமி தவவம்சாபி வ்ருத்தயே
புத்ரதானேன, சர்வேஷாம் பித்ரூணா மக்ஷயோ பவேத்
அநேன தவவம் சோபி ஏததெ சத்வரம் புவிபுத்ரம்,
ப்ரக் ருஹ்யத்வம் சீக்ரம் சாஸ்வதம் கீர்த்தி மாப்நுஹி

என்னும் மந்திரத்தைச் சொல்லி புத்திரதானம் செய்வேனென்றுச்சொல்ல

## (5) வாங்கிக் கொள்பவன் சொல்லு மந்திரம்.

புத்ர பிக்ஷாம் ததஸ்வ சு மமவம்சாபி விருத்தயே
புத்ர தானேன தேபீஷ்டம் சத்வரம் பவதித்ருவம்

என்று யாசித்துப் பிறகு

தேவஸ் யத்வாசவிது: ப்ரசவெ அஸ்விநோர் பாஹுப்யாம்
பூஷ்ணோஹஸ் தாப்யாம் ப்ரதிக் ருஹ்ணாமி

என்று மந்திரம் சொல்லி பரிகிக்கிரக்கிறேனென்று சொல்ல வேண்டியது பிறகு,

## (6) கொடுப்பவன் சொல்லு மந்திரம்.

ராஜாத்வா வருணோ நயது தேவி தக்ஷிணெக்னயெ ஹிரண்யம்
தேநாமிர்தத்வ மஸ்யாம் வயோதாத்ரெ வயோமஹ்ய மஸ்து,
ப்ரதிக் ருஹித்ரெக இதம் கஸ்மா அதாத்காம: காமாய
காமோ தாதா காம: ப்ரதி க்ருஹீதா காமாகாம் சமுத்ர
மாவிசா காமேனத்வா ப்ரதிக்ருஹ்ணாமி காமைதத்தேஷாதெ
காம தக்ஷிணா உத்தானஸ் த்வாம் கீரச ப்ரதிக்ருஹ்ணாது

என்று சொல்லிப் புத்திரனைக் கொடுக்கவேண்டியது, பிறகு புத்திரனை பரிக்கிரகித்து, புத்திரனின் மஸ்தகத்தை (3) தடவை ஆக்ராணித்து, தத்தம் செய்யவேண்டியது, எப்படி என்றால் தேசகாலாதிகளைச் சொல்லி

## (7) சங்கல்பம்.

ஏவம் குணேத்யாதி சுபதிதௌ அஸ்மின் புத்ரஸ்வீகார
கர்மணி தத்த: வநாக்யம் கர்ம்ம கர்த்தும்,
ஆசார்யத்வேனத்வாம் வ்ருணீ மஹெ

என சங்கல்பம் சொல்லி ஒரு மாஹேஸ்வரனை ஆசார்யனாக வரிப்பது, மாஹேஸ்வரன்,, வ்ருதோஸ்மி கரிஷ்யாமி,, என்றுசொல்ல வேண்டியது, பிறகு ஓமப் பிரகரணத்தில் சொன்னமாதிரி சங்கல்பத்தில்மாத்திரம் "தத்தஹவன" என்றுச்சரித்துக் கொண்டிருக்கவேண்டியது, ஹோமம் செய்யவேண்டியது. ஹோமம் செய்த ஆசார்யருக்கு அலங்காரசஹிதமான வ்ருஷபத்தைத்தானமாகக் கொடுக்கவேண்டியது, பிறகு பலபூஜை செய்வதற்காகத் தேங்காய் பழம் முதலானவைகளைவைத்து தேசகாலாதிகளைச் சொல்லிப் பிறகு

## (8) பலபூஜா சங்கல்பம்.

ஏவம் குண விசேஷண விலிஷ்டாயாம் அஸ்யாம் சுபதி தௌ
சுத்தி வ்ருத்யப் யுதய சித்தித்வாரா பலதேவதாம்தர்வர்த்தி
ஸ்ரீசாம்ப சாதாசிவப்ரீதயே புத்ரஸ்வீகாரகர்மாங்கபூத
பலபூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி பூர்வோக்த உபசாராதிகளால் பூஜித்த பிறகு

## (9) ஹிரண்யோதக மந்திரம்.

ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸூ:
அநந்த புண்ய பலதம தஸ்யாம்திம் ப்ரயச்டமெ
என்றிம் மந்திரம் சொல்லி ஹிரண்யோதகம் விட்டுப்பிறகு

## (10) பலதான மந்திரம்.

பலம் மனோரதபலம். ப்பிரததாதி சதாநிருணாம் புத்ர
பவுத்ராபி வ்ருத்யர்தம். அதஸ்பாம்றிம் ப்பிரயச்சடமே
இதம் பலதானம் சதக்ஷிணாகம் சதாம் பூலம்.
ஸ்ரீசாம்ப சதாசிவப்ரீதிம், காமயமானஸ் சிவரூபிணெ
துப்யமஹம் சம்ப்ரததெ நமம, நமம,

என்றிம் மந்திரம் உச்சரித்துக்கொண்டு மாஹேஸ்வரருக்குப் பலதானம் கொடுக்கவேண்டியது, பிறகு பதிபுத்ரருள்ள புண்ய ஸ்ரீகள் ஆரதிஎடுத்தபிறகு யதாசக்தி கணாராதனைச்செய்யவேண்டியது. .

இதி, தத்து புத்ரஸ்வீகாரம், முற்றிற்று

( இஃது சுயம் புரோஹிதம் )

# சக்தி விசிஷ்டாத்வைத மதம்.

---

துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைத மதங்களைப் போல வே, சக்தி விசிஷ்டாத்வைத (வீரசைவ) மதமும் ஒரு பிரத்யேக வைதிக மதமாயிருந்தும் இப்போது சிலகாலங்களாக சம்ஸ்கிருத பாஷையிலுள்ள அத்வைதபரமான பஞ்சதசப்பிரகரணம், விசார சாகரம், ஞானவாசிஷ்டம், ஞானசிந்து, முதலான கிரந்தங்களைப் படித்தும் கேட்டும் வந்ததினால் மாயாத்வைதசித்தாந்தமே வீர சைவ சித்தாந்தமென பிரமித்து விடுகிறார்கள், அதி பவுத்திரமான தும் சகல சுருதிகளின்சம்மதமானதும் அத்தியந்த சனாதன (புரா தன) மானதுமான தங்களது சக்திவிசிஷ்டாத்வைத தத்துவத்தை நிஷேதித்து பேருக்கு மாத்திரம் லிங்கதாரிகளென்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள், இப்போது பிரபஞ்சத்தில் யாருக்கு எப்பாஷை தெரிந்திருக்கிறதோ அப்பாஷையிலுள்ள கிரந்தங் களைப் படிப்பதாலவைகளிடத்தில் அபிமானமுண்டாவது சுபாவ மாயிருக்கிறது, உலகத்திலந்தந்த மதத்தின் பண்டிதர்கள் தங்கள் தங்கள் தேசபாஷைகளில் தங்கள் தங்கள் மத கிரந்தங்களை எழுதி பிரசித்தப்படுத்திக்கொண்டு வந்திருப்பதால் அந்தந்த கிரந்தக்கர்த் தர்களின் கீர்த்தியும் மத பிரவர்த்தகர்களான ஆசார்யர்களின் மஹத்துவங்களும் ஜனங்களிடத்தில் வேரூன்றியிருக்கின்றது, பூர் வகாலத்தில் சம்ஸ்கிருதபாஷையிலிருந்த அத்வைத கிரந்தங்களை அம் மதத்தின் பண்டிதர்களனேகர்கள் தேசபாஷையில் மொழி பெயர்த்து அச்சிட்டுப் பிரசுரித்து வந்ததினாலிப்போது யாரிடத் தில் பார்த்தாலும் அத்வைத கிரந்தங்களே காணப்படுகின்றன, சில காலங்களாக சக்திவிஷ்சிடாத்வைத சித்தாந்தத்தைத் தெரிந்தவீர சைவ பண்டிதர்கள் இம்மதத்தில் குறைந்துக்கொண்டு வந்ததினால் சம்ஸ்கிருத பாஷையிலிருந்த நூல்கள் புழுக்களின் வசமாகி வந்த தல்லாமல் தேசபாஷைகளில் பிரசித்தமாவதும் முயற் கொம்பா யிருக்கிறது, மீதமுள்ள புழுக்களைப்போல சிற் சில பண்டிதர்கள் ஆங்காங்கிருந்தாலும் அவர்கள், சித்தாந்த கிரந்தங்களைப் படிப் பதிலேயே காலங்கடத்திக்கொண்டு தங்கள் தங்கள் கிருஹ கிருத் தியங்களை மாத்திரம் நிர்வாஹம் செய்துக்கொண்டு இஹலோஹ யாத்திரையை முடித்தார்கள், மற்றும் மடாதிகாரிகளென்பவர் சில காலமாக சம்ஸ்கிருத கிரந்தங்களையே யறியாதவர்களாகி கேவலம் உதரபோஷணை நிமித்தமாக மந்திரம், கோப்யம், மிஸ்ரார்ப்பண முதலானவைகளையே கைக்கொண்டு வீரசைவ சித்தாந்தாநுசார மாக நித்தியநைமித்திகாதி கருமங்களைத் தங்கள் தங்கள் பக்தருக்

குச் சரியாகப் போதிக்காமலிருந்து வந்தார்கள், மற்றும் சிலர் தங்கள் பார்வைக்கு எந்தெந்த தேச பாஷைகளின் கிரந்தங்கள் கிடைக்கின்றனவோ அக்கிரந்தங்களைப் படித்து அதிலுள்ளவை யெல்லாம தங்கள் மதத்திற்குச் சம்பந்தப்பட்டதென நினைத்து வீரசைவ சித்தாந்தாநுகுணமான உபாசனுமார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் கைவிட்டுக்கொண்டே வந்தார்கள், இதனுலிப் போது எவ்விடம் பார்த்தாலும் வாக்காத்வைத ஆடம்பரமே அதி கமாகி குரு சிஷ்ய தர்மம் முன் பின்னுகவும் அதர்மத்துக்கு இட முண்டாயிற்று,

சிலர் கன்னடபாஷையிலுள்ள நிஜகுணராத்தியரின் ஆறு புஸ்தகங்களைப்படித்து இவைகளே ஷட் சாஸ்திரங்களெனப் பிரமித்து இக்கிரந்தங்களிலுள்ள சக்திவிசிஷ்டாத்வைத மதத்தும் இப்படியே அத்துவைத மதத்தும் உள்ள வித்தியாசங் களைக்கண்டு கொள்ள சக்தியில்லாமல் அங்குச் சொன்னவை யெல் லாம் வீரசைவ மததத்துவமெனவேயூகித்து ஸ்வமதத்திற்கு விரோதிகளானுர்கள், மற்றும் சில பண்டிதர்கள். ஸ்வபாஷையி லெழுதியுள்ள அத்வைத கிரந்தங்களான விசார சாகரம், பஞ்சத சப் பிரகரணம், ஞானவாசிஷ்டம், முதலான கிரந்தங்களைப்படித் தும் கேட்டும் இம மாயாத்வைதமே வீரசைவ சித்தாந்த மெனச் சொல்லி ஸ்வமத விரோதிகளானுர்கள், இப்படியாக வீரசைவ சித்தாந்த கிரந்தங்கள் தேசபாஷைகளிலில்லாமலிருப்பதாலும் வேறுபாஷைகளில் மொழி பெயர்க்கும் பண்டிதர்களின் சங்கை குறைந்துக்கொண்டு வந்ததினுலும் ஸ்ரீரேணுகாதி பகவத்பாதர்க ளால் பிரதிஷ்டிதமான அப்ராகிருதசிவதர்மாநுஷ்டானங்கள் கில மாகி(சிதிலமாகி)பிராக்ருத நியமங்கள் இம்மதத்தினரிடத்தில் அதி கரித்துக்கொண்டு வந்தது, உலகத்தில் மூடஜனங்கள் தாங்களெ தைப்படிக்கிறுர்களோ அல்லது மற்றவர்களால் கேழ்க்கிறுர்களோ அவை யெல்லாம் நமது மதத்தினவைகளே யென நினைப்பது அநுபவத்திலிருந்து வருகிறது,இதனுல் பூர்வாசார்யர்களின் மஹா வாக்யோபதேசங்களின் பலங்குறைந்து வந்திருக்கிறது, இப் போது அப்படிப்பட்ட மூடர்களின் கைகளில் எவ்விடம் பார்த் தாலும் அன்னிய மத தர்மப்பிரதிபாதகங்களான விசாரசாகராதி கிரந்தங்களே நடனமாடுகின்றன, இம்மதத்தினரில் அற்ப சொற் பம் தெரிந்தவரானுலும் அவர்களுங்கூட வீரசைவர்களுக்கு லிங் கதாரணம் லிங்கபூஜைகள் மாத்திரம் தனிப்பட்டவையே யொழி யமற்றவைகளெல்லாம் அத்வைதாநுபவமேயென அபினிவேச (எண்ண)முள்ளவர்களாயிருக்கிறுர்கள்,தற்போது இம்மதத்திலனே கர் சம்ஸ்கிருதபாஷா பண்டிதர்களானபடியால் சிற்சிலவிடங்களில் வேரூன்றிநின்றுள்ள இவ்விஷம சம்ஸ்காரத்தைவிட்டு ஸ்வதர்மசிற

த்தையையுண்டாக்கதாம் வீரசைவசித்தாந்தத்தை நன்ருகத்தெரிந்துக்கொண்டு அம்மூல கிரந்தங்களை தேசபாஷைகளில் மொழிபெயர்க்கத்துடங்கி (ஆரம்பித்து) எத்தனையோ கிரந்தங்களைப் பிரசுரித்து மாயாத்வைதத்திற்கும். சிவாத்வைதத்திற்குமுள்ள தாரதம்மியங்களைத் தெரியப்படுத்திக்கொண்டு வந்திருப்பதானது, ஆசார்யபகவத் பாதர்களின் அநுக்கிரஹமென்றே சொல்லவேண்டியிருக்கிறது, இதனாலிப்போது அநேகவிடங்களிலுள்ள அசம்ஸ்கிருதர்களான ஜனங்களின் கண்கள் திறந்திருக்கிறது, ஸ்வசித்தாந்தத்தில் சொன்ன தர்மங்களைத்தெரிந்துக்கொண்டு முன்பு நடத்திக்கொண்டு வந்த விதர்மங்களை விலக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிவாத்வைதமான வீரசைவ மதத்திற்கும், மாயாத்வைதமான அத்வைத மதத்திற்கும் கிஞ்சிற்றேனும் சம்மந்தமில்லை, ஆதியந்தமாக இவையிரண்டிற்கும்வையதிகரண்யம்(பேதம்) இருக்கிறதேயொழிய ஒன்றிலாவது சமானாதிகரண்யமே இருப்பதில்லை இம்மதங்களின் மூலகர்த்தாக்கள் வேறுவேறாயிருக்கிறார்கள். சக்தி விசிஷ்டாத்வைத (வீரசைவ) மதத்திற்கு ஸ்ரீரேணுகாதி பஞ்சாசார்யர்கள் கர்த்தாக்களானால், அத்வைத மதத்திற்கு ஸ்ரீ சங்கராசார்யர் கர்த்தராயிருக்கிறார், ஸ்ரீரேணுகாசார்யாதிகள் ஞான கர்ம சமசமுச்சய(சம்யோக)த்தினால் முக்தியெனச் சொன்னால், சங்கராசார்யர் ஞான மொன்றினாலேயே முக்தியென்கிறார் ஸ்ரீ பஞ்சாசார்யர்கள் ஜகத்து நித்தியமென்றால், சங்கராசார்யர் மித்தையென்கிறார், பஞ்சாசார்யர்கள் பிரஹ்மம் சர்வக்ஞத்வாதி கல்யாண குணவிசிஷ்டமென்றால், சங்கராசார்யர் நிர்விசேஷமெனச்சொல்கிறார், பஞ்சாசார்யர்கள் சுருதிகளில் சொன்ன பேத அபேதங்களிரண்டும்பாரமார்த்திகமென்றால்,சங்கராசார்யர் அபேதமொன்றே பாரமார்த்திகமென்பர், பஞ்சாசார்யர்கள் சிவயோகத்தினால் முக்தியென்றால் சங்கராசார்யர் விசாரத்தினாலேயே முக்தியென்பர். பஞ்சாசார்யர்கள் சர்வகாரணமான மஹேஸ்வரனொருவனையே பதிவ்ரதாதர்மத்துடன் அர்ச்சித்துப்பூசிக்கவேண்டுமென விதித்தால் சங்கராசார்யர் ஆதித்யாதி பஞ்சதேவதைகளின் பூஜையை விதித்தார், பஞ்சாசார்யர்கள் அந்தக்கரணவிருத்திகள் நித்தியமென்றால் சங்கராசார்யரிதையனித்தியமென்பர், பஞ்சாசார்யர்கள் சக்தியானது பிரஹ்மத்தினிடத்தில் பின்னமானதினால் முக்திதிசையில் ஸ்வரூபமானது நஷ்டமாகிறது தனக்கு மூலபூதமான சிவசக்தியில் லீனமாகிறதெனச்சொன்னால், சங்கராசார்யர் பிரஹ்மக்ஞானத்தினால் அவித்தைஸ்வரூபமானது நஷ்டமாகிறதெனச்சொல்கிறார். பஞ்சாசார்யர்கள் ஜகத்து பிரஹ்மத்தின் பரிணாமமெ(வேறுபாடெ)ன்றால், சங்கரர்விவர்த்த (கற்பித)மென்கிறார், பஞ்சாசார்யர்கள் சித்சக்தியின் சங்கோச

(கூடின)ரூபமான சித்தவிசிஷ்டமே ஜீவனெனச்சொன்னால், சங்கரர் அந்தக்கரணத்தில் பிரதிபலித்த (பிரதிபிம்பித்த) ப்ரஹ்மமே ஜீவனெனச்சொல்கிறார், பஞ்சாசார்யர்கள் சித்தவிகாசத்தினால் (மனம்முதலான அந்தக்கரணங்கள்நான்கும் விரிதல்அல்லது மலர்தலினால்) சிவத்வப்பிராப்தியெனச்சொன்னால் சங்கரர் சித்தாதிகள் நாசமான பிற (மனம் முதலான அந்தக்கரங்கள் நசித்தபிற)குண்டாகும் பரமானந்தப்பிராப்தியே முக்தியெனச்சொல்லுவர், பஞ்சாசார்யர்கள் தங்கள் சித்தாந்தத்திற்குசக்திவிசிஷ்டாத்வைத சித்தாந்தமென்றால் சங்கரர் அத்வைத சித்தாந்தமென்பர்,

இப்படியாக எல்லாவிஷயங்களிலும் வைலக்ஷண்ய (வித்தியாச) மேகாணப்படுவதால் அத்வைத மதத்திற்கும் சக்திவிசிஷ்டாத்வைத(வீரசைவ)மதத்திற்கும் மேரு(மலை)சர்ப்பத்தளவுவித்தியாசமிருந்தும் இவைகளைப்பரியாலோசனை செய்யாமல் அவ்விடங்களில்ச்சொன்ன சில அத்வைதபரமானவாக்கியங்களைச்செவியினால் கேட்டமாத்திரமே பூர்வாபர பிரகரணத்தைப்பார்க்காமலும் இவ்வீரசைவமதத்தை அத்வைத சித்தாந்தத்தில் அந்தர்ப்பாவம்செய்யப்படாத ஆசார்ய பகவத்பாதர்களால் சொல்லப்பட்ட முக்திசாதனங்களான பக்தமாஹேசாதிசட்ஸ்தலாசரணைகளும் மாமிசபிண்ட நிவிர்த்திபூர்வகமானதும் மந்திரபிண்டத்வ பிராப்திரூபமான சிவதீக்ஷாபூர்வகமான லிங்கதாரண மஹாவிரதம் முதலானவைகளுக்கெல்லாம் அர்த்தமில்லாதனவாக முடியும், இவைகளையெல்லாம் மறந்து தங்கள் குருக்களின் மார்க்கத்திற்கு விரோதமாக தப்புமார்க்கத்தில் நடக்கப்பட்டஜனங்களின் மஹோபகார நிமித்தமாகதற்காலத்திய சில வீரசைவ பண்டிதர்கள் சம்ஸ்கிருதபாஷையிலுள்ள சக்திவிசிஷ்டாத்வைத சித்தாந்த அபிப்பிராயங்களை கர்னாடகபாஷையில் பிரசுரித்து அன்னியகிரந்தங்களாலுண்டான பிரேமையை (பிராந்தியை) போக்கி லிங்கிதர்மம் அநுஷ்டானத்தில் வருமாறு செய்கிறார்கள், இம் மஹோதயர்களுக்கு ஸ்ரீ ஜகத்குரு பஞ்சாசார்யர்கள் அநுக்கிரகிக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

முற்றிற்று.

(14—7—30 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.)

ஸ்ரீ பஞ்சபீடாதி தேவதாயை நம:

# வீரசைவரின் நியமங்கள்.

வீரசைவ (லிங்காயுத)ர்கள் குரு, லிங்க, ஜங்கம, விபூதி ருத்ராக்ஷம், மந்திரம் பாதோதக, பிரசாதம் இவைகளின் சேவையைத்தவிர்த்து அன்னிய தெய்வங்களுக்கு என்றால் கோவில்களிலிருக்கப்பட்ட, எல்லம்ம முதலான வேறெந்தத் தேவதைகளுக்கும் நமஸ்காரம் செய்யக்கூடாது பிரசாதமும் பெற்றுக்கொள்ளக்கூடாது. பிரார்த்தனைகள் செய்துக்கொள்ளக்கூடாது,

இஷ்டலிங்கார்ச்சகோ மர்த்ய: பாவன: பங்க்திகர்மசு
ஸ்திரலிங்கார்ச்சகோ மர்த்ய: நசுத்த: பங்க்திகர்மசு

என்னும் சித்தாந்தத்தைப்போல இஷ்டலிங்காதாரனைச் செய்பவர்களுடன் பந்திபோஜனாதிவியவஹாரங்கள் செய்யவேண்டுமேயல்லாது இதரர்களுடன் பந்தி போஜனாதி வியவஹாரங்கள் செய்யக்கூடாது. குருக்களினால் உபதேசத்தையும் முக்திகாரணமானசிவலிங்கத்தை புமடைந்த பிறகு "லிங்கமத்யே ஜகத்சர்வம்" இந்த ஜகத்தெல்லாம் சிவலிங்க மொன்றிற்குள்ளாகவே அடங்கியிருப்பதால் ஜகக்கர்த்தனை இந்த இஷ்டலிங்கம் சரீரத்தின் மேலிருக்க ஏகசித்தத்துடன் அவனின் சேவை செய்யாமல், அவனைப்பூஜிக்காமல், பஜிக்காமல், வீரசைவ சித்தாந்தத்திற்கநுசரணையான பதிவிரதா சுபாவத்தைவிட்டு இதரதெய்வங்களை வணங்கிக்கொண்டும் குங்குமம் பண்டாரம் (மஞ்ஜள் தூள்) நெற்றியிலிட்டுக்கொண்டு, திரிலோக பாவனமான விபூதியினிடத்தில் ஆதரணையில்லாதிருப்பதால் குருக்களினால் தரிக்கப்பட்ட பரஞ்சோதி ஸ்வரூபமான இஷ்டலிங்கத்திற்கு எவ்வளவு அவமானம் செய்தாப் போலாகிறது பாருங்கள், எப்படியென்றால் ஒரு ஸ்திரீ தான் கல்யாணம் செய்துக்கொண்ட புருஷனைவிட்டு அன்னிய புருஷனிடத்திலிருக்கப் பிரியப்பட்டால் சொந்த புருஷனுக்கு எப்மாதிரி அவமானமாகுமோ இப்படிப்போலவே குரு கொடுத்த இஷ்டலிங்கத்தின் நிஷ்டைதப்பினதனால் அனேக சங்கடம், வியாதி தாரித்திரியம், (தரித்திரம்) நரகப்பிராப்தியுமுண்டாகுமென்று பரமேஸ்வரன் பார்வதிக்குச்சொல்லியிருக்கிறார், ஆகையால் குரு லிங்க ஜங்கம பாதோதக பிரசாதம் இவைகளில் பக்தியுடன் நடந்துக்கொண்டவருக்கும் பூஜித்தவருக்கும் இஹபரசுகமான போக மோக்ஷங்களுண்டாகுமென்று அநேக கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது. ஆகையால் லிங்காயுதர்கள் பரதேவதைகளை வணங்கி மதபிரஷ்டராகாமல் குரு, லிங்க, ஜங்கம, பாதோதக, பிரசாத, விபூதி, ருத்ராக்ஷ மந்திரங்களினால் பக்தியுடன் பூஜிக்க வேண்டியது, இப்படிக்கல்லாமலிருந்தால் சர்வதேவமயனான சிவனொருவனையே பூஜிக்கவேண்டுமென்னும் வீரசைவ சித்தாந்தத்

திற்கு ஹானியுண்டாகிறது, ஆகையால் நம்மமதத்திற்கு விரோத மில்லாமல் நடந்து சிவபிரீதிக்குப்பாத்திரராகவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஊதா அல்லது நீலநிறமுள்ள குங்குமங்களும், கறுப்பு நிறமான சாந்துக்களும் அமங்கல வஸ்துக்களாகையால் வீர சைவ (லிங்காயுத)ர்கள் அணியக்கூடாது, அணிந்துகொள்ளவும் கூடாது.

17—12—28. பிரபாபத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# லிங்காயுத மதப்பிரவர்த்தி.

ஜகதத்தாதியில் பரமேஸ்வரனால் நிர்மிதமான வீர சைவ மதம் அனாதி சம்சித்தமானதென்பதற்கு இச்சகத்தே சாக்ஷியாயிருக்கிறது, எப்படியென்றால் சிருஷ்டியின் ஆதியில் பர மேஸ்வரன் பிரம்மனிடம் சிருஷ்டிகாரியம் செய்யென்றாக்ஞாபிக் கவும் பிரம்மன் சிருஷ்டிகாரியம் தெரியேனெனவும் முதல் முத லாக சிருஷ்டித்துக்காட்டினால் சிருஷ்டிக்கிறேனென்று விண்ணப் பிக்கவும் அப்பரமேஸ்வரன் தன் பஞ்ச முகங்களினால் பஞ்சகண வரன்களையுண்டாக்கி இக்கணவரர்களினால் சக்திவிசிஷ்டாத் வைதமான வீரசைவ (லிங்காயுத) மதத்தையுண்டாக்கிக்காட்டி னாரென்று சகல வேதாகமங்களில் கூறியுள்ள விஷயம் சுப்ரசித்த மானதாயிருக்கிறது. இச்சிருஷ்டிக்கு அப்ராகிருத சிருஷ்டி யெனப்பெயர், சிருஷ்டிகாரியத்தையறியாத பிரஹ்மன்

யாதாவீரசைவ மதோத் பத்தி: ததாஜகதுத்பத்தி:

என்னும் மாதிரியாக எப்படி வீரசைவமதம் உற்பத்தி யாயிற்றோ அப்படியே ஜகதுற்பத்தியையுண்டாக்கினனென்பது இதின் கீழ்வரும் விஷயங்களினால் தெரியவருகிறது.

இந்த லிங்காயுத மதத்திற்கு ரேணுகர், தாருகர், ஏகோ ராமர், பண்டிதாராத்யர், விஸ்வாராத்தியரென்னும் பஞ்சாசார் யர்களே கர்த்தர்கள், இச்சகத்திற்காவதும் பிரஹ்ம, விஷ்ணு, ருத்திர, ஈஸ்வர, சதாசிவர்களென்னும் பஞ்சபிரஹ்மர்களே கர்த் தர்களாயிருக்கிறார்கள்,, இம்மதம் பட்விடி, விருஷ்டி, லம்பண, முக்தகுச்ச, பஞ்சவர்ணங்களென்னும் பஞ்ச மஹாசூத்திரங்களி னால் யுக்தமாயிருக்கின்றன,, இச்சகத்து பிருதிவு, அப்பு,தேய்வு, வாய்வு, ஆகாசங்களென்னும் பஞ்சமஹாதத்துவங்களினால் யுக்த மாயிருக்கிறது,, வீரசைவமதம் குரு, லிங்கம், ஜங்கமம், விபூதி, ருத்ராக்ஷம், மந்திரம், பாதோதகம், பிரசாதங்களென்னும் அஷ் டாவர்ணங்களினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது,, இச்சகத்து பூமி, ஜலம், அக்கினி, வாய்வு, ஆகாசம், ஆத்மன், சூரியன், சந்திரன், என்னுமிவ்வெட்டு தத்துவங்களினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது,, சிவனுடைய தேஹ (சரீர) மும் இவ்வெட்டு தத்துவங்களினால்

கூடினதாயிருக்கிறது, வீரசைவமதம் பிரதியொருவிஷயத்திலும் பஞ்சதத்துவங்களையும் உட்கொண்டிருக்கிறதென்னும் விஷயத்தை இதின்கீழ் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சாத்யோஜாதம், வாமதேவம், அகோரம்,, தத்புருஷம் ஈசானங்களென்னும் பரமேஸ்வரனின் பஞ்சமுகங்களும், தத்பஞ்சமுகோத்பவர்களான ரேணுகர், தாருகர், ஏகோராமர், பண்டிதாராத்தியர், விஸ்வாராத்யரென்னும் பஞ்சகுருக்களும்,, பட்விடி, விருஷ்டி, லம்பன, முக்தகுர்ச, பஞ்சவர்ணங்களென்னும் பஞ்சகோத்திர புருஷர்களும்,, பீடம், விருத்தம், கோளகம், மஸ்தகம், கோமுகங்களென்னும் பட்சசூத்திரங்களனுசரித்தலிங்கமும், வஸ்திரம், கௌபீனம், கமண்டலம், தண்டம், பஸ்மம், என்னும் பஞ்சமுத்திரைகளுடன்கூடின குருமூர்த்தியும்,, நிவர்த்தி, பிரதிஷ்டா வித்பா, சாந்தி, சாந்தியாதீதங்களென்னும் பஞ்சகலைகளும்,, இப்பஞ்சகலைகளிலுதித்த நந்தெ, பத்ரெ, சுரபி, சுசீலெ, சுமனெ, என்னும் பஞ்சசக்திகளும்,, தத்பஞ்சகோமயத்திலான பூதி, பசிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷெ என்னும் பஞ்ச விபூதிகளும்,, கிரஹண, கபளனம், சேஷனம், தஹனம், சோதனங்களென்னும் பஞ்சகிருத்தியங்களும்,, பஞ்சமுக ருத்ராக்ஷங்களும் மற்றும் பிரசாத பஞ்சாக்ஷரம், மாயாபஞ்சாக்ஷரம், சூட்மபஞ்சாக்ஷரம், ஸ்தூலபஞ்சாக்ஷரம், மூலபஞ்சாக்ஷரங்களென்னும் பஞ்சபஞ்சாக்ஷரி மந்திரங்களும்,, லிங்காசாரம், சதாசாரம் பிருத்யாசாரம், சிவாசாரம், கணாசாரங்களென்னும் பஞ்சாசாரங்களும்,, இன்னும் இச்சகத்தின் விசாரமாவதும் பிறதியொருவிஷயத்திலும் பஞ்சதத்துவங்களை யுட்கொண்டிருக்கும் இவ்வீரசைவ மதத்தை இதின் கீழ் சொல்லுகிறேன்.

பரப்பிரஹ்மமானது சத்து, சித்து, ஆனந்தம் நித்தியம் பரிபூரணங்களென்னும் பஞ்சமஹாலக்ஷணங்களினால் கூடினதாயிருக்கிறது,, சிருஷ்டி, திதி, லயம், திரோதானம், அனுக்கிரகங்களென்னும் பஞ்சகிருத்தியங்களும்,, தபசு, கர்மம், ஜபம், தியானம், ஞானங்களென்னும், பஞ்சகிரியைகளும்,, மந்திர ஹட, ராஜ, லய, சிவயோகமென்னும், பஞ்சயோகங்களும்,, ஞானம், ரக்ஷை, தபசு, சர்வசம்வாதம், துக்கசம்க்ஷபம் சுகாவிர்ப்பாவமென்னும் பஞ்சப்பிரயோஜனங்களும்,, கர்மி, முமூக்ஷு, அப்யாசி, அநுபவி, ஆரூடரென்னும் பஞ்ச அதிகாரிகளும்,, லௌகிக, வைதிக, ஆதியாத்மீக, ஆதிமார்க்கீக, மந்திரங்களென்னும், பஞ்ச சாஸ்திரங்களும்,, ஜாக்கிரம், சுவப்னம், சுசுப்தி, துரியம், துரியாதீதங்களென்னும், பஞ்ச அவஸ்தைகளும்,, தமசு, மாயை, மோஹம், அவித்தை அநிருதாத்மிகைகளென்னும் பஞ்சமாயைகளும்,, அசத்து, ஜடம், துக்கம், அநித்தியம், கண்டிதங்களென்னும் மாயாபஞ்சலக்ஷணங்களும்,, அவித்தை, அஸ்மிதம்,

ராகம், துவேஷம், அபினிவேஷங்களென்னும் பஞ்ச கிலேசங்களும்,, அந்தக்கரணம், மனம், புத்தி, சித்தம், அஹங்காரங்களென்னும், அந்தக்கரண பஞ்சகங்களும்,, வியானன், சமானன், உதானன், பிராணன், அபானன்களென்னும், பஞ்சப்பிராணன்களும்,, அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்களென்னும் பஞ்சகோசங்களும்,, சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிக்வா, கிராணங்களென்னும் பஞ்ச ஞானேந்திரியங்களும்,, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தங்களென்னும் பஞ்ச கர்மேந்திரியங்களும், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தங்களென்னும் பஞ்ச விஷயங்களும்,, வெள்ளை, மஞ்சள், சிகப்பு பச்சை, நீலமென்னும், பஞ்சவர்ணங்களும்,, விசேஷணம், விசேஷ்யம், கர்த்துரு, கர்மம், கிரியைகளென்னும், பஞ்ச அன்வயங்களும்,, மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், கல்பம், ஹரிசந்தனங்களென்னும் பஞ்சாங்கங்களும்,, இத்தியாதியனேக விஷயங்களினால் கூடின பிரம்மமாயா சம்யோக யுக்தமான ஜகத்து, மற்றும் சக்திவிசிஷ்டாத்வைதமான வீரசைவ மதம் பஞ்சதத்துவங்களினால் நிர்மிதமாயிருப்பதான பிரயுக்த

யதாவீரசைவ மதோத்பத்தி: ததாஜகதுத்பத்தி:

என்பது சித்தாந்தம்.

வித்தில் விருக்ஷம் எப்படி அடங்கிக்கொண்டிருக்கிறதோ அப்படியே பரப்பிரஹ்ம சுரூபமான இஷ்டலிங்கத்தில் ஜகத்துலீனமாயிருக்கிறது. வித்து பஞ்சதத்துவங்களின் ஆசிரயமடைந்தால் ஏகசிதமாகமுளையுண்டாகி ரூபாந்தரத்தைபடைந்து (விளைந்து) சாகோபசாகைகளினால்கூடி புஷ்பபலங்களாகிப்பிறகு தான் எந்தவித்துரூபமாகயிருந்ததோ அந்த வித்தின்ரூபத்தை தலையில் தரித்தபிறகு ரூபாந்தரத்தையடைவது நின்றுவிடுகிறது. இப்படியே பிராணிகளிடத்தாவதும் கிருமி கீடபசு முதலான அநந்த ஜன்மங்களையெடுத்து (ரூபாந்தரத்தையடைந்து) கடைசியில் மானவ ஜன்மத்திற்கு வந்து பீஜரூபமான இஷ்டலிங்கத்தை தரித்தபிறகு ரூபாந்தரமடையும்(ஜன்மத்தை ஒழிக்கும்)முக்தாயமாக புனர்ஜன்மமில்லாமல் பரப்பிரஹ்ம சுரூபியாகிப்போவான், ஆனதினால் இவ்வீரசைவ (லிங்காயுத) மதம் அனாதிசம்சித்தமானதென்பதற்கு இச்சிருஷ்டியே சாக்ஷியாயிருக்கிறது, இப்படி மஹத்துவமான வீரசைவமததத்துவத்தையரியாமல் அஞ்ஞானிகள் கலியுகத்தின் பிராபல்யத்தினால் தூஷிப்பது அதிபாதகத்திற்குக்காரணமாயிருக்கிறது, பிரிய மஹாசயரே இப்பவித்திரமான லிங்காயுத மதத்தின்மேல் முழுநம்பிக்கை வைத்து கிருதகிருத்தியர்களாகுவீர்களென்று நம்பிக்கொண்டிருக்கிறேன்.

29—4—29. இந்து பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# விபூதி தயாரிக்கும் விதம்.

பசுவின் சாணத்தை கோமயம் விட்டுப்பிசைந்து உருண்டை செய்துலர்த்தி அக்கினியிலிட்டுத் தகித்து ஆறின பின்பு எடுத்ததை வஸ்திரகாயம் செய்துப்பின்பு பசுவின்கோமயமாவது அல்லது கோமயத்துடன் சுத்தஜலமாவது சேர்த்து முன் வடிகட்டின விபூதியை போட்டுப்பிசைந்து உருண்டைசெய்துலர்த்தி திரும்பவும் அக்கினியில்தஹித்தாவது தஹிக்காமலாவது, எடுத்துவைத்துக்கொள்ள வேண்டியது. இதில், வெண்ணிற விபூதியே சிரேஷ்டமானது. இதைக்கல்ப்பமென்றும், உத்தமமானதென்றும், சுட்ட விபூதியை கோமயத்தாலுருண்டை செய்பாமலிருக்கும் விபூதி, அநுகல்பமென்றும், இதுமத்திமமானதென்றும், அன்னியரால்தயாரித்தவிபூதி அகல்பமென்றும், இது அதமமானதென்றும், இவ்விபூதிகளே சிவமென்றும், சூக்தகாலாக்கினி யென்றும், அக்கினிக்குச் சமானமென்றும்,ருத்ரோபநிஷத்தில், சொல்லியிருக்கிறது.

## ருத்தராக்ஷ உற்பத்தி

திரிபுரதஹன காலத்தில் ஈஸ்வரலீலா சமயத்தில், அவர் சந்திரசூர்ய அக்கினியென்னும் மூன்று நேத்திரங்களின் ஜலபிந்துக்களினால் கிரமமாக சாத்வீக குணவெள்ளைவர்ணருத்ராக்ஷமும், ராஜோகுண ரக்தவர்ணருத்ராக்ஷமும், தமோகுண கருப்புவர்ணருத்ராக்ஷமும் உற்பத்தியாயிற்று. சர்வபாபங்கள் நசிக்கவும் சிவப்ரசாதக் ஞாநசித்திக்காகவும், விபூதி தாரணத்தின் பிறகு ருத்ராக்ஷதாரணம் தரித்தல் வேண்டும், வீரசைவர்களொவ்வொருவரும், உட்கழுத்திலொத்தைருத்ராக்ஷதாரணமாவது யெப்போதுமிடைவிடாது தரித்திருத்தல் வேண்டும், இன்னும் விஷேச பூஜாகாலங்களில் கழுத்திலணிய 32 மணியுள்ள ருத்ராக்ஷமாலையும், யக்ஞோபவிதத்திற்கு 108, ருத்ராக்ஷமணிகளும், சிரசிலணிய 11, ருத்ராக்ஷமணிகளும், தோள்களுக்கு, 16, ருத்ராக்ஷமணிகளும், கைகளுக்கு 12 ருத்ராக்ஷமணிகளும், கழுத்திலிருந்து வயிர்வரையில், 50, அல்லது 54, ருத்ராக்ஷமணிகளுள்ளமாலையும் தரிக்கலாம்,இவைகளில், பரமசிவபஞ்சமுக ரூபங்களான பஞ்சமுக, ருத்ராக்ஷங்களே நல்லவை,

### சுலோஹம்.

யஸ்யாம்கே நாஸ்திருத்ராக்ஷோ எகோபி பஹுபுண்யத:
தஸ்யஜன்ம நிரத்தம்ஸ்யா, த்ரிபுண்ட்ர ரஹிதேயதா
ருத்ராக்ஷாணும் சஹஸ்ரம் ஹி, முமுக்ஷுர் த்தாரயேத்சதா
ததபாவெ சதம்வாபி, தசசைக மதாபிவா

திரிபுண்ட்ரம் ரஹிதனைவனுடைய ஜன்மம் எப்படி நிஷ்பலமாகிறதோ அப்படியே பஹுபுண்யத்தையுண்டாக்கும் ருத்ராக்ஷம் ஒன்றுவதும் எவன் சரீரத்திலிருப்பதில்லையோ அவன் ஜென்மம், நிஷ்பிரயோஜனமானது. ஆகையால் மோக்ஷ அபேக்ஷையுள்ளவர்கள் நிரந்தரமாக சஹஸ்ர ருத்ராக்ஷங்களைத்தரிக்க வேண்டியது, அல்லது நூறுவதும், பத்தாவதும் தரிக்கவேண்டியது, அல்லது கடைசியாக ஒன்றுவதும் கட்டாயம் தரிக்கவேண்டியது, இது அதி அவசியமானது,

## அயோக்கிய ஜங்கமர்கள்.

தீக்ஷை பெறாதவரும் தீக்ஷை பெற்றிருந்துங்கூட தினமொரு தடவை அதம பூஜையாவது செய்யாதவரும் சிவலிங்கத்தைச் சரீரத்தின்மேல் சதா தரித்துக்கொண்டிராத ஆண்பெண்கள் பவிகளாகயாலிவர்கள் செய்த பாகாதிகிரியைகள் லிங்க பூஜைக்கு உதவா, இவர்கள் பவிகளாகயா லிவர்களெதிரில் லிங்க பூஜை செய்யக்கூடாது, இன்னுமிவர்கள் பந்திபோஜனம் செய்யவும் அயோக்கியர்கள், இன்னுமிவர்கள் மாங்கல்ய ஸ்த்ரீகளானுலுங்கூட சேசை நலுங்கு வைக்கவும் மாப்பிள்ளைத் தோழிகளாக உட்காரவும் அயோக்கியர்கள், இன்னுமிவர்களுக்கிவ்வெல்லா அம்சங்களும் பொருந்தி யிருந்தாலுங்கூட குழந்தையில்லாத மலடி ஆரதியெடுக்க அயோக்கியள், ஆகயால் கூடாது.

## சந்தான விக்ரயம்.

எவன் தன் உபஜீவனார்த்தம் கன்யா விக்ரயம் அல்லது சந்தான விக்கிரயம்செய்து கிரயம் வாங்கிக்கொள்ளுகிறவனும் கன்யா விக்ரயத்தைப்போலவே வரவிக்ரயம் அல்லது ஸ்த்ரீதனம் அல்லது வரதக்ஷிணை வாங்கிக்கொள்ளுகிறவனும் நரகத்தை யடைகிறுனென்று மனுஸ்மிருதி முதலான சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன, இன்னுமிவர்கள் பாதகரென்றும், அநிஷ்டரென்றும், நிந்தையுள்ளவர்களென்றும் பெயர், இவர்கள் அதோகதிக்காளாகி தோஷிகளாகிறுர்களென்றும், மற்றும் நரகத்தை யனுபவிப்பார்களென்றும் சொல்லியிருக்கிறது,மற்றும் கன்னிகையை கிரயத்திற்கு வாங்கிபாணிக்கிரஹணம்செய்தால் அவள் பத்தினியென்னும் பவித்திர நாமத்திற்கு யோகியதையாகாமல் தாசி யென்னும் நாமத்திற்குத் தக்கவளாகிறுள். தாசி சுபகாரியங்களுக்கு அயோக்கியளென்பது சாஸ்திரோக்தமாகையால், ஒவ்வொரு புருஷரும் கிரயம்கொடுத்து (விலைக்கு வாங்கி) என்றென்றைக்கும் விவாஹம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அது சேவை தாசி விவாஹமாகிறது என்பது

சாஸ்திரோக்தமாகையால் இப்படிப்பட்ட கலியாணம் என்றென்றைக்கும் யாரும் செய்யவேகூடாது. இப்படிச்செய்தால் கன்னியாவிக்ரயம் அல்லது வரவிக்ரயம் அல்லது சந்தானவிக்ரயம்செய்த பாதகத்திற்கும், தோஷத்திற்கும் இன்னும் சேவை தாசி பாணிக்ரஹணம் செய்த பாவத்திற்கும ஆளாகி துன்பப்படுவார்கள். இன்னுமிப்படி வாங்கின பணத்திற்கு மநுசுல்க மென்றுப்பெயர், இதற்கு சுருதி பிரமாணம்

### சுருதி சுலோஹம்.

நகன்யாயா : பிதா வித்வான் க்ருஹ்ணீயாச் சுல்க மண்வபி
க்ருஹ்ணன் சுல்கம் ஹிலோபேன ஸ்யான்னரோ பத்யவிக்ரயே(76)

ஸ்த்ரீதநாநி துயோமேஹா துபஜீவந்தி பாந்தவா :
நாரீயா நானி வஸ்த்ரம் வாதே பாபாயாந்த்யதோ கதிம் (77)

### புருஷ விவாஹ காலம்.

தீக்ஷையான பிறகு, 12 வருஷம் அல்லது அத்யயனம் பூர்ணமாகும்வரைக்கும் பிரம்ம சர்யம் ஆசரிக்கத்தக்கதென்றும் பிறகு யோக்கியனுனல் கிரஹஸ் தாஸ்ரமத்தை ஸ்வீகரிக்க வேண்டியதென்றும் மநுஸ்மிருதி 3-வது அத்தியாயம் ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறது, இன்னும்இதர கிரந்தங்களில் வரன் வயது, 18, முதல் 20 வரையில், விவாகம் செய்யத்தக்கதென்றும் இன்னும் சில கிரந்தங்களில் 18 முதல் 30 வயது வரையில், விவாஹம் செய்யத்தக்கதென்றும் 30 வயது புருஷன், 13 வயதுப் பெண்ணை மணஞ்செய்யலாமென்றும் இதை விட்டு புருஷ விவாஹம் சிறு வயதில் அதாவது வித்யார்த்தி காலத்தில் (வித்தை கற்கும் திசையில்) செய்வது சாஸ்திர சம்மதமானதன்றென்றும், பாலிய விவாஹம் அதம மென்றும் சாஸ்திரம் சொல்லப்பட்டது.

### வதுவின் லக்ஷணம்.

கன்னிகையின் மாதா பிதுர்வம்சத்தைப் பரீக்ஷித்த பிறகு உத்தம குணசீல குணவம்ச கன்னிகையைப் பார்த்து விவாஹம் செய்யத்தக்கது இன்னும் வரன் வயதைவிட குறைந்த வயதுள்ளவளாயும் அண்ணன் தம்பியுள்ளவளாயும் பின்ன (வேறு) கோத்திரமுள்ளவளாயும் விவாஹம் செய்யத்தக்கது. இன்னும்

ஆஸ்வலாயன சூஸ்த்திர சுலோஹம்.

*ஜனபததர்மாக்ராம தர்மாஸ்லதான் விவாஹே பிரதீயாத்*

என்னும் ஆஸ்வலாயன சூஸ்திரப் பிரகாரம் தேசா சாரம் கிராமா சாரம் இன்னும் குலா சாரம் இவைகளையாவதும் விவாஹ சமயத்தில் விசாரிக்கத்தக்கது

---

ஸ்த்ரீ விவாஹகாலம்.

10 வயதுக்குமேல், 12 வயது வரையிலும் அல்லது ருது வாகும் வரையிலப் பெண்ணுக்குக் காந்தாரி யென்றுப் பெயர், ஆகையால் 13 வயதுக்கு மேற்பட்ட பெண்ணை விவாஹம் செய்யத்தக்கது. விவாஹ காலங்களில் ருது தர்சனமானல் ஸ்நாநம் செய்து வேறு வஸ்திராபரணங்களணிந்து ஹோமம் செய்துப் பிறகு எல்லாக் காரியங்களும் செய்யலாமென்றும், புஷ்பவதியாகி, 3 வருஷம் வரையில் விவாஹம் செய்யலாமென் றும், ருதுமதியான, 3, வருஷங்களுக்குப்பிறகும் தகப்பன் விவா ஹம் செய்யாதிருந்தால் ரஜோதர்சனமான மூன்று வருடத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரவிடைக்கும் தந்தைக்கு புருணஹத்ய தோஷ முண்டாகிறதென்றும் ரஜஸ்வலையான 3 வருடத்திற்கு மேல் 4-வது வருஷத்தில் தகப்பனை யெதிர்பாராது பெண்ணுன வள் தானே வரனைத்தேடி விவாஹம் செய்துக் கொள்ளலாமென் றும், கலியாணமான பிறகு வதூவரர்கள் மூன்றிறவு அல்லது. 12 ராத்திரி அல்லது. ஒரு வருடம் பிரம்மசர்யமாயிருக்கவேண்டு மென்று ருக்வேதம் சாங்கியாயன சூஸ்த்ரமும், இன்னும். பராசர் ஸ்மிருதியும், சொல்லியிருப்பதாலும், இன்னும் விவாஹ காலத்தில் சப்தபதி சடங்கு மந்திரமும் பிரவிடையான கன்னிகையை யுத் தேசித்தே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க சிறுவயதில் விவாஹம் செய்வது அநேக இடையூறுகளுக்குக் காரணமாகின் றது, எப்படியென்ருல் சிறுவயதில் விவாஹமான பெண் தன் புருஷன்வீட்டுக் குடும்ப வியவகாரமென்றும் தெரியாதவளாகியும். இளமைப் பருவமானதாலும். சிறுவயதிலேயே பிறந்த வீட்டை யும் தாய் தந்தையர்களையும், கூடப்பிறந்தவர்களையும் சிநேகர்களை யும் விட்டுப்பிரிந்த துன்பமும், பெண் சிறு வயதானபடியால் விளையாடுந்தன்மையை வரன் வீட்டார் சகிக்காது பலவகை ஏசல் கள் பாடுவதும், இதனுல் தாய் வீட்டாருக்கு வசைச் சொற்களும் பெண் ருதுவாகி புருஷனுக்குத் தக்கவயது வராதிருந்தால் புருஷ

ன் வீட்டாருக்கும், பெண் வீட்டாருக்கும், துன்பமும், புருஷனுக்கு வயதுவந்து பெண் ருதுவாகாதிருந்தால் மாப்பிள்ளை வீட்டாருக்கு அதிருப்தியும் ஏற்படுகின்றமையாலும் இன்னும் சில அசந்தர்ப்பங்களில் பெண்தான் மணந்தபின்பம் ஒருநாளுநங்காளுதவளாகித்துயருவும்,மனதுசலிக்கவும்,நேரிடுகிறபடியால்பெண்ணின் தாய் தந்தையர்களுக்குத் தீராக்கவலையும், வருத்தமும், அவமானமும்கூடசிலசமயங்களில் நேரிடுவதால் பெண்களைருதுவானபிறகே விவாஹம் செய்விப்பது மிகஉத்தமமானதாகயிருக்கிறது, இன்னும்

## வித்தியாப்யாசம்.

ஸ்திரீபுருஷரிருவரும் கல்வியுடையவர்களாயிருப்பின் அவர்களின் புத்திகூர்மையும் அதனலவர்களுக்குண்டாகிற சவுக்கியமும், ஆநந்தமும், சொல்லவும் வேண்டுமோ, ஆகையால் ஆண்பெண் குழந்தைகளுக்கு பொதுவாக 16 வயதுவரையிலாவது. வித்தியாப்பியாசஞ்செய் விக்கவேண்டியது. தாய் தந்தையர்கள், குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளில், முதற்கடமையும், முக்கியகடமையுமாகும், மேலும், வித்தையில்லாத வீரசைவன், யானைக்குச் சமானமென்றும் அதாவது, கௌரவமுள்ள, மிருகத்திற்குச்சமமென்று சாஸ்திரங்களில், சொல்லப்பட்டிருக்கிறது. வித்தையென்றால், கல்வி, அல்லது படிப்பு எனப்பொருள், இன்னும் அமுதளிப்பதிலுங்கூட, ஆசாரமில்லாத ஜங்கமர், அநேகருக்கு அமுது செய்விப்பதைக் காட்டிலும், ஆசாரனும் சுசீலனுமான ஒரு ஜங்கமனுக்கேனும் அமுதளிப்பது உத்தம பலன்கிடைக்கும் எப்படியென்றால், இரத்தத்தில் தோய்த்த (நனைத்த) கையை ரத்தத்தினல் கழுவினலெப்படிச் சுத்தமாகாதோ, அப்படியாகத்தான் செய்த தோஷங்கள் தீருவதற்கு, மூர்க்க ஜங்கமருக்கு அமுதளிப்பதில் நிவிர்த்தியாவதில்லை. ஆனல் சுவல்ப பலன் கிடைக்கும். இன்னும் நமஸ்காரம் செய்வதிலுங்கூட தத்துவக்ஞானம் படிக்காமல் காதல்மாத்திரம் கேட்டஜங்கமனுக்கு நமஸ்காரம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரோக்தமும் இன்னும் குருமகனைலும் தீக்ஷையில்லாவிடில் பாதபூஜைக்கு யோக்கியனல்ல, இன்னும் தீக்ஷையில்லாத மாங்கல்ய ஸ்திரீகள் சேசை நலுங்கு வைக்கக்கூடாது,இன்னும் குழந்தையில்லாத மலடியான மாங்கல்யஸ்திரீகள் ஆரதியெடுக்கக்கூடாது இன்னும் வியாதி மாந்திரீக நிமித்தமாகவும் சிவலிங்கதாரண மில்லாதவர்களிடத்திலும் தீக்ஷையில்லாதவர்களிடத்திலும் வீரசைவர்கள் மந்திரம் அல்லது பாடம்போட்டுக்கொள்ளக்கூடாது.

## வீரசைவனுடைய தர்மங்கள்.

வீரசைவனின் லக்ஷணங்களெவையென்றால், வீரசைவகுலத்தில் பிறந்தவன் சைவாகமங்களில் வல்லவனும் ஜிதேந்திரியனும் டம்பாதிகளில்லாதவனும் பரோபகாரமுள்ளவனும் ஷட்கர்ம நிரதனும், ஷடத்வக்ஞானமுள்ளவனும், சிவபூஜாதத்பரனும், சாந்தனும், அசூயையில்லாதவனும், நீளமான மீசைகளைவிடாதவனும், ரோகமி(வியாதியி)ல்லாதவனும், ஸ்திரச்சித்த (உறுதியான மனமுள்ளவ)னும்மந்திரம், தந்திரம்,முத்திரை,இவைகளில் வல்லவனும், குருவாக்ஞையைப் பரிபாலனம் செய்யத்தக்கவனும், 32, நியாசங்களையும் தெரிந்தவனுமிருக்கவேண்டியது.

## புனர் விவாஹ சம்பிரதாயம்.

பெண்ணானவள் புருஷன் வீட்டிற்கு போவதற்கு முன்னமே புருஷன் காலகதியடைந்தால் (மரணமானால்) இரண்டாவது விவாஹம் செய்துக்கொள்ளலாமெனச்சாஸ்திரம்சொல்லுகிறது. ஆனால், இது வீரசைவரில் குருகுலத்தவருக்கும் மடாதிகாரிகளுக்கும் நிஷித்தமானது (கூடாது) எப்படியென்று விம்மாதிரியான ஜனங்களில் பிறந்த உத்தமமனிதனை பட்டாதிகாரி அல்லது சரந்தியாகச் செய்யவேண்டியதாகிறது, புனர்விவாஹ சம்மந்தம் செய்துக் கொண்டமனிதன் அல்லது அதில்கலந்துள்ள மனிதன் பட்ட சரந்தியாவதற்கு கூடாது, ஆனதாலனேக விதமான இந்த புனர் விவாஹ சம்பிரதாயம் ஜங்கமரில் என்றென்றைக்கும் செய்யக் கூடாது. இதர ஜனங்களில் மாத்திரம் முன்னைய புருடனுடைய அநுபோகத்திற்கு உள்பட்டவளானால் செய்வது கூடாது, முதல் புருடனுடைய அநுபோகத்திற்கு உள்படாதவளானால் புனர் விவாஹம் செய்வதற்கு ஆக்ஷேபணையில்லை. இதனால் ஸ்திரீயினுடைய பதிவிரதாதர்மத்திற்கு யென்றைக்கும் ஹானி (கெடுதி) யாகமாட்டாது, முதல்புருடனுடைய சம்போகத்திற்கு உட்பட்டவளாயிருந்து அகஸ்மாத்தா யப்புருடன் காலகதியானால் பிறகு மற்றொரு புருஷனைப்புனர் விவாஹம் செய்துக்கொண்டா லிவள்பதிவிரதையாகமாட்டாள், இப்புனர் விவாஹத்தை குருலிங்கஜங்கமர்கள் ஆசரிக்கக்கூடாது, புநர்விவாஹம் செய்துக்கொண்டவளுடைய சிசுவின் வம்சமுள்ளவரைக்கும் புனர்விவாஹம் செய்துக்கொண்டவளும் அவளையடைந்த புருடன் சஹிதம் நரகபோகிகளாயிருப்பார்களெனச்சாஸ்திர சித்தாந்தமுண்டு, முதல்தடவை புநர்விவாஹம் செய்துக்கொண்டவள் அப்புருடனின் சம்போகத்திற்கு போகாத

முன்னமேயே புனர்விவாஹ புருடனும் காலகதியடைந்தால் மறுப டியுமிரண்டாவது தடவை புனர் விவாஹம் என்றென்றைக்கும் செய்துக்கொள்ளக்கூடாது, தன்பதிவிரதாதர்மத்தை காப்பாற்றிக் கொண்டு யதியாஸ்ரமத்தை வாங்கிக்கொண்டு திரிகாலமும் இஷ்ட லிங்கபூஜை, இஷ்டலிங்க ஜெபம், இஷ்டலிங்கத்தைக் குறித்து தபசு முதலானவைகள் செய்யவேண்டுமேயல்லாது அன்யத்ரயம் செய்யக்கூடாது, கேள், பார்வதியெனப் பரமேஸ்வன் சொல்லி யிருக்கிறார்,

## புனர் விவாஹ காரியம்.

இதுவும் விவாஹத்தைப்போலவே வஸ்திராலங்கார முதலா னது நிச்சயம் செய்துக்கொண்டு கங்கணம் கால்மோதிரத்தின் வகை புனர்விவாஹபுருடன் ஒருவராகன், பெண்வீட்டாருக்கு கொ டுக்கவேண்டியது, பிறகு ஒரு சுபமுகூர்த்தத்தில் கன்னியின் வீட்டி ற்கு வரனுவதும் அல்லது வரன்வீட்டிற்கு கன்னியாவதும் அழை த்து வந்து ஒருசபையைச்சேர்த்து என்றால் ஊரிலுள்ள பட்டாதி காரியையாவதும் அவரில்லாதிருந்தால் அவ்வூரில் மடாதிபதியாவ தும் இவருமில்லாதிருந்தால் அவ்வூரிலுள்ள ஜனங்களாவதும் அல் லது சம்பாவித ஜனங்களையாவதும் சேர்த்துப்பிறகு கொண்டுவந்த வஸ்திராலங்காரங்களை கன்னியினது சரீரத்தின்பேரில் அணியக் கொடுக்கவேண்டியது, பிறகுதாம்பூலம் சர்க்கரை அல்லது கல்கண் டெல்லா ஜனங்களுக்கும் கொடுத்தபிறகு புனர்விவாஹம் செய்து க்கொள்பவன் கொண்டுவந்த வஸ்திராலங்காரங்களாலவளைச்சிங்கா ரித்துக்கொண்டபிறகவள் ஜங்கமய்யர் பாதத்திற்கு நமஸ்காரம் செய்தபிறகு நான்குபேர்களுக்கு சாக்ஷி தாம்பூலம் கொடுக்க வேண்டியது, இதனலிக்காரியம் செய்த மாதிரியாயிற்று, புனர் விவாஹம் செய்துக் கொள்பவளுடைய வஸ்திராலங்காரம் சிங் காரிப்பதற்கு முத்தெய்தியர்களான மாங்கல்ய ஸ்திரீகள் என் றைக்கும் போகக்கூடாது, புனர்விவாஹம் செய்துக்கொண்டவர் களும் புருஷனையிழந்த கிழவியர்களும் போவதற்கு ஆட்க்ஷே பணையில்லை, ஏனென்றால் மாங்கல்ய ஸ்த்ரீகள் இந்த அபசவ்யத் தின் புனர்விவாஹத்தைப் பார்க்கக்கூடாது, இப்புனர்விவாஹம் செய்துக்கொண்டவள் என்றென்றைக்கும் மாங்கல்ய ஸ்த்ரீயா (முத்தெய்தியளா)கமாட்டாள், இவர்களைவிவாஹகாரியத்தில் மாங்க ல்யஸ்த்ரீ (முத்தெய்தி) யாகநேமிக்க(நியமிக்க)க்கூடாது. மங்களகர மான காரியங்களுக்கெல்லாம் இத்தம்பதிகள் அசுபர்களென்றறிய வேண்டியது.

## விவாஹங்கள், 8, விதங்கள்.

சுலோஹம்

பிரஹ்மே தைவஸ்ததை வார்ஷ: பிராஜாபத்யஸ்ததாசுர:
கம்தர்வோ ராக்ஷச் சைவ பைசாசச் சாஷ்டமோதம: (78)

(1) பிராஹ்ம, (2) தைவ, (3) ஆர்ஷா, (4) பிரஜாபத்ய (5) அசுர, (6) கந்தர்வ, (7) ராக்ஷச, (8) பைசாசமென எட்டுவிதமான விவாஹங்களுண்டு, தற்காலமிவைகளில் பிரஹ்ம, மற்றும் கந்தர்வ இவ்விரண்டுவித விவாஹங்களே நடவடிக்கையிலிருக்கிறது. இவைகளின்லக்ஷணங்களாவன

## பிரஹ்ம விவாஹ லக்ஷணம்.

சுலோஹம்

ஆச்சாத்ய சார்ச்சயித்வாச ஸ்ருதிசீல வதேஹ்வயம்
ஆஹூய தானம் கன்யாயாப்ரஹ்மோதர்மா: ப்ரகீர்த்தித: (79)

வித்தையிலும் சத்குணங்களினாலும் யுக்தனான வரனைத்தன் வீட்டிற் கழைத்து தன்மகளை வஸ்திராபரணங்களாலலங்கரித்து விதியுக்தமாக தானம்செய்வதே பிரஹ்ம விவாஹ மெனப்படும்.

## கந்தர்வ விவாஹ லக்ஷணம்.

சுலோஹம்

இச்சயான் யோன்ய சம்யோக: கன்யாயாஸ்ச வரஸ்யச
காந்தர்வ: சதுவிக்நேயோ மைதுன்ய: காமசம்பவ: (80)

வதூவரர்கள் பரஸ்பர பிரேமையினாலும் விஷயாபிலாசையினாலும் ஆகும் விவாஹத்திற்கு கந்தர்வவிவாஹமெனப்பெயர், அல்லது இதற்குப் பிரேமைவிவாஹ மென்றாலும்தகும், ஆனால் சகல விவாகங்களிலும் விஷயாபிலாஷை உத்தேசமிருந்தே யிருக்கிறது, ஆனாலும் மேற்சொன்ன சுலோஹத்தில்,காமசம்பவ: என்னும்பதம் அதிகமாகச்சேர்ந்திருப்பதால் கிரந்தகாரரின் உத்தேசமிப்படியாயிருக்கலாம். ஆனால்காமஇச்சை உத்பன்னமாகி விவாஹவாசனையுண்டாகக் கூடிய பிரவிடை வயதுள்ள வதூவரர்களாயிருக்கவேண்டியது, என்றால் இவ்விருவருடைய சம்மதத்தினாலிவ்விவாகம் செய்யவேண்டியதாகிறது,

ஸ்ரீசத் குரு சுவாமினேநம:

(இஃது சுயம் புரோஹிதம்.)

# திரி (மூன்று) விதவீரசைவ ஸ்வரூபம்.

பாரமேஸ்வர ராகமம்.

திரிவிதம் வீரசைவாக்யம் அதிகாரி விபேதத:

என்னும் ஆகம வாக்கியத்தின்படிக்கு வீரசைவர்களில் சாமான்ய வீரசைவர், விசேஷ வீரசைவர், நிராபார வீரசைவரென மூன்று வகுப்புகளுண்டு, சமீப காலத்தில் லிங்கம் தரித்துக்கொண்டவர்களை சமானியரென்றும், அநாதி காலத்திலிருந்து லிங்காதாரியாக வந்தவர்களை விசேஷர்களாகியும், சன்னியாசிகளை நிராபாரிகளெனவும், சில இடங்களில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது சித்தாந்தத்திற்கு விரோதமாயிருக்கிறது. அவரவர்களனுசரிக்கும் கிரியா ஞானாசாரங்களினால் ஒருவனே ஒரு காலத்தில் சாமான்ய வீரசைவனென்றும், அவனே மற்றொரு காலத்தில் விசேஷ வீரசைவனென்றும், அவனே பிறகொரு காலத்தில் நிராபாரி வீரசைவனெனவும், சொல்லிக் கொள்ளப்படுவான், அதெப்படியெனில் பாடசாலையில் வாசிக்கும் மாணவன் ஞானாதிக்யத்தினால் அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவனெனச் சொல்லிக்கொள்வதைப்போல ஒரு சாதகனான வீரசைவனே சாமான்ய, விசேஷ, நிராபாரியென்னும் மூன்று பெயரையுமடைகிறான். இதனால் சாமான்யனே விசேஷனும், விசேஷனே நிராபாரியுமாகிறான். கிரியா ஞானங்களால் பிரஷ்டனானால் மேலேறிச் சென்ற நிராபாரியுங் கூட அதோ முகத்தை (தாழ்ந்த கதியை) யுமடையலாம், இச்சாமான்ய, விசேஷ, நிராபாரி யென்னும் வாக்கியங்கள் பிறதியொரு லிங்காங்கிக்கும் அவனுடைய ஆத்ம சக்தியை அனுசரித்து வருபவைகளாயிருக்கின்றனவே யல்லாமல் பிறவியினால் லபிக்கத்தக்கவைகளல்ல குருவினால் சிவலிங்கத்தை யடைந்து கிரியாசாரம் தவறாமல் நடந்து குருலிங்கஜங்கம பிரேமியாகியிருந்தும், தெய்வ தோஷத்தினாலாகிலும், புத்தியின் தோஷத்தாலாகிலும், குருவினாலனுக்கிரகிக்கப்பட்ட இஷ்ட லிங்கம் நஷ்டமடைந்தால் மறுபடியும், குருவினாக்ஞையின்படிக்கு பிராயச்சித்தத்தினால் பரிசுத்தனாகி முன்போல கிரியாசாரத்தை யனுஷ்டித்திருப்பவனே சாமான்ய வீரசைவனாவான், சிவ தீக்ஷா காலத்தில் குருவினாலுபதேசிக்கப்பட்ட அஷ்டாவரண ஷட்ஸ்தலா சரணைகளை நடத்திக்கொண்டு லிங்கலோப விரதலோபங்களுக் கிடங்கொடாமல், ஆத்மானாத்ம விசாரியாயிருப்பவனே விசேஷ வீரசைவனாவான், கிரியா சித்தியும் ஞானசித்தியுமடைந்து சிரக்சந்தனாதி (மண், பொன் முதலானவை)களில் மஹாவைராக்கிய மடைந்து பஹி (பஹிர்முக) ரஷ்டாவர்ண ஆந்த (அந்தர்முக) ரஷ்டாவர்ணங்களுடன் கூடி பக்தாதி ஐக்யாந்த ஸ்தலங்களின் சித்தியைபடைந்து பிரபஞ்சாபிமானத்தை விட்டு மனை மடங்களையும் விட்டு கிரி (மலைக்) குகைகளில் வாசம்

செய்துக்கொண்டும்: கரஸ்தலத்தில் பிக்ஷையெடுத்துக்கொண்டும் சர்வசங்கபரித்யாகம் செய்தவனே நிராபாரி யெனப்படுவான், இப்படிப்பட்டவனே ஜீவன்முக்த னென்றும், சிவயோகி யென்றும் சொல்லப்படுவான், இப்படிப்பட்ட சித்தபுருடனையே சித்தாந்தகிரந்தங்கள் விசேஷித்துச் சொல்லியிருக்கிறது, இப்படிப்பட்டவனே ஸ்ரீஜகத்குரு ரேணுகாதி பஞ்சாசார்யர்கள் ஸ்தாபித்த வீரசைவதர்ம ரஹஸ்யத்தைத் தெரிந்து அவிரள சிவாநந்தத்தை யநுபவிப்பவ ரானதாலிவன் ஸ்ரீ ஜகத்குரு ஜகதாசார்யர்களின் பூர்ணநுக்கிரஹத்திற்குப் பாத்திரனாகிறான்,

சுலோகம்.

தண்ட கௌபீன காஷாய ஜடாபஸ்ம கமண்டலூன்
த்ருத்வாதலா சிரோமுண்டீ பூத்வா வசனவிவர்ஜித :
அஜினாசன யுக்தஸ்சன் காஷாயாச் சாதகச்சரேத்
கூஷ்மாண்ட கர்ப்பரம் த்ருத்வா பவேச்சைவ திகம்பர :
யத்ருச்ச யாலப்தசைவ பிரசாதாஸ் வாதனேரத :

காயேனமனசா வாசா த்யக்தபூ வித்தகன்யக :
த்யக்த்வாக்ருஹ மடாதீனி மனுஷ்யாதி ஸ்தலானிச
நிவாசஸ்தேன கர்த்தவ்யோ வனேகிரி குஹாதிஷு
நாம்தோளி காச்ச மாரோஹே தஸ்வாரோஹணவர்ஜித:
பாதசாரீச சம்பூய சரேத்பூ வலயேசதா

எனநிராபாரிகளின் லக்ஷணங்களனேகமாக சித்தாந்த கிரந்தங்களில் சொல்லப் பட்டிருக்கிறது, மோக்ஷாபேக்ஷையுள்ள மாணவனானவன் இப்படிப்பட்ட நிராபரஸ்திதியை யடையவேண்டுமென மதஸ்தாபகர்களின் உத்தேசமாயிருக்கிறது, உச்ச சிக்ஷணத்தை யநுக்கிரஹித்த உபாத்தியாயனிடத்தில் மாணவன் எவ்வளவு கிருதக்ஞதையைக் காண்பித்தாலும் அந்த ருணபாரத்தைத்தீர்க்க முடியாததைப்போல இச்சித்த புருஷனை நிராபாரியானவன் இம் மூலாசார்யர்களிடத்தில் சிரருணியா யிருக்கவேவேண்டும், உலகில் துவைதாத்வைத மதாவலம்பிகளான பிரம்மசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்யாசி, ஆரூடன், என்னுமிப்பதவிகளையடைந்தவர்களெல்லோரும் தங்கள் தங்கள் மதாசார்யர்களிடத்தில் அசாதாரண பக்தியைவைத்து கிருதகிருத்தியராயிருப்பதைப்போல வீரசைவ மதாவலம்பிகளான பிரஹ்மசர்யாதி ஆஸ்ரமிகள் தம்மையநுக்கிரகித்த மதஸ்தாபகரான மூலகுருக்களிடத்தில் அதிதரசாதாரண பக்தியைவைத்து கிருதகிருத்தியராகவேண்டும், லிங்காங்கசாமரஸ்ய ரூபமான முக்தியையடைய இம்மூன்று விதங்களும் மாடி(மெத்தை)மீதேரவைத்துள்ள ஏணியிலுள்ள மூன்று படிகளைப்போலிருக்கும், ஆரோ

ஹன் கிரமமாக ஒவ்வொரு படிகளின் மீதும் ஏறிப்போவதைப் போல சாதகனானவன் மெள்ள மெள்ள சாமான்ய வீரசைவ லக்ஷணங்களெல்லாம் அநுபவத்திற்கு கொண்டுவந்த பிறகு விசேஷ வீரசைவ லக்ஷணங்களை யநுஷ்டித்துப் பிறகு முடிவான நிராபார வீரசைவ பூமியில் பிரவேசித்து "ஏகேனஜன்மனு முக்தி:" என்னும் சிவோக்தியை அன்வர்த்தகமாக்கவேண்டும் இப்படிப்பட்டவனே நிஜமான வீரசைவனாகிறான். மாமிசபிண்ட நிவிர்த்தி பூர்வகமாக மந்திர பிண்டத்வாபாதகமான சிவதீக்ஷா வசரத்தில் ஆசார்யருபதேசித்த இம்மூன்று விதங்களையும் கிரமத்துடனனுஷ்டித்து பரிபக்குவ சித்தனாகி லௌகிகாபிமானத்தை தியாகம் செய்து தக்த படத்தை (சுட்டதுணியை) ப்போல "ஆபாதக:" தேஹதாரியாயிருப்பவனேநிராபாரியெனப்படுவான் இவர்களையே சிவயோகி யென்றும், லிங்காரூட னென்றும், சொல்வதுண்டு, சாமான்ய வீரசைவனுக்குள்ள குரு பக்தியைக் காட்டிலும் விசேஷ வீரசைவனுடைய குரு பக்தி அதிகமாயிருக்கிறது, இவர்களிருவர்களிடத்திலுள்ள குரு பக்தியைவிட நிராபாரிகளுக்குள்ள குரு பக்தியே அதிகமானதாயிருக்கிறது பஞ்சகலச ஸ்தபானத்வாரா ஸ்ரீ பஞ்சாசார்யர்களின் சாக்ஷியாக குரு உபதேச மென்னும் சூட்மவித்தானது சிஷ்யனுடைய இருதய பூமியில் விதைத்த பிறகு அவ்வுப தேசமான விதையே இம்மூன்றுபடிகளிலும் கிரமமாக முளைத்துப் பயிராகவளர்ந்து பல னாகின்றது, இம்மூன்று வகுப்புகளிலும் எவ்வகுப்பிலானாலும் முந்திய சிவலிங்கதாரணபூர்வகமாக விதைத்த உபதேசமான வித்து வேறாவதில்லை, இவ்விதையை எடுத்துவிட்டு வேறொரு குருவினால் மற்றொரு உபதேச விதையை யடைந்தாலவன் கண்டிப்பாக குருத்ரோஹியாகிறான், இப்படியாக எந்த சித்தாந்தத்திலும், சாமான்யனுக்கொரு உபதேசமும், விசேஷனுக்கொரு உபதேசமும் நிராபாரிக்கொரு உபதேசமெனச் சொல்லவில்லை. நிராபாரியானவன் தீக்ஷாவசரத்தி லநுக்கிரகித்த சிவலிங்கத்தை யாவதும் மஹா மந்திரத்தையாவதும், அஷ்டாவர்ண ஷட்ஸ்த லங்களையாவதும் விடவில்லை.

இப்படி யிருந்தாலும் சிற்சில விடங்களில் நிராபாரிகளுக்கொருகுருக்களென்றும், விசேஷர்களுக்கொரு குருக்களென்றும், சாமான்யர்களுக்கொரு குருக்களெனவும், வாதிக்கத்துடங்கியிருக்கிறார்கள், இது வீரசைவ மதஸ்தாபகர்களான பஞ்சாசார்யர்களின் சித்தாந்தத்திற்கு முற்றும் விரோதமாயிருக்கிறது, ஞானாதிக்யத்தாலாகப்பட்ட நிராபாரியின் அதிகாரமானது கலிகால மஹிமையினால் தகப்பன் ஸ்தானத்தை மகன் அடைவதுபோலவும் வீடுமடங்களைகட்டிக்கொண்டு சேமித்து வைத்திருந்த திரவ்

யங்களெல்லாம் நஷ்டமான அபிமானத்தினால் நிராபாரி யென்னு மங்கித நாமகரணத்தைபடைந்தும் தான்பிராணன்விடுங்காலத்தில் தன்னுடைய ஸ்தானத்திற்கு மற்றொருவனை உட்காரவைக்கிறான், அவனால் மற்றொருவன் வருகிறான், இப்படியாக நிராபாரிகள் தங்கள் மடங்களின் விஷயத்தில் கிரகஸ்தர்களை விடஇழிவாக நடத்த வாரம்பித்திருக்கிறார்கள்,

ஆத்ம சக்தியை உயர்த்தியும் தேஹசக்தியைத்தாழ்த்தியும், கேவல லிங்கவிஹாரியானவனே உண்மையான நிராபாரியாகிறான், இப்பெயர் வைராக்ய பலத்தினால் வருவதல்லாமல் பெரிய பெரிய மடங்களைக் கட்டிக்கொள்வதினால் வரத்தக்கவையல்ல இப்படிப் பட்டவுண்மையான நிராபாரிகளுக்கு வாஹனாதிகளின் அபேக்ஷையாவதும் திரவ்யசங்க்ரஹ ஆசையாவதும் ஸ்வாபிமான மாவதும் இவைகளொன்று மிருப்பதில்லை, இவைகளைவிட்டு பலாத்காரத்தினால் நிராபாரிகளெனப் பெயர்களைவைத்துக் கொண்டுள்ள தர்மசாஸ்திர ஞானசூனியரான சில டாம்பீக விரக்தர் மதஸ்தாபகர்களைவிட ஒரு மடங்கும் சிவனைவிடத் தாமேபெரிய வரெனப் பிரலாபித்து நவீனநாஸ்திகராகக் காணப்படுகிறார்கள், மற்றும்,

நிராபாரி யென்றும் நாமமானது பரம்பரையாகவாவது அல்லது தந்தைபால்மகனுக்கு நாமகரணம் செய்யப்படும், சிவப் பசங்கரப்ப, முதலான சப்தாதிகளைப்போல கேவல அபிமானத் தினால் வந்தவையல்ல இவைபரம்பரையாகவாவது, அபிமான த்தினாலாவது, வருவதாயிருந்தால் யார் வேண்டுமானாலும் நிரா பாரிக ளெனச்சொல்லிக் கொள்ளலாம், இந்நிராபாரி யென்னும் விபவகாரமானது கேவலம் யோகத்தினாலேயே யடையவேண்டிய தேயொழிய பலாத்காரத்தினால் வரப்பட்டவையல்ல,

நிவிருத்தகர்ம பாரத்வான் நிராபார இதிஸ்மிருத:

எவர் பிரபஞ்சவிபவகாரங்களெல்லாம் விட்டிருப்பாரோ அவரே நிராபாரியென சித்தாந்த கிரந்தங்களினால் ஸ்பஷ்டமாகிறது, இப்படியாக யோகாந்தத்தை விட்டு சித்தாந்தத்திற்கு விரோத மாகவுள்ள ஒருவன் மிருத்புவசமானால் (சிவைக்கியமடைந்தால்) அவன் ஸ்தானத்திற்கு மற்றொருவனும் அவனுக்குப் பிறகு வேறொருவனாக யிப்படியே நிராபாரிகளெனச் சொல்லிக்கொள்வதானது கேவலம் கேலிக்கிடமாகியும் நாடகமாகியும் பரிணமிப்ப (வேறுபடுவ) தைப்போலவும், மற்றும் தந்தையானவன் குமாரனைப் பாலாக்ஷனெனக் கூப்பிடுவதைப்போல கேவல அங்கித நாமமாகப் பரிணமிக் (அடையாளப் பெயராகப்படு) கிறது, பின்னும் சித்தாந்தத்தி (தருக்க முடிவி) ன்படியாக ஜாதி குலாசாரங்

களின் தொடர்ச்சியில்லாத இந்திராபாரி யென்பவன் சித்தவர்க்கத்
தைச்சேர்ந்தவனல்லாமல் சாதக (அப்பியாச) வர்க்கத்தில் சேர்ந்
தவனல்லன், எவன் சாதகனோ (அப்பியாசியோ) அவனே ஜாதி
குலாசாரங்களில் பக்தனாகிறான், தீக்ஷாகாலத்தில் ஸ்ரீ குருவினா
லுபதேசிக்கப்பட்டு உபாசனா சாமர்த்யத்தை யடைந்து பரிபக்
குவ சித்தனாகி வைராக்கியத்தை யவலம்பித்து சதீ சுதாதி பிர
பஞ்ச வ்யாமோஹத்தை (மனைவி, புத்திரன் முதலான உலகஆ
சையை)யும் பொன், பெண், மண்ணின், ஆசையை விட்டு "கரதல
பிக்ஷதருதலவாச" என்னும் சுருதியின்படிக்கு ஆஸ்ரயித்துக்
கொண்டும் "நகுர்யாத் வஸ்து சங்கிரஹம்" என்னும் சுருதியைப்
போல சம்சாரிகளாஸ்ரயிக்கும் மாதிரியாக தனதான்ய சங்கிர
ஹம் செய்யாமல் கிராமத்திற்கு ஒரு இரவும் பட்டணத்திற்கு
பஞ்சராத்திரியு (ஐந்து இரவு)மாக காலத்தைக் கழித்துக்
கொண்டு தேஹ(சரீர)த்தை ஜீர்ணம் செய்துக் கொண்டிருப்
பவனே நிஜமான நிராபாரி யெனப்படுவான், இதற்கு மாறாக சம்
சாரிகளைப்போல வீடுமடங்களை யபிவிர்த்தி செய்துக் கொண்டும்
கனகமகுடாதி யாபரணங்களாலும் வாஹனாரூடனாகி மஹாராஜ
ரைப்போல நகாரி, கௌபத்திக்களுடன் கூடினநித்தியோர்ச்சவம்,
பக்ஷோர்ச்சவம், மாஸோர்ச்சவம், வருடோர்ச்சவம், ரஜதோர்ச்
சவம். சுவர்ணோச்சவங்களில் ஆசக்தரானவர்கள், சாபாரிகளா
வார்களே யல்லாமல் நிராபாரிகளென்றைக்கு மாகமாட்டார்கள்.
பேருக்கு பால், பருகுவ (குடிப்ப)தற்கு மோரில்லை, யென்னும்
பழமொழியைப்போல இப்படிப்பட்டவர்கள் நிராபாரிகளெனச்
சொல்லிக்கொண்டால்

தேஷா மிந்த்ரிய நிக்ரஹோ யதிபவேத் விம்த்ய :பலவேத் சாகரே

என்பதைப்போல இப்படிப்பட்டவர்களுக்கு இந்திரிய நிக்
ரஹமாகுமென்றும், இந்திரிய நிக்ரஹமாகாதிருந்தால் ஸ்ரீஜகத்
குருரேணுகாதி பூர்வாசார்யர்கள் போதித்த பிரகாரம் அங்கேந்தி
ரியங்களெல்லாம லிங்கேந்திரியங்களாகு மென்றும் சொல்லியிரு
க்கிறார்கள், இதற்கு மாறுபட்ட நாமதாரிகளான நிராபாரிகளு
க்கு ஷட் ஸ்தலசித்தி ரூபமான மோக்ஷமென்பது அப்ரசித்தமே
யாகிறது, சம்சார சாகரத்தில் அலைகளைப்போல புறப்பட்டுக்கொ
ண்டிருக்கும் சுகதுக்கங்களின் மோதுதலை எவன் தப்பித்து(நீக்கி)
க்கொள்வ தில்லையோ அப்படிப்பட்டவன் நிராபாரி யென்னும்
சப்தத்திற்கு வெகுதூரமாயுள்ளவனேயொழியசமீபித்தவனல்ல,

ஜனனமரணாத்மகமான கோர சம்சார மென்னும் விஷக்கட
லில்மூழ்கி பஹிரிந்திரிய (வெளிஇந்திரிய) ங்களிலெல்லாம் விஷம்
வியாபித்து (பரவி) அந்தரிந்திரிய (உள்ளிந்திரிய)த்துள்ளும் பிர
வேசித்து (நுழைந்து) மூர்ச்சிதனாகி விஷஜ்வாலையினால் வெந்து
தக்கையாகி அலைந்துக்கொண்டிருக்கும் இந்த ஹீனமானமானவ

(மானிட) தேஹத்தை ஆசார்யபகவத்பாதர் சிவதீக்ஷா லிங்கதா ரணைப தேசங்களினால் பரிசுத்தம்செய்து அவரவர்களின் மந்த, தீவிர, தீவிரதர, சக்திபாதகங்களை திவ்பதிருஷ்டியினாலறிந்துசாமா ன்ய, விசேஷ, அல்லது நிராபாரிகளின், தர்ம ரஹஸ்யத்தைப் போதித்து ஆசிர்வதிக்கிறார்கள், சிஷ்பன் மந்தாதி காரியாயிருந் தால் சாமான்ய வீரசைவ னெனப்படுகிறான், தீவிராதிகாரியா யிருந்தால் விசேஷ வீரசைவ னெனப்படுகிறான், தீவிரதர அதி காரியாயிருந்தால் நிராபாரி யெனப்படுகிறான், வீரசைவ மதத் தில் ஜனனமெடுத்தவ ரெல்லாம் நிராபாரிகளாகமாட்டார்கள்.

சர்வ சம்சார சவுக்யானி த்யக்வாசித்தம் சிவேபவேத்

இப்படிப்பட்ட வாக்கியங்களால் நிராபாரியான மஹாநு பாவன் சிவரூபியாகிறான், முமூக்ஷுவான பிறநியொரு லிங்காங் கியும் ஆரூடஸ்தானத்தைப்போல பவித்ரமாகியுள்ள நிராபாரிஸ் தலத்தையடைய அருகனாயிருந்தாலும் இப்பொழுதுஒவ்வொரு ஜாதியைப்போல நிராபாரிகளின் ஜாதியொன்று வேறாக மாறுபா டாயிருக்கிறதைப் பார்க்கில் கேலிக்கிடமாயிருக்கிறது, ஒரு நிரா பாரியானவன் தன்ஸ்தூலசரீரத்தை விட்டால் அந்த ஸ்தானத்தி ற்கு ஒன்றுமறியாத சிறுவனைக் கொண்டுவந்து உட்காரவைத்து அவனை நிராபாரியெனக்கூப்பிடும் சம்பிரதாயத்தை வைத்திருக்கி றார்கள், அபக்குவ மதியான (பக்குவமில்லாத அறிவுடைய) அச் சிறுவன். நான் நிராபாரியென்னும் அஹம்பாவத்தினால்-நான்பீரின ஸ்தலத்தவன், சூன்யஸ்தலத்தவன் என்று சொல்லிக்கொண்டும் அஷ்டாவர்ண ஷட்ஸ்தலங்களைப் பூலோகத்தில் ஸ்தாபித்து எல் லாரையும் உத்தாரகம்செய்த ஜகதாசார்யர்களைவிடத் தான் உயர் ந்தவனென்று சொல்லிக்கொள்கிறான். இப்படிப்பட்ட உண்மை யான நிராபாரியுங் கூடத்தான் நிராபாரியாவதற்கு அருகதையான சிவதீக்ஷையைச் செய்தவர்யார், இம்மதத்திற்கு மூலாசார்யர் யார், சிவலிங்கத்தை, யநுக்கிரகித்தவர் யார், இவர்களின் அநுக் கிரகத்தினாலல்லவா இத்தசை யெனக்குண்டாயிற்றென்றுபிறதி க்ஷணமும் அந்த ஜகதாசார்யர்களின் நாமஸ்மரணம் செய்ய வேண்டியிருக்கிறது, மதஸ்தாபகாசார்யர்கள் சாமான்ய விசேஷ, நிராபாரிகளுக் கெல்லாம் முக்கியஸ்தர்களாயிருக்கிறார்கள்,

(22-12-30, மற்றும் 5-1-31, பஞ்சாசார்ய பிரபா பத்திரிகை.)

---

ஸ்ரீ மதாசார் யேப்யோ நம:

## குரு வர்க்கத்தின், கர்த்தவ்யம்.

உத்தமரான உபாத்தியாயர் பாலகர்களை வித்தியார்த்திக ளாகவும், குணநிகர்களாகவும் செய்வதில் எப்படி முக்கிய கர்த்த ரோ, அப்படியே மததர்மாதி காரியத்தை வகித்த குருக்கள்

தங்கள் மதத்தின் ஜனங்களை சமஸ்கார சம்பன்னராகியும் அதிசய பக்தி யுதர்களாகவும், ஸ்வதர்மா சக்தர்களாகவும், ஞானிகளாகவும் செய்வதில் முக்கியக் காரணர்களா யிருக்கிறார்கள். உத்தமமான தோணியை அடைந்த மனிதர்கள் எப்படிச்சுகமாக நதியைக் கடப்பரோ அப்படியே சத்குருக்களை யனுசரித்த சிஷ்யர்கள் சம்சாரசாகரத்தைக் கடப்பார்கள். குருக்களிடத்தில் அச்சக்தியானது தனகனகாதி (பொன் முதலான) வஸ்துக்களினாலும், சௌந்தர்ய வேஷாதிகளினாலும், கபடங்களினாலும், வாக்காடம்பரத்தினாலும், உண்டாவதில்லை. குணங்களினாலும், வித்தை (கல்வி) களினாலும், தர்மசித்தாந்த கிரந்தாப்பியாசத்தினாலும், தர்மானுஷ்டானத்தினாலும், தத்வ ஞானநுபவத்தினாலும், உண்டாகின்றது. எவரிடத்தி லிச்சக்தி யிருப்பதில்லையோ அவர் பெயருக்கு குருக்களென்னப்பட்டு மூர்க்க ஜனங்களைக்கபடோக்திகளினால் சுவாதீனர்களாகச் செய்துக்கொண்டு அவர்களினால் திரவ்யம் சேகரித் ததைத் தங்கள் போகத்திற்கும், தங்கள் பந்துக்களைப் போஷிப்பதற்கும், விநியோகிப்பார்கள். உத்தமரான பிரபுக்கள் பிரஜைகளிடத்தில் நியாயானுசாரமாக திரவ்யத்தைச் சேகரித்து அதை அப்பிரஜைகளின் சுகத்துக்காகவே எப்படி யுபயோகிப்பாரோ அப்படியே அச்சக்தியை அடைந்த குருக்கள் சிஷ்யர்களினால் நியாயானுசாரமாக திரவியத்தைச் சம்பாதித்து அதை யவர்களின் தர்மம், வித்தை (கல்வி) முதலானவைகளின் விர்த்திக்காக உபயோகிப்பார்கள். ஆனால் குலசீலாதிகளினால் உத்தமர்களான ஜனங்களில் யாராவது கபட குருக்களின் சம்பந்தத்தை யடைந்தாலவர்.

"சம்சர்க்கஜா தோஷ குணா பவந்தி'

என்னும் நியாயமிருப்பதால் தர்மரஹிதரும் அஞ்ஞானிகளுமாவார்கள், அவர்கள் இஹலோகத்தில் நிந்திதராகி பரலோகத்திலும் சத்கதி (நல்ல பதவி)யை யடைவதில்லை.

வீரசைவமானது சிவோக்தமானதினால் சிவமத மென்றும், சிவபக்தர்களினாலே ஆஸ்ரயிக்கப்படுவதற்கு யோக்கிய மாயிருப்பதால் சிவபக்தமத மென்றும், பிரசித்தமாகிச் சிவபஞ்சமுகோத்பூதர்களான ஸ்ரீஜகத்குருபஞ்சாசாரியர்களினாலேஸ்தாபிக்கப்பட்டு மோக்ஷதாபகமாயிருக்கிறது, இதையாஸ்ரயித்த ஜனங்களுக்கு சம்ஸ்காரங்களைக் கொடுப்பதினாலும் சிவதர்மங்களான, குரு லிங்க, ஜங்கம, பஸ்ம, ருத்ராக்ஷ, மந்திர, பாதோதக, பிரசாதங்களென்னும் அஷ்டாவர்ண கிரியைகளையும். லிங்காசாரம், சதாசாரம் சிவாசாரம், பிருத்யாசாரம், கணாசாரங்களென்னும் பஞ்சாசாரங்களையும், ஷட்ஸ்தல லிங்காங்க சமரசாத்மகமான சிவக்ஞானத்தையுமுபதேசிப்பதில் சத்குருக்களே சக்தரா யிருக்கிறார்கள், அச்சத்குருக்களிடத்தில், வேதவேதாங்காதி வித்யா வைதுஷ்யம் சிவாத்வைத சித்தாந்த பாண்டித்யம், சதுஷ்சக்தி, தந்திரம், பிர

யோகஸம்புண்யம், சத்யவாதித்யம், லோபமோஹ ராஹித்யம், பிராந்திராஹித்யம், நிச்சயபுத்தி, சிவதர்மநிஷ்டை, குருபரம்பராகத சாஸ்த்ரீயாசாரசம்பத்து, சிவதியானசக்தி, பஸ்ம திரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரணசக்தி, பாஹ்யாந்தர் லிங்கதாரண சம்பத்து, பாஹியாந்தர் லிங்கோபாசனை, ஏகோத்தர சதஸ்தலக் ஞானம், லிங்காங்கசம்மந்த விசாரம், முதலான லக்ஷணங்களிருக்கவேண்டும்,

புராதனகாலத்தில் இப்படிப்பட்ட சத்குருக்களே இம்மதஸ்தரின் மடாதிகாரங்களை வஹித்திருந்தார்களானதினு லக்காலத்திலிருந்த இம்மதஸ்தரிடத்தில், சிவபக்தி, சிவதர்மம், சிவஞ்ஞானங்கள், உன்னதநிலை யடைந்திருந்ததெனச்சொல்லலாம், ஆனதினு லக்காலத்திலிம் மதஸ்தரிற் சிலர் மஹாத்மராயும், சிலர் கிரந்தகர்த்தாக்களாயுமிருந்தார்கள், இன்னுமக்குருக்களுக்கு, ஸ்வமத, பரமதஸ்தர்களான வனேக ராஜாக்களும் பக்தர்களாகி அவர்களின் மடங்களுக்கு விருத்தி, மான்யமுதலானவநுகூலங்களைச்செய்துக் கொடுத்திருக்கிறார்கள், சுவற்பகாலமாக இம்மதத்திலப்படிப் பட்ட சத்குருக்களின் சங்கியை குறைவடைந்தபடியாலிம்மதஸ்தருக்கு பிறமத்ஸ்தர்களினால் சில தொந்தரவுகளுண்டாய்க்கொண்டுவந்தது மற்று மிம்மதத்தின் ஜனங்களிற் சிலர் மூடர்களும், அசம்ஸ்காரர்களுமாகிஸ்வதர்மங்களின் சுரூபங்களையறியாதவர்களாகியும்தங்கள் கோத்திரம், சூத்திரம், பிரவரம், சாகைகளையும், ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யரின் மஹத்துவங்களையும், தெரியாதவர்களானார்கள், இப்படிப்பட்டவர்களிடத்திற் சில கபடகுருக்களானவர்கள் தங்களின் கபடவேதாந்தோப தேசத்தினு லவர்களைச்சுவாதீனர்களாகச்செய்துக் கொண்டு அவர்களுக்கு வேதவேதாங்காதி வித்தைகளிலும், ஸ்வதர்மங்களிலும் அலட்சியபுத்தியை யுண்டாக்கி துராசாரங்களையே போதித்து ஸ்வார்த்தபரராகி தர்மகாதகராயிருக்கிறார்கள், ஆனாலுமிப்பொழுது இம்மதத்திற் சிலர் சத்குருக்களிருந்து தங்கள் கர்த்தவ்யத்தை நிறைவேற்றிக்கொண்டிருப்பதாலேயே இம்மதத்தின் ஜனங்களெல்லோரும் கபடகுருக்களின் வசமாகவில்லையானாலும், சத்குருக்களின் சங்க் (எண்ணிக்கை) யை விட கபடகுருக்களின் சங்கியை விசேஷமாயிருப்பதினால் தர்மசுதாரணை நிர்விக்கினமாக நிறைவேறுவதில்லை, ஆனதினால் மாஹேஸ்வரர்கள் தங்கள் வடுக்(புத்திரர்)களை வேதவேதாங்காதி வித்யாசம்பன்னர்களாகியும், வீரசைவ தர்மசித்தாந்த கிரந்தங்களில் பண்டிதர்களாகியும், செய்யவேண்டியதற்கான பிரயத்தினங்களை விசேஷமாக ஆரம்பித்தாலின்னும் சுவற்பகாலத்திலேயே இம்மதத்தில் சத்குருக்களின் சங்க்யை யதிகரித்து இம்மதஸ்தர்களிடத்தில் தர்மாபிவிருத்தியுண்டாவதில் எவ்விதசந்தேஹமுமில்லை,

ஸ்ரீ மதாசார்ய சரணேப்யோ நம:
30-9-29-பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு.

# வீரசைவ (லிங்காயுத) விஜயம்.

## ஷட்வித சைவ பிரபேதங்கள்

### சுலோகம்.

அநாத்யாதி விசுத்தஞ்ச கேவலம் மிஸ்ரமேவச
வீரசைவ மிதிப்ரோக்தம் ஷட்விதம் சாஸ்திரசம்மதம்
அநாதி: ஸ்யாத்பர சிவஸ்சாதிஸ் தக்ர சதாசிவ:
விசுத்தம், சைவ மத்வைதம் கேவலம் சிவயோகவத்
தீக்ஷாயேனம் விமிஸ்ரந்து வீரசைவ மதோத்தமம்
விசுத்தாநாகி மிஸ்ராணு மந்தர் லிங்கஸ்ய தாரணம்
ஆதிகேவல வீராணும் பஹிர் லிங்கஸ்ய தாரணம்
அந்தர் பஹிஸ்ஸ சம்வியாப்ய தன்மயத் வேநவீரதா

(1) அனுதி சைவம், பரசிவனே இதனின் அநுஷ்டாத்ருவாகியிருக்கிறுன். (2) ஆதி சைவம், சதாசிவ மஹேஸ்வராதி சகல தேவதைகளிலும் இம்மதமுண்டு (3) விசுத்த சைவர், அத்வைதிகளே விசுத்த சைவர்களா யிருக்கிறுர்கள். (4) கேவல சைவர் தக்ஷணுமூர்த்தி,சனத் குமாராதிகள்,சுகர்,வாமதேவாதிகள் கேவல சைவர்களாயிருக்கிறுர்கள். (5) மிசிரசைவர், அகஸ்தியர் வசிஷ்டர் விசுவாமித்ராதி ஸ்ரௌதமார்த்த மஹரிஷிகளெல்லாரும் மிசிர சைவராயிருக்கிறுர்கள். (6) வீரசைவர், உபமன்யு, நாராயணுதிகள், நந்தியாதி பிரமதர்கள், சுராசுர மஹருஷிகள், முனி முக்கியர்கள், வீரசைவராயிருக்கிறுர்கள். இவர்களில், 1, 3, 5, லக்கமிட்ட சைவர்களுக்கு அந்தர் லிங்கமும், 2,4,6, லக்கமிட்ட சைவர்களுக்கு பஹிர் லிங்க தாரணமாகவு மிருக்கிறது. இது இவ்வெல்லாசைவங்களிலும் வியாபகமானதிஞல் வீரசைவமே சர்வ சிரேஷ்டமானது.

### வீரசைவாசார லக்ஷணங்கள்.

இன்னுலிசை சித்தராம திரிமல் திரவ l
நெந்நபித்ரு மாத்ருசுக வெம்புவ தாணவ மலம l
துன்னததகுல கோத்ர மெம்தெனலு மாயாபலம்
தனம் கார்மிகமலம் l முன்னிவம்பிடபேக
தென்தெனலு சிவசிவெய l ரென்ன பித்ரு மாத்ருகளு
சிவகும் சிவநொடநே l என்னவல்லெம்பு வம்கில்லா
மலத்ரயம் கேளெந்து நிரவிசிதனு l ஜாதி சூதக
ஜனனசூதகங்களுமஹா l ப்ரேத சூதக நித்திய சூதக
மதுச்சிஷ்ட l சூதகமிவேபஞ்ச சூதகம் ஸ்தாவராத்
யன்யலிங்கத பஜநெயா l ஓதன்ய தீர்த்த மன்ய
க்ஷேத்ர யாத்ரெகளி l காதுரதெவோவு தீகன்ய
தேவார்ச்சனெவி l நீத பவியாத வாதன்ன
தாய்தந்தெ பந்துகளெனலு பவிசங்கவு l

என் தந்தை, என் தாய், என் மக்கள் என்னும், அபிமானமே ஆணவமலமெனப்படுகிறது குலங்கோத்ராதிகளின் அபிமானமே மாயாமலமெனப்படுகிறது. தனதி (பொருள்)களின் அபிமானமே காமிக மலமெனப்படுகிறது. மும்மலங்களான இம்மூன்றையும், விடவேண்டியது. எப்படியென்றால் சிவனே தந்தை, பார்வதியே தாய், சிவாசாரத்தவர்களே என் குலஸ்தர்கள், தனதி சர்வமும், சிவனதேயல்லாமல் என்னுடைய தொன்றுமில்லை. என்றிப்படியாக அபிமான சூனியனாயிருக்கவேண்டியது. மற்றும் ஜாதி சூதகம், ஜாதியபிமான பேதத்தாலுண்டாயிருக்கிறது. ஜாதா சௌசம், ஜனன சூதகமாயிருக்கிறது. மிருதா சௌசம் பிரேத சூதகமாயிருக்கிறது. ஸ்பர்சதோஷம் நித்திய சூதகமாய் இருக்கிறது. எச்சில் முதலானது உச்சிஷ்ட சூதகமாயிருக்கிறது. இவைகளே பஞ்ச சூதகங்களாகும். இவைகளை விடவேண்டியது.

எப்படியென்றால் எச்சாதியவனாலும், மனம் பரிபக்குவமாகி லிங்கதீக்ஷையானால் அவர்களெல்லோரும் பரிசுத்தமான சிவகுலமே ஆவதாலும் இன்னும் லிங்கஸ்தனனபிறகு பூர்வ ஜாதிபேத தாரதம்மியங்கள் அனுவசியமென்று அவைகளை விடவேண்டியது. லிங்கமில்லாதவன் எச்சாதியவனானாலும், அவன் அசிவகுல மானதினால் அச்சம்மந்தம்லிங்கதாரிகளுக்கு யோக்கியமானதல்ல. இப்படி தெரிந்து விடுவதே ஜாதி சூதக பரித்யாகமாகும். லிங்க தீக்ஷையாவதே ஜனனமாயிருக்கிறது. இது பவித்திரமானதினால் இது முதல்கொண்டு ஜாதா சௌச பரித்தியாகமே ஜனன சூதகத்தை விடுவதாயிருக்கிறது. இன்னும் லிங்கதாரியின் பிராணன். இஷ்ட லிங்கத்திற்குச்சம்மந்தப்பட்டும் குரு கொடுத்த லிங்கம், பிராணலிங்கமென்றும் அறிக்கைகொள்வதால் லிங்கதாரியின் பிராணன் லிங்கைக்யமாகுமேயல்லாமல் லிங்கதாரிக்குப் பவிகளைப்போல ப்ராணோத் கிரமண மில்லை. ஆனதினால் லிங்கதாரியின் சரீரம் மரணமடைந்தால் லிங்கதாரிகளுக்கு மரண சௌசமில்லையென்று விடுவதே பிரேதசூதக பரித்யாகமாயிருக்கிறது. எப்போதும் சிவலிங்க பஸ்ம ருத்ராக்ஷதாரணம், பிரணவ பஞ்சாக்ஷரி, ஜபங்களினால் பரிசுத்தனாயுள்ள லிங்கதாரிக்கு அவஸ்தாத்திரயங், (சாக்கிரம், சொர்ப்பனம். சுழுத்திஎன்னும், மூன்றவஸ்தை) களிலும், அசுசி சம்மந்தமில்லை. எப்படியென்றால் தாமரையிலையைஜலம் நனைக்கா (ஒட்டா) வாறு போல அசுசித்வமானது லிங்கதாரியை நனைப்ப (ஒட்டுவ)தில்லையென்றறிந்து நித்திய பூதத்துவ நிச்சய பூர்வமாக அபவித்ரதா சங்கையை (அசுத்தவழக்கத்தை) விட்டிருப்பதே நித்ய சூதகபரித்யாகமாயிருக்கிறது. லிங்கதாரிகளின் ஆரோகணம் அமிர்தபிரௌசனம் துல்லிய(சுத்த)மானது. லிங்கதாரிகளின் ஜலப்பிராசனம்

சுத்தாசமனசத்ருசமானது. பிரணவ பஞ்சாக்ஷரி மந்திரம், சம் யுதனுன அவ்விலிங்க தாரியின் முகம், பல், நாக்கு, முதலானவை களின் ஸ்பர்சனமானது. இடைவேளைபக்ஷணத்திற்குச் சமான மானது இன்னும்,லிங்காங்கியின்எச்சில் சோமபான(மதுபான)த் தைப்போல பரிசுத்தமானது. இப்படியாக நிஸ்சந்தேஹமாகி எச்சிலென்னும், பேதத்தைவிடுவதே முக்கியதர்மமாயிருக்கிறது. குருவின் எச்சில் சிஷ்யனுக்குத் தோஷமல்ல. புருஷனின் எச் சில் பெண்ஜாதிக்குப் பிரத்யவாயுவல்ல.

அபிவாயஸ் சண்டால: சிவ இதி வாசம்வதேத்
தேநசஹ சம்பவசேத் தேன சஹபுஜ்ஜீத

சண்டாளனுனுலும், சிவமந்திரத்தைப் படனம் செய் தால் அவனுடன் சேர்ந்து சாப்பிடவேண்டும் என்று நிகமாகமங் கள் சொல்வதால் சிவபக்தரிடத்தில் பரஸ்பரமாக எச்சில் தோஷ மில்லை. சமமூர்த்திகளான மாஹேஸ்வர புக்தோச்சிஷ்டம்பக்தி பாவனமானது. ஜங்கமர்கள் சலித்த(உண்ட)து பிரசாத பாவன மாயிருக்கிறது குருலிங்க ஜங்கமத்திற் கர்ப்பிதமானது பதிதபாவன மா (பதிதர்களின் வாதித்யத்தை பரிகரிக்கிறதா) யிருக்கிறது. இப் படியாகத் தெரிந்து லிங்காங்கசங்கமில்லாத பவிகளின் சம்மந்தத் தை எச்சிலென்று விடுவதே உச்சிஷ்ட சூதக பரித்யாகமாயிருக்கி றது. இம்மாதிரியாக பஞ்ச சூதகங்களையும் பரித்யாகம் செய்ய (முற்றும் விட) வேண்டும்.

இன்னும் சமாதியில் ஆத்மலிங்காராதனையும். தியானத்தில் சிவலிங்கார்ச்சனையும், அரோகணத்தில் குரு கொடுத்துத் தான் தரித்துள்ள இஷ்டலிங்கார்ச்சனையும சிவ தருமத்தில் ஜங்கம லிங் கார்ச்சனையும், ஆகப் பஞ்ச லிங்கார்ச்சனைகளையும் செய்யவேண்டு மேயல்லாமல்,பாஹியங்களான க்ஷேத்திர முதலானவைகளிலுள்ள ஸ்தாவர லிங்கங்களின் அர்ச்சனையை செய்யக்கூடாது ஆனுலதை விரோதிக்கக்கூடாது, குரு, லிங்க ஜங்கம பாதோதகமே புண்ணிய தீர்த்த மல்லாமல் இதர (அன்னிய)மான தீர்த்தங்களைப் பரிக்ரஹிக் க(கைக்கொள்ள)க்கூடாது ஜங்கம குருமடம் நிஜசமாதிஸ்தலங்க ளேபுண்ணிய க்ஷேத்திரங்களல்லாமல் இதரக்ஷேத்திரயாத்திரை களுக்குப்போகக்கூடாது. தன் குரு முகத்தில் தீக்ஷாக்கிரமத்தில் தனக்கநுக்கிரஹமாக வந்திருக்கும் இஷ்ட லிங்கார்ச்சனையும் வீரசைவாசாரமும் தனக்குக்கர்த்வ்விய (செய்யத் தக்கதேய) மல் லாமல் இதர தேவதைகளையும் இதர தர்மங்களையும் தான் பஜிக்கக்கூ டாது, லிங்காங்க சங்கமில்லாத பவிகளை, அப்பா, அண்ணு,தம்பி மைத்துனு, அக்கா, அம்மா, மகனே யென்றுக்கூப்பிடக்கூடாது, பவிகளிடத்தில் அபிமானம் வைப்பதே பவிசங்கமெனப்படும் இப்படிப்பட்ட பவிசங்கத்தை விடவேண்டியது

### வீரசைவ விதி, சுலோஹம்.

*லிங்கேன சமனையத்யம் பிராணஸ்யெஷ்டி நசர்வதா*
*அலிங்கிசங்க சூன்யத்வம் ஸ்வவிரோதி நிஹம்த்ருதா*
*ஸ்வத்யா பிமான ராஹித்யம் சர்வஸ் மின்சைவபுத்திதா*
*பஞ்சலக்ஷண மெதத்தி வீரசைவம் பிரசக்ஷதெ,*

லிங்கத்திற்கும், தன் பிராணனுக்கும், முடிபோடப்பட்டிருக் கிறது. லிங்கமெங்கிருக்கிறதோ பிராணனுமங்கிருக்கிறது, இம்மா திரியாக பிராணனுக்கும் லிங்கத்திற்கும் சம்மந்த முண்டாயிருக்க வேண்டியது. இன்னும் லிங்காங்கி யல்லாதவர்களிடத்தில் சர்வ சம் மந்தங்களையும் சர்வாத்மகனாய் விடவேண்டுமானால் அவர்களிடத் தில் அபிமானிக்கக்கூடாது, பவிகள்தொட்டஜலமமுதலானவைகள் தீண்டக்கூடாது.சிவதுரோஹிகளையும்சிவநிந்தகர்களையும் சிவசரண ருக்கு விரோதிகளையும், நிக்ரஹிக்கவேண்டும், பிரபஞ்சத்திலுள்ள எவ்வஸ்துவும், சிவனுடையதெனப் பாவிக்கவேண்டுமே யல்லா மல் தன்னுடையதென்று நினைக்கக்கூடாது, இப்பஞ்சலக்ஷணங்க ளுண்டாயிருப்பதே வீரசைவருக்கு விதியா(நியமமா)யிருக்கிறது,

### சிவனை யாராதித்து மோக்ஷ மடையாதவர்கள்.

### சுலோஹம்.

*தரண்யாகௌர வாத்யாஸ்து தருண்யா ராகவாதய:*
*பரஸ்த்ரீ வியசனாந் நஷ்டா ராவணாத்யா மஹாபலா:*
*த்யூதென நள தர்மாத்யா மத்ய பானேன யாதவா:*
*குஹகேனது கிருஷ்ணாத்யா அஹங்காரேண ராக்ஷசா:*
*சிவத்ரோ ஹெணதக்ஷாத்யா மதேநேந்த்ராத யஸ்சுரா:*
*நஷ்டாதானேன கர்ணாத்யா மிருகயாவ்ய சநாந்ருபா:*
*குருத்ரோஹாத்ரீ சங்க்யாத்யா நஷ்டாமுக்த்னிம்ய யுன்னதெ*

கௌரவ பாண்டவாதிகள் மண்ணுக்காக கார்த்துக் கெட்டார்கள், ராமர், முதலானவர்கள் பெண்ணுக்காகத் தேடியு ழன்றார்கள், ராவணன், கீசகன், வாலி, இந்திரன், முதலானவர்கள், பரஸ்த்ரீவியசனத்தினால்கெட்டார்கள்,நளமஹாராஜன் தருமராஜன் முதலானவர்கள் சூதாடிக் கெட்டார்கள். யாதவர்கள் மதுவுண்டுச் செத்தார்கள். கிருஷ்ணாதிகள், வஞ்ஜனை தந்திராதிகளினால் நஷ்ட ரானார்கள்,ஹிரண்யகசிபு முதலானராக்ஷசர்கள் வரப்பிரசாத கர்வ த்தினால் கெட்டார்கள், தக்ஷப்பிரம்மா முதலானவர்கள் சிவதூஷ ணையினால் கெட்டார்கள், இந்திராதிதேவதைகள், அதிகார மதத்தி னால் தோற்றுப்போனார்கள், கர்னன் சிபிச்சக்ரவர்த்தி ததீசிமுனி வர், ஜீமூதவாஹநாதியர்கள், தானத்தினால் கீர்த்திக்காக நஷ்டரா னார்கள், தசரதர் பாண்டவர், முதலானவர்கள் வேட்டையாடிக்

கெட்டார்கள், திரிச்சங்கு முதலானவர்கள் குருத்ரோஹத்தினால் கெட்டார்கள், இம்மாதிரியாகப் பிரபஞ்சத்துளனேக கோடி மஹா பிராணிகள் வெகு பிரக்யாதர்களாகி சிவபூஜைசெய்து பிரபலமாக பிழைத்திருந்தாலும் கடைசியிலவர்கள் காமக்ரோதாதிகளுக் கிரையாகிக் கெட்டுப்போனார்களல்லாமல் சிவக் ஞானத்தினால் வைராக்கியமடைந்து கிரமமாக மோக்ஷத்தைச் சாதித்துக்கொள்ளாமல் போனார்கள்,

மோக்ஷா பாசத்தை யடைந்தவர்கள்

சுலோஹம்.

போகோ பீஷ்மாதி காளும்ச ஜேந்த்ரஸ்ய புனர்ஜனி :
சம்ப்ராப்தாயேவ மன்யேபி முக்தாபாசாஸ்து நாம்ருதம்

பீஷ்மார்ஜ்ஜுனாதி கரிக ஜீவர்கள் பாகவதர்களென்னப் பட்டு மோக்ஷத்தை யடைந்த மாதிரியாக ஆபாசங்கொண்டார்கள். யெப்படி யென்றால் அவர்களிறந்த பிறகு மறுபடியும் சுவர்க்க நரகோப போகங்களைச் செய்த மாதிரியாக சுவர்க்காரோஹண பர்வத்தினால் தெரியவருகிறது, வைணவர்கள் முக்தி ஸ்தானமென்னும் வைகுண்டத்து ஜய விஜயர்களுக்காக விஷ்ணு பிறந்திறந்து மூன்றது பிரசித்தமாகவேயிருக்கிறது, கஜேந்திரன் வைகுண்டத்திற்குப் போய் முக்தனாகாமல் மறுபடியும் கரிகால சோளனாகப் பிறந்து சிவனை ஆராதனைசெய்து ஞானத்தையடைந்தானென்பது காளஹஸ்தி புராணத்தினால் தெரியவருகிறது, அஜமிளன் ஜன்மங்களெடுக்கவேண்டி வந்ததே மோக்ஷாபாசமாகும், இப்படியாக யாரைப்பார்த்தாலும் புனராவர்த்தியுள்ள வைகுண்டாதிஸ்தானங்களுக்குப் போய்வந்த மோக்ஷாபாசரல்லாமல் திடமாக மோக்ஷத்தை யடைந்தவரில்லை, யக்ஞாதி கிருத்யங்களைச் செய்தவர்களும், உபவாசாதி விரதங்களை யநுசரித்தவர்களும் சத்தியத்தைச் சாதித்தவர்களும் தர்மங்களைச் செய்தவர்களும் தபஞ் செய்தவர்களும் யுத்தத்தில் மடிந்தவர்கள் முதலான எல்லோரும் புண்ணிய உலகத்தை யடைந்திருந்து புண்ணியம் தீர்ந்த பிறகு புனர்ஜ் ஜனனமெடுத்தார்களல்லாமல்புனராவர்த்திரஹிதமான (ஜெனனமில்லாத) மோக்ஷத்தைச்சாதிக்க வில்லை,

சிவ பக்தியினால் மோக்ஷமடைந்தவர்கள்

சுலோஹம்.

ஸ்காந்தே பக்தவிலாசோக்தா : கண்டேசிவரஹஸ்யகெ
உபமன்யு முகாபக்தா : ஜீவன் முக்தாந சம்சய :
த்ரிசஷ்டி சம்க்ஞிகாயெச சாம்பவாஸ்து புராதனா :
தேஷாம்முக்தி : கரஸ்தைவ ததாப்ராயோப வேசினம்

ஷோடசானும்து பக்தானும் கதாதச கணஸ்யச
சரஸ்வதீ சிவலோகாப்திஸ், சாரூப்யம் சிவயோகிநாம்
சகுணக்ஞான நிஷ்டானும், சிவசாயுஜ்ய முச்யதெ
நிற்குணக்ஞான நிஷ்டானும், சிவகைவல்ய மேவ்தத்.

ஸ்காந்த புராணத்துள் சிவரஹஸ்ய காண்டத்தில் பக்த விலாசமென்னும், பிரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கும் உபன்யு முதலான சிவபக்தர்களுக்கும், (63) பேர் புராதனர்களுக்கும், கரிகாலச் சோழன், சத்தியேந்திர சோழன், மக்கண்ணச் சோழன், பிரபாகர சோழன், கிட்டவ்வெ, அட்மவ்வெ, களசங்கப்பெருமாள், தர்ம சோழன், உத்துங்க சோழன், பாண்டியன், ஜடைய நயினர், நம்பி நரசிங்கர், திருநீலகண்டர், மொனெதர சோழன், கைவல்ய சோழன், வீர சோழன், வீர பாண்டியன், திருஞ்ஞான சம்மந்தர், திருவல்லி நாசி, வாகீச சோழன், நிஷ்டூரத சங்கையன், கலிகாமன், திருக்குரும்பெய தொண்டன், கோளல நயினர், காரைக்காலம்மை, சிரியாளம்மை, தீபுதகலி, கடஹுல்ல நம்பி, சாநந்தர், மெளெகங்கைய்யர், அச்சுதய்யர், மளெயராஜன், குட்டதைய்யன், காளிங்கராஜன், சன்னம்மாள், மடிவாள மாச்சைய்யர், குயவ குண்டய்யர், பியாட்ர கன்னைய்யர், மாணிக்கவாசகர் முதலானஇப்பட்ட மனுஷ்யர்களுங்கூட குருலிங்க ஜங்கம பிரசாதத்தினுல் சிவபக்தியுண்டாகி கைலாசத்திற்குப் போனுர்கள். இன்னும் சிவக்ஞான சித்தரான மஹாத்மருக்குச் சாஸ்வதமான மோக்ஷம் சித்திக்குமே யல்லாமல் இதரர்களுக்குச் சித்திக்காதென்றறியவும்.

ஸ்ரீ குருப்யோ நம;
வீரசைவ, விஜய கிரந்த சுருக்கம் முற்றிற்று.

---

## சிவபூஜா பிரபாவமும் அதின் அவஸ்யமும்

ஸ்ரீபரமாத்மனின் பஞ்சாசனேத் பவரான ஜகத் ஆசார்யர்களினுல் ஸ்தாபிதமான பரம பவித்ர வீரசைவ மதோத்பன்னரான பிரதியொருவருக்கும் சிவலிங்கபூஜையே போக மோக்ஷங்களென்னும் சத்பலனைக் கொடுப்பதாயிருக்கிறது, வேதோக்தங்களான சகல கருமங்களிலும் சிவபூஜையே உத்தமமான கருமமெனச் சொல்லப்படுகிறது, யக்ஞ யாகாதிகளைச் செய்வதினுல் சுவர்க்காதி போகங்களுண்டாகி அதையநுபவித்த பிறகு மறுபடியும் பவபந்தத்திற்கு வரவேண்டியதாகும், சிவபூஜா ரூபமான கருமங்கள் சவுக்யாதிகளைக்கொடுத்து அந்தியத்தில் புனர்ஜன்மரஹிதமான நித்திய முக்தியைக் கொடுக்கும். இதனுல் சிவபூஜாதத்பரனுக்கு போக மோக்ஷங்களிரண்டும் சித்திக்கும், பூருவத்தில் விஷ்ணு, ப்ரஹ்மன்,

இந்திரன்,குபேரன்,,முதலான தேவதைகளும் இன்னும் ராவணன், பாணசுரன், விபீஷணன், முதலான அரசர்களும், சாரதா, லக்ஷ்மி சசீ,முதலானதேவியர்களும், மநு, முனிகளும், கந்தர்வ வித்யாதரர், முதலானவர்களும் பக்தியுடன் சிவபூஜையைச்செய்து தங்கள் தங்கள் இஷ்டார்த் தங்களை யடைந்து தன்னியரானார்கள்,ஆனதினால் பிரதியொரு வீரசைவ (லிங்காயத)னும் சிவதீக்ஷா சம்பன்னனாகி ஸ்ரீகுருவினா லநுக்கிரகிக்கப்பட்ட இஷ்ட லிங்கத்தைத் தரித்தது முதலாக.

பக்த்யைவை கமனுபூத்வா யாவஜ்ஜீவம், பிரதிக்ஞயா
அர்ச்சயேத்தம் மஹாதேவ மாபன்நோபி சதாம்புத:

என்னும் பிரமாணத்தைப் போல தன் ஜீவனுள்ள பரியந்தமும தப்பாமல் சிவ பூஜையைச் செய்யவேண்டியது. ஆனால் "ஸ்ரீயாம்சிபஹு-விக்ஞாநி" இக்காலத்திற்கு சத்காரியம் சத்விரதங்களுக்கு அநேக கஷ்ட பரம்பரைகள் லபிக்கும், ஆனாலு மந்த சிவபூஜா மஹாவிரதத்தை விடலாகாது. ஆனாலும் சில ஜனங்கள் மந்த மதியுடன் திடமான மனதில்லாமல் காலாநுகுணமாக என்னவாயிற்றென்று சங்கடம் பிராப்தமான உடனேவிரதப்பிரஷ்டராவார்களல்லாமல் அதனால் எவ்விதப் பலனுமில்லை யெனத் துர்ப்போதனையைச் செய்வார்கள், பார்த்தீர்களா? இவர்களின் துர் மனதை இவர்களுக்கு சிவபூஜாதி விரதங்களைச் செய்த தக்ஷணமே பலப்பிராப்தியாக வேண்டுமாம். இது கேவல சுத்த அவிவேகமேயாகும் எப்படியென்றால் பூமியில் பீஜாரோஹணம் செய்த (விதைத்த)வுடனே பலன்கள் கிடைக்குமா. பால் கரந்தவுடனே நெய் கிடைக்குமா. இப்படிப்போல இவைகளுக்குக் காலாவதி வேண்டுமல்லவா. இன்னும் அனந்தகால பரியந்தம் திரிகரண (மனம், வாக்கு, காயமென்னும், முக்கரண)த்திலும், சுத்தமான பக்தியுடனும், திடமான மனதுடனும், சிவபூஜா விரதத்தை நடத்தினால் பரமாத்மன் திருப்தனாவான், ஆனதினால் சிவாசார சம்பன்னனானவன் இன்னும்.

ஸ்நாத்வாத் விவாரம் சிவமர்ச்ச யிஷ்யன்
புஞ்ஜீத ஞேசீன், நரகம் பிரயாதி

தினத்திற் கிரண்டு தடவையாவதும் ஸ்நானம் செய்து சிவபூஜையைச் செய்த பிறகே பிரசாதம் ஸ்வீகரிக்க வேண்டும். இப்படிக் கல்லாமல் க்ஷுதாதுரனாகி சிவபூஜை யில்லாமல் தன் உதரத்தி (வயிற்றி)ற்கு மாத்திரம் அன்னபானாதிகளைப் பர்த்தி செய்ப (நிரப்புகிற) வன் பிறகு நரகத்தில் விழுவானென்னச் சொல்லியிருக்கிறது, மற்றும்,

யஸ்து லிங்கார்ச்சனம் தியக்தா பும்க்தேச க்ருமிகீடபுத்

எவன் லிங்கார்ச்சனையை விட்டுப்புசிப்பனோ அவன் கிருகீடங்களைப் பக்ஷித்தவனாவான், இன்னும்.

த்விஜோ வாத்விஜநாரீ வா த்யக்த்வா ஸ்ரீலிங்க பூஜனம்
யதிபும்க்தே த தாயோனிம் சண்டாலம்ப்ராப்நுயா த்ருவம்

பிராஹ்மணபுருஷனாவதும்ஸ்திரீயாவதும்லிங்கார்ச்சனையைச் செய்யாமல் போஜனம் செய்தார்களானாலவர்கள் பின் ஜன்மத்தில் சண்டாளரின் கர்ப்பத்தில் ஜனிப்பதே நிஜமாகும், இத்தியாதி தர்ம சாஸ்திர பிரமாண மிருப்பதால் பிறதியொரு மனிதனும் அதி யவஸ்யமாக சுத்தமான பக்தி பாவனையுடனும் சாந்த சித்தத்துடனும் நியாயார்ச்சிதமான திரவ்யத்தினு (சன்மார்க்கத்தால் சம்பாதித்த பொருள்களா) லும் சிவ பூஜையைச் செய்யவேண்டியது. பக்தியில்லாமல் டம்பாசாரத்திற்கு அனியாயத்துடன் சம்பாதித்த திரவ்யத்தினல்செய்யலாகாது, செய்தாலும் நிஷ்பலமாகும், தனிக (செல்வ) னானாலும், தரித்திர (வரிய) னேயானாலும், பக்தியுடன் செய்த பூஜையே பரசிவனுக்கு திருப்திகரமாகும். உபயருக்கும் பேதமில்லாமல் பல பிரதானம செய்வான். இன்னும், சிவபூஜையே சிரேஷ்டமென்பதற்கு பிரமாணம்.

## வீரசைவாசார பிரதீபிகை.

அக்னி ஹோத்ராஸ்ச வேதாஸ்ச யக்ஞாஸ்ச பஹுதக்ஷிணா:
சிவலிங்கார்ச்சனஸ்யைதே தோர்க்யம் சேனோபி சோசபா:

அனந்த யக்ஞம். அக்னி, ஹோமம் முதலானவைகளைச் செய்தாலும் சிவபூஜையின் கோடி பாகத்திலொருபாகத்திற்குச் சாமானமாகமாட்டாது, மற்றும்

சாந்த்ராயண சஹஸ்ராணி தப்தகிருச்ர சதானிச
சர்வவிரதானி ஜீர்ணானி லிங்கஸ்யப் யார்ச்சநேக்ருதெ

கவாம் கோடி சஹஸ்ரஸ்ய யக்ஞகோடி சதஸ்யச
தானேதத்பல மாப்னோதி சகிர்தப்யர்ச நேகிருதே

சஹஸ்ர சாந்த்ராயணி விரதங்களையும், மற்றும் நூறு தப்த கிருச்சிர விரதாதிகளையும் செய்தபலனுக்காவதும் சிவபூஜைசெய்த பலன் அதிகமாக லபிக்கும், இப்படியாகவேகோடிகோதானம் செய்தாலும் நூறுகோடி யக்ஞங்களைச் செய்தாலும், இன்னுமிதர அசங்க்யாத தானங்களைச்செய்தாலும் கிடைக்கும்பலன் எவ்வளவுண்டோ அதைவிட மிச்சமான பலன் சிவபூஜையினல் பிராப்தமாகும்

யஸ்து பூஜயதே நித்யம் லிங்கம் திரிபுவனேஸ்வரம்
சஸ்வர்க்க மோக்ஷ ராஜ்யஸ்ய க்ஷிப்ரம் பவதிபாஜனம்
வித்யாலா போதனம் சௌக்யம் குலீனத்வம் மநோகதம்
ராஜ்யம் மோக்ஷம்ச நாகோவா சிவபூஜா விதேபலம்

திரிபுவனதிபதியான லிங்கமூர்த்தியை எவன் பூசிப்பனோ அவனுக்கு வித்யாலாபம் தனம் சௌக்யாதிகளுண்டாகி அந்தியத்தில் மோக்ஷ ராஜ்யத்திற்கு அதிபதியாவானென்று வியாசாதி மஹரிஷிகள் கொண்டாடியிருக்கிறார்கள்,

லிங்க புராணம்.

*லிங்கஸ்யதர்சனாத் பிராதர்னிசி பாபம் வ்யபோஹதி*
*ஆஜன்ம ஜந்தோர்மதான் நோப்த ஜன்ம க்ருதம் நிசி*

கூர்ம புராணம்.

*கோடிஜன்மக் ருதம் பாபம் விருபாக்ஷ ஸ்யதர்சனாத்*
*தத்சர்வம் நஸ்யதி க்ஷிப்ரம் வன்னிநா தூலபாரவத் (1)*

பிராதர் மத்தியான்ன சந்த்யா காலங்களில் சிவலிங்கத்தை தரிசனம் செய்துக் கொண்ட மாத்திரமே சப்த ஜன்மங்களில் செய்த பாவம் நசித்துப்போகும், ஈதல்லாமல் பிரதி சோமவாரத்திலும் சிராவண மாதத்திலும் மஹாசிவன்ராத்திரி பிரதோஷகாலங்களிலும் பரசிவ மூர்த்தியை விசேசோபசாரங்களுடன் அர்ச்சித்து குருலிங்க ஜங்கம பூஜையைச்செய்து கொண்டிருக்க வேண்டியது.

சிவதர்ம புராணம்.

*அபக்ஷ்ய பக்ஷகோவாபி ப்ரஹ்மஹா யதிமாதுஹா*
*பிதருஹா பாலகாதீச கோக்ன : ஸ்ரீசூத்ரகாதக :*
*சர்வபாப யுதோவாபி முச்யதே லிங்கபூஜனாத்*
*நதத்ரதேசெ துர்ப்பிக்ஷம் நசமாரீ பிரவர்த்தனம்*
*நகாலே பீட்யதெ ராஜா பூஜ்யதே யத்ரசங்கர : (1)*

சிவ பூஜையினால் சகல விதமானபாபங்கள் நிவாரணமாவதுமல்லாமல் எந்த தேசத்தில் சர்வரும் சிவபூஜாதி விரதநிஷ்டராயிருக்கிறார்களோ அவ்விடம் க்ஷாமபாதை ரோகாதி உபக்கிரவங்கள் ராஜோபத்ர வாதிகள் கொஞ்சமாவதும் உண்டாவதில்லை

இம்மாதிரியாக அநேக தர்ம சாஸ்திரங்கள் போதித்திருந்தாலும் வீரசைவரா (லிங்கதாரிகளா) னவர்கள் சிவாராதனையைக் கிரமமாகச் செய்யாமல் அசாஸ்வதமான (நிச்சயமில்லாத) தங்கள் தங்கள், வியாபாரம், உத்தியோகம், விவசாயம் முதலான காரியங்களினால் திரவ்ய சம்பாத்ய ஆசைக்குட்பட்டு சிவபக்தி சிவபூஜா சிவகதா சிரவணாதிகளைத்தியாஜ்யம் (விலக்கு) செய்து வர்த்திப்பதினாலேயே தேசத்தில் மழைவிளைவுகளில்லாமல் வியாதிகளினால் பீடிதராகிறார்கள்.

*காலேவர்ஷது பர்ஜன்ய : பிருதிவீ ரஷ்ய சாலினீ*
*தேசோயம் க்ஷோபரஹித : நிர்ப்பயாஷ் ஸந்துமானவா:*

15-7-29-வ. பிரபா பத்திரிக்கையின் மொழிபெயர்ப்பு

பக்தஸ் தலம், மஹேசஸ் தலம், பிரசாதிஸ் தலம், பிராண லிங்கிஸ்தலம், சரணஸ் தலம், ஐக்யஸ் தலம், இந்த ஆறும் ஷடங்கங்களாகும். இவ்விடம் ஆறாவதான ஐக்கியஸ் தலமானது சாத்திய ரூபமாயிருந்தாலும், இதற்கு அங்கமெனச் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனைய ஐந்தங்கங்களில் பிந்திய ஐந்தங்கங்களுக்கு முதல் முதலாயுள்ள அங்கங்களே சாதனங்களாயிருக்கின்றன. ஆனதால் பக்தாதி ஐந்தங்கங்கள் சாதன ரூபங்களாயிருக்கின்றன. இன்னும் ஐக்யமென்னும், அங்கமானது சாத்திய ரூபமாயிருக்கிறது. இப்படியானவிதற்கு அங்கமெனச் சொல்லுவதேனென்றால்: அங்கனென்றால் ஜீவனல்லவா. சாக்ஷாத் சிவைக்யத்தையடைந்து சிவஸ்வ ரூபனானவன் ஜீவனெனப் படுவதில்லை, என்ற பிறகு, வீரசைவ கிரந்தக்காரர்க ளிப்படிப்பட்ட ஐக்யஸ்தலத்திற்கு அங்கமெனச் சொல்லியிருப்பது அர்த்தமாவதில்லை, யென்றால் பாதஞ்சல யோகத்திலுங்கூட சாமாதியானது பல(சாத்திய)ரூபமாயிருந்தாலும் அதற்கு எட்டாவது அங்கமெனச் சொல்லப்பட்டிருக்கிறது, இதைப்போலவே சிவயோக சாஸ்திரத்திலும் ஆறாவதான முக்திரூப பலத்திற்கு அங்கமென்னும் வியவஹாரமுண்டு, அப்படியானலந்த ஆறாவதான ஐக்யஸ்தலத்தின் பிரயோஜனமென்ன? பின்னையஐந்துஸ்தலங்களுக்கும் முதல் முதலான ஸ்தலங்களின் பிராப்தியே பிரயோஜனமாயிருக்கும், ஆனால் மேல்மாடியைப் போலுள்ள சிவைக்யப்பிராப்தி யென்னும் மோக்ஷபலத்திற்கு பக்தாதி ஐந்து ஸ்தலங்கள் ஐந்துபடிகளாயிருக்கும், முதலாவது படியேறினால் இரண்டாவது படிகிட்டும், முதல் படிக்கிரண்டாவது படியின் பிராப்தியே பலனாயிருக்கும், இப்படியே முதலாவதான நான்கு படிகளையும் ஏறின பிறகு ஐக்யஸ்தலமென்னும் மேல்மாடி கிடைத்ததும் சாதகனின் பிரயத்தினம் முடிவு பெற்றது, அம்மாடியின் பிராப்தியே கடைசி பிரயோஜனமாயிருக்கிறது, இப்பிராப்திக்கு மற்றொரு பலனொன்று மில்லை. யென்ற பிறகு பிரயோஜன மில்லாதிருக்கும் ஆறாவது ஸ்தலத்தையடைந்ததினால்யுக்தியென்ன விருக்கு மென்னும் ஆக்ஷேபமுண்டாகும், இந்த ஆக்ஷேபனைக்குச் சமாதானமேயில்லை யானதினால் சிவாத்வைத கல்ப கிரந்த கர்த்தருங்கூட ஆறாவது ஸ்தலத்தையடைவது பிறயோஜன மில்லை யெனக்கூறி அவர் ஐந்துஸ்தலங்களையேயடைந்தாராலும்நாம்மாத்திரம் அப்படிச்சொல்வதில்லை ஏனென்றால் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம் சமாதிகளென்னும் எட்டங்கங்களில் எட்டவதான சமாதி யென்னும் அங்கமே பலரூபமாயிருக்கும், அதுவே முந்திய ஏழு அங்கங்களுக்கும் பிரயோஜன ரூபமாயிருக்கிறது, அதற்கு மற்றொரு வேறு பிரயோஜன மொன்று மில்லையானாலும் பாதஞ்சல தர்சனத்திற்கு எட்டாவது அங்கமெனச் சொல்லி ஸ்வீகரிக்கப்

பட்டிருக்கிறது. இதைப் போலவே ஆறுவது ஸ்தலத்தை ஸ்வீக ரித்தாலதற்கு வேறான மற்றொரு பிரயோஜன மில்லாதிருந்தாலும் தானே அந்திய பல ரூபமாயிருந்தாலு மதையுங்கூடச் சேர்த்து ஆறு அங்கங்களாகச் சொல்லப்பட்டிருப்பதெனச் சொல்லுகிறோம், இன்னும், ஜீவனுக்கும் சிவனுக்கும்

'குஹாம் பிரவிஷ்டா'

குஹாம் பிரவிஷ்டா வாத்மாநௌஹி தத் தர்சனாத்

என்னும் சுருதிகளினால் குஹை யென்னுஞ் சரீரம் அல்லது ஹிருதயங்களில் பிரவேசம் சொல்லப்படுகிறது. ஆனதினால் பிறதி யொரு சரீரங்களில் பிரவேசம் சொல்லப்படுகிறது, ஆனதினால் பிறதி யொரு சரீரங்களிலும் ஜீவாத்மனொருவனே சரீரத்திலுள்ள பிருதிவியம்சத்தின் அபிமானத்தினால் பக்தனென்றும், என்றால் அப்பிருதிவி பாகத்தை யான் யெனதென்னு மபிமானத்தினால் பந்தனென்றும், அல்லது ப்ரஹ்மனென்னும் நாமத்தை யடைந்திருப்பான், இதைப்போலவே அச்சீவன் ஜலம், அக்கினி, வாய்வு, ஆகாசம், இவைகளை யான் யெனதென்றபிமானித்துக் கொண்டு, மஹேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், அல்லது விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவனென்னும் நாமங்களை யடைந்து ஐந்து அங்கஸ்தலஸ்வரூபனாயிருக்கிறான், ஏனென்றால் சிந்தாந்த சாஸ்திரத்தில் பக்த னெனப்படும் பிரஹ்மனுக்கு பிருதிவி யென்னு மங்கமும், மஹேசனென்னும் விஷ்ணுவுக்கு ஜல மென்னு மங்கமும், இப்படியாகவே பிரசாதி, பிராணலிங்கி சரணன், என்றும், ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவர்களுக்கு அக்கினி, வாய்வு, ஆகாசங்கள் அங்கங்களாயிருக்கிறதெனச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனதினால் ஜீவாத்துமனானவன் இம்மூன்றறை முழச்சரீரமே தானென்றும் இச்சரீரத்திற்குச் சம்பந்தித்த பத்தினி புத்ராதிகள் தன்னவர்களென்னும் பிராந்திகொண்டுபத்தினி புத்திராதிகளுக்கு ரோகங் (வியாதி) களால்துக்கமுண்டாகவும்தானே துக்கியாகிப் பரிதவிப்பான், இன்னும் பிறர்களின் தேஹாதிகளில் தான் தன்னவ ரென்னு மபிமானம்இல்லாதிருப்பதால்அவர்களுக்கென்ன சம்பவித்தாலும் இவனுக்குத் துக்க மென்பது காணப்டுவதில்லை. இதைப்போலவே சரீரத்திலுள்ள பிருதிவியாதி பஞ்ச பூதங்களின் அபிமானத்தினால் முன்சொன்னஐந்து நாமங்களையடைந்து அப்பஞ்ச பூதங்களையே தான் தன்னதென்றபிமானித்து அந்த அபிமான மென்னும்(அஞ்ஞான)பாசத்தினால் கட்டப்படுவான் இந்தக் கட்டு (முடிச்சு) சாதாரணமானதல்லவென்றும் சிருஷ்டி யாதியாகி ? அன்று முதல் ஜீவாத்தம னுக்கு பாசங்களின் கட்டை எப்படிப்பட்டவனாலும் அவிழ்க்க முடியாதபடியாக விழுந்திருக்கிறது, என்றால் யாவனாலிப்பாச பந்த

முண்டா யிருக்கின்றதோ அவனைத்தவிர பந்தன விமோசனம் யாரும் செய்ய முடியாது, உலகத்தில் ஒரு கெட்டியான கயிற்றினால் யாராவதொருவனை சரியாகப் பந்தித்தால் அதையே யவிழ்ப்பது அசாத்தியமாயிருக்கும் போது சர்வக்ஞனும் அகடித கடனா (கூடாததைக் கூட்டிவைக்கும்) சமர்த்தனுமான அப்பரமேஸ்வரன் ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து கயிறுகளினால் ஜீவனைப் பந்தித்திருக்கிரானென்ற பிறகு அப்பரமேஸ்வரனை விட்டு இதர மனிதர்கள் அப் பந்தனத்தைவிடுவிக்க முடியுமா, என்றைக்கும் அவிழ்க்க முடியாது, ஆனதினால் அப்பரமேஸ்வரனே ஜீவாத்மனின் பந்தனையை விடுவித்து துக்க நிவிர்த்தியைச் செய்து பரமசுகத்தை யுண்டாக்க வேண்டியிருப்பதால் அப்பரமேஸ்வரன் தன்னைப்பூஜித்து, தியானித்து, தரித்து, தன் பந்தனத்தை விட்டு விடுவித்துக் கொண்டு நித்தியசுகத்தை யடையவேண்டு மென்னும் உத்தேசத்துடன் லிங்கரூபனானான், என்றால் ஆதாராதி ஐந்து ஸ்தானங்களில். ஆதாராதி ஐந்து லிங்கங்களின் ஸ்வரூபனாயிருப்பான், எப்பரமேஸ்வரன் ஐந்து பிரகாரமானானோ அவனே மஹாலிங்கம், ஆதாரலிங்கமே சத்யோஜாத ப்ரஹ்மம், இதுபிருதிவுக்கும் பிருதிவிதத்வாபிமானியானபக்த அல்லது பிரஹ்மனெனப்படும், ஜீவாத்துமனுக்கு அதிஷ்டான (சரீராவச்சின்ன வான்மா, அல்லது ஜீவியத்திற்கடுத்த வான்மாவுக்கு இட) மாயிருக்கிறது இதற்கு பிரணவம்யாது, சக்தி யாது என்பதை குரு முகத்தினால் தெரிந்து அந்த லிங்கத்தைப் பூஜிக்க வேண்டியது. தியானிக்க வேண்டியது. மற்றும் தாரணம் செய்ய வேண்டியது. இப்படி ஆதாரசக்கிர மென்னும் கமலத்தின் மத்தியகர்ணிகையி லிருக்கும் சத்யோஜாத ப்ரஹ்ம மென்னும் மற்றொரு பெயருள்ள ஆதாரலிங்கத்தைப் பூஜித்து தியானித்து தாரணம் செய்தால் இயம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்யாகார, தியான, தாரண, சமாதி என்னும் அஷ்டாங்கயோகத்தில்சொன்ன சமாதி யென்னும் ஐக்யஸ்தலம் சித்திக்கும், அப்பொழுது பக்தன் பிருதிவி (மண்) யென்னும் தன்னங்கத்தின் அபிமானத்தை (தன் உடலின் செருக்கை) விட்டுவிடுவான்,முகன்முகலாக இவ்வொருலிங்கத்தில்சமாதிஸ்திதியுண்டாகவும் முன்முன்னுள்ள குருலிங்காதிகளில் அந்தஸ்திதி வருவது சுலபமேயாகிறது, இப்படியாக முன்னைய லிங்கங்களில் சமாதி ஸ்திதி யென்றால் சாமரஸ்ய முண்டாகவும் பக்தனே மாஹேசனும், பிரசாதியும், பிராணலிங்கியும் சரணனும் ஆய்விடுகிரான் அல்லது பிரஹ்மன், விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவன், எனப்படுவான், பிறகு ஜீவாத்மனின் சர்வோபாதிகளையும் களைந்து யோகி சுத்தாத்துமனாவான்,என்றால் பிருதிவி முதலான ஐந்து பாசங்கள் நசித்துப்போய் சுத்தசிவாம்ச ரூபனே யாய் விடுகிறான், இப்படிப்பட்ட சுத்த சிவாம்சம் மஹா லிங்கத்திற்குப்

பின்னமாயிருப்பதில்லை, சூரியனின் கிரணங்கள் சூரியனுக்குப் பின்னமல்ல, அக்கிரணங்கள் பகல் வேளையில் எல்லாவிடங்களில் நிறைந்து கொண்டும் சூரியகாந்தசிலையில் பிரதிஷ்டித்து பஞ்சு முதலான உபாதிகளுக்குட்பட்டதும் ஸ்தூலாகிருதியையடையும் என்றால் நெருப்பாகிறது. இரவில் இவை யெல்லாம் சூரியனிடத்துச்சேர்ந்து சூர்யஸ்வரூபங்களே யாகும். இப்படியாகவே சங்கர பாஸ்கரனின் கிரணங்களைப்போலுள்ள ஜீவாத்துமர்கள் அச்சிவனிடத்து விபக்த (அயோக்கிய) ராகி மாயாதி உபாதிகளை யபிமானித்துஸ்தூலாக்ருதியை யடைந்து தங்களுடையசிவஸ்வரூபத்தையே மறந்துவிட்டு பந்திதராவார்கள், பிறகு பரிபக்குவ காலத்தை யடைந்து மூலாதார சுவாதிஷ்டானாதி ஸ்தானங்களிலிருக்கும் ஆசாராதி லிங்கங்களின் சாமரஸ்யத்தினால் பிருகிவியாதி கிரந்திகளினால் முக்தராகவும், சர்வோபாதிகளும் லயத்தையடையும், அப்பொழுது ஜீவாத்மன் சுத்த சிவாம்சனுவான் அப்பொழுது பாலில் பால் கலந்ததைப் போலவும் சிவனென்னும் மஹா லிங்கத்துடன் கலந்து ஐக்கியாவான், இதுவே ஷடங்கயோகமாகும், இந்த ஷடங்கயோகத்தை தெரிய வேண்டுமானால் சூட்சும பஞ்சாக்ஷர மந்திர மென்னும் மூலப்பிரணவத்துடன் சஹிதமான நகாராதி யகாராந்தமான பஞ்சாக்ஷர மந்திரத்தையும், அதின் அர்த்தத்தையும் முதலில் தெரிய வேண்டியது, இதைத் தெரிவதற்காக ஸ்ரீகுருமூர்த்தியை யாஸ்ரயித்து அவரால் சிவதீக்ஷையடையவேண்டியது, இத்தீக்ஷையில்லாதிருந்தால் அசுத்த பூமியில் அம்மந்திர விதைமுளைத்துப் பலிதமாக மாட்டாது என்றால் அம்மந்திரத்தாலாகும் முக்தி பலன் கிடைக்கமாட்டாது, ஆனதினால் ஷடங்கயோகத்தை அப்யாசம் செய்யுமிச்சையுள்ளவர்கள் முதலில் தீக்ஷையையடைந்து, பிரணவசஹிதமான பஞ்சாக்ஷர மந்திரோபதேசத்தை யடைந்து அம்மூல பிரணவார்த்தமான மஹாலிங்கத்தின் ஸ்வரூபத்தை நகாராதி யகாராந்தங்களான ஐந்து பிரணவங்களின் அர்த்தங்க ளென்னும் ஆசாராதி ஐந்து லிங்கங்களையும் தெரிந்து, அவைகளினால் மேற்சொன்ன ஷடங்கங்களின் யோகங்களை யடைந்து, நித்தியசுகிகளாகும்படியாக ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யர்கள் அநுக்கிரகிக்குமாறு பிரார்த்திக்கிறேன்

சிவம்பூயாத்.

10—2—30-உ பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு

# புண்யா வசனம்.

மெழுகி கோலங்கலிட்டலங்கரித்த சுத்தமான பூமியில் பஞ்ச கலச ஸ்தாபனத்தில் சொன்ன† பூமிசுத்தி மந்திரத்தால் பூமி சுத்தி செய்து ‡ வாழையிலே மந்திரத்தால் வாழையிலே போட்டு ‡ அரிசி மந்திரத்தால் அரிசி போட்டு.

(1) கலசஸ்தாபன மந்திரம்.

ஆகலசேஷு தாவதிசைநோவர்மவிகாஹதேஅபித்ரேணுகனிக்ரதத்

என்று உலோக கலயங்களாவது அல்லது மண் கலயங்களாவது இரண்டும் ஜதையாக வைத்து.

(2) ஜலமிடும் மந்திரம்.

(இயம்மே கங்கே யமுனே, முதலாக ஹியாசு சோமயா) வரையில் சொல்லி தீர்த்தம். 2-கலசத்திலும் நிறைத்து. (கந்தத்வாராம் என்னும், மந்திரத்தால்) 2-கலசத்திலும் சந்தனம் போட்டு, மேலுக்கும் வைத்து. (சஹிரத்நானி) என்னும் மந்திரத்தால் பஞ்ச ரத்தினங்கள் போட்டு.

(3) மாவிலை மந்திரம்.

(பிரவோ யக்ஞேஷு வயம்தோ அர்ச்சம் த்யாவானகாம்
ஹோபி: பிருதிவி இஷத்வியெ ஏஷாம் ப்ரஹ்மண்ய
சமானிவிப்ரா விஷிக் வியந்தி விநிநோந சாகா:

என்று மாந்தளிர் (மாவிலை) களாலலங்கரித்து

(4) தர்ப்பை மந்திரம்.

"காண்டாத் காண்டாத், முதல் சஹஸ்ரேண சதேனச"

வரையில் சொல்லி தர்ப்பைகளை வைத்து. ‡ பஞ்சலோக மந்திரத்தால், தங்கம், வெள்ளி போட்டு, தேங்காய், மந்திரத்தால் தேங்காய் வைத்து. ‡ வஸ்திர மந்திரத்தால் 2-வஸ்திரம் தரித்து ‡ நூல் சுற்றும் மந்திரத்கால் இரண்டு கலசத்திற்கும், நூல் சுற்றி.

(5) வடக்கு கலசம் வருண ஆவாஹன மந்திரம்.

தத்வாயாமி சுநஸ்யேஷோ வருணஸ்த்ரிஷ்டுப் உத்தரகலசே
வருணாவாஹனே விநியோக: தத்வாயாமி பிரஹ்மணா
வந்தமானஸ்த தாசாஸ்தே யஜமானோ ஹவிர்ப்பி:
ஆஹேடமானோ வருணே: போத்புருசகாம் சமான ஆயு:
பிரவோஷி: ஓம் பூம் வருணமாவாஹயாமி ஓம் புவ:
வருணமாஹயாமி ஓம்சுவ: வருணமாவாஹயாமி
ஓம் பூர்ப்பு வஸ்சுவ: வருணமாவாஹயாமி

என்று வடக்குக் கலசத்தில் வருணனை ஆவாஹனம் செய்துப்பிறகு

(6) கலச ஜபம்.

கலஸஸ்ய முகே ருத்ர: கம்டே விஷ்ணு சமாஸ்ரித:
மூலேதத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யெமாத்ருகணாஸ்மிருதா:
குக்ஷௌது சாகரா ஸர்வெ சப்தத் வீபாவசும்தரா

---

‡ இம்மந்திரங்கள் விவாஹ பஞ்ச கலசஸ்தாபனத்தில் பார்க்கவும்.

(7) ஜலம் தெளிக்கு மந்திரம்

அநயா பூஜயா வருணாதி தேவதா ஸ்சுப்ரீதாஸ்
சுப்ர சன்னா வரதா பவம்து

என்று அக்ஷதை சுவர்னத்துடன் கூடின ஜலத்தை சேர்த்துத் தெளித்துப் பிறகு பவுத்திர பாணியாகி பிராணாயாமம் செய்து கையை மூடிக் கொண்டு

(8) நமஸ்கார மந்திரம்

உமாமஹேஸ்வ ராப்யாம்நம: பிரமத கணேப் யோநம:
பக்த மாஹேஸ்வ ரேப்யோநம: துர்க்கா கணபதி
க்ஷேத்ர பால கேப்யோ நம: மாத்ருப்யோ நம:
பிதுருப்யோ நம: ஆசார்யெப்யோ நம: இஷ்ட
தேவதாயை நம: சர்வேப்யோ மாஹேஸ்வ ரேப்யோ நம:

என்று நமஸ்கரித்துப் பிறகு இந்த கலசங்களின் முன்னே உட்காருபவராயும் வடக்கி லுட்கார சக்தராயும் நிஷித்த (இகழ்ச்சி அல்லது தவறி) ல்லாத வராயும் உத்தரீயத்தைப் போர்த்துக் கொண்டவராயும் பவித்திர பாணிகளாகவுமுள்ள இரு மஹேஸ் வரரை உட்காரவைத்து சந்தனம் புஷ்பம் அக்ஷதைகளால் அவர் களை அர்ச்சிக்கும் மந்திரம்(ஆசிஷ: ப்ரார்த்தயாமி) என்றுச்சொல் லவும், பிறகு.

(9) மாஹேஸ்வரர் மந்திரம்.

சத்யா ஏஷா ஆசி சஸ்சம்து தீர்க்கா நாகநத்யோகிரய
ஸ்த்ரீணி விஷ்ணு பதாநிச தேநாயு: பிரமாணேன
புண்யாஹம் தீர்க்கமாயு ரஸ்து

என்று மாஹேஸ்வரர் சொல்வது, இம்மாதிரி மாஹேஸ் வரரிடம் ஆசீர்வாதரூப பிரதியுத்தரம் வாங்கிக் கொண்டு மறுபடி யும் பிராணாயாமம் செய்து தேசகாலாதிகளை யுச்சரித்துப் பிறகு

(10) சங்கல்பம்.

கர்ப்பா தான கர்ம கர்க்ருமாதௌ சுத்தி விருத்யப் யுதய
சித்தித்வாரா ஸ்ரீபரமேஸ்வரப்ரீத் யர்த்தம் ஸ்யாந்த் யர்த்தம் மாஹேஸ்வ ரைஸ்சஹ ஸ்வஸ்தி புண்யாஹ வாசனம் கரிஷ்யே என்று சங்கல்பம் சொல்லி, வடக்குக் கலசத்தைப் பிடித்து. "ஆபஹ,, என்று புரோஹிதர் ஜலத்தைக்கொடுக்க. மாஹேஸ்வரர், "சிவா ஆபஸ் ஸம் து,, என்று சொல்லி வாங்கிக் கொள்வது மறுபடியும்.

(2) புரோஹிதர், கம்தாஹ, என்று சந்தனத்தைக் கொடுக்கவும் மாஹேஸ்வரர், சுகம்தா: பாம்து: என்று சொல்லி வாங்கின பிறகு

(3) புரோஹிதர், அக்ஷதா: என்றுசொல்லி அக்ஷதையைகொடுக்க
மாஹேஸ்வரர், அக்ஷதம் சௌரிஷ்டம் சாந்து, என்றுசொல்லவும்
(3) புரோஹிதர் சுமனச: என்று சொல்லி புஷ்பம் கொடுக்கவும்
மாஹேஸ்வரர் ஐஸ்வர்ய மஸ்து, என்று சொல்ல

(5) புரோஹிதர், தக்ஷிணபாம்து, என்று சொல்லிதக்ஷிணைகொடுக்க
மாஹேஸ்வரர். பஹுதேயம், சாஸ்து, என்று சொன்ன பிறகு
(6) புரோஹிதர், மநஸ்சமா தீயதாம், என்று சொல்ல
மாஹேஸ்வரர், சமாஹித, மனசஸ்மஹ, என்று சொல்ல
(7) புரோஹிதர் பிரசீதம்து பவத :, என்று சொல்ல
மாஹேஸ்வரர் பிரசன்னஸ்ம :, என்று சொன்ன பிறகு.

சாம்திரஸ்து, புஷ்டிஸ்து, துஸ்டிரஸ்து. விருத்திரஸ்து
அவுக்னமஸ்து, ஆயுஸ்யமஸ்து, ஆரோக்யமஸ்து.
ஸ்வஸ்திசிவம், கர்மாஸ்து, கர்ம சமிருத்திரஸ்து
தர்ம சமிருத்திரஸ்து, புத்ர சமிருத்தி ரஸ்து
வேத மிருத்தி ரஸ்து, சாஸ்த்ர சமிருத்தி ரஸ்து
தன தான்ய சமிருத்தி ரஸ்து. இஷ்ட சம்பதஸ்து
என்பதாக (15) வாக்கியங்களைச் சொல்லி பிறகு

(8) புரோஹிதர் ஸ்வயம் கர்ம தேவதாத்மகோ பகவான்சிவ:
ப்ரீயதாம் என்று சொல்லி பிறகு

மாஹேஸ்வரர், ப்ரீயதாம் பகவான் கர்மதேவதாத்மக :
என்று சொல்லவும்

(9) புரோஹிதர், புண்யாஹம் வாசயிஷ்யே, என்று சொல்லி பிறகு
மாஹேஸ்வரர் வாச்யதாம், என்று சொல்லிப் பிறகு

எல்லா மாஹேஸ்வரரும் கூடி

உத்காதேவ சகுனேசாயகாயசி ப்ரஹ்மபுத்ர இவசவனேஷு
சகாம் சசிருஷேவ வாஜீ சிசுமதீ ரபீத்யா சர்வதோ நஸ்சகுனெ
பத்ரமாவத விஸ்வதோ நஸ்சகுனெ புண்யமாவத
என்று, சொல்லிப் பிறகு

(10) புரோஹிதர் ஓம் புண்யாஹம் பவம்தோ ப்ருவமது,
என்று, கம்பீர ஸ்வரத்தில்சொல்ல

மாஹேஸ்வரர், ஓம் புண்யாஹம், என்று இதையே மாறிமாறி
மத்திய ஸ்வரத்திலும் உச்சஸ்வரத்திலும் மூன்றுதடவைச்சொல்ல
(11)புரோஹிதர் கர்ப்பாதான கர்மணே ஓம் ஸ்வஸ்தி பவம்தோ
ப்ருவம்து,, என்று சொல்லிப்பிறகு

மாஹேஸ்வரர்கர்ப்பாதானகர்மணேஓம்ஸ்வஸ்திஎன்றுசொல்லவும்
(12) புரோஹிதன், கர்ப்பாதான கர்மணே ருத்திம் பவம்தோ ப்ரு
வம்து, என்றுச் சொன்ன பிறகு

மாஹேஸ்வரர் ருத்யதாம், என மூன்று தடவைச்சொல்லப் பிறகு.

புரோஹிதர், பத்தினி சகிதமாக கிழக்குமுகமாக உட்கார்ந்து கொண்டு வடக்குக் கலசத்தை வலது கையிலும், தெற்குக்கலசத்தை இடது கையிலும் பிடித்து இரண்டும் சேர்த்து இவ்விரண்டு கலசஜலத்தை மற்றொரு பாத்திரத்தில் விட்டுக்கொண்டு

(11) அபிஷேக மந்திரம்

*ஓஷதானி சரத்ஞநி காலஸ்யாவ யவாஸ்சயே*
*சரிதஸ் சாகராஸ் சைலாஸ் தீர்த்தானி சஹஸ்ரதானதா:*
*ஏதேத்வா மபிஷிம் சம்து சர்வ காமார்த்த சித்தயே*
*சாம்தி புஷ்டித் துஷ்டிச் சாஸ்து சிவகாம்*
*சிவமஸ்து பகவான் சிவ: ப்ரியதாம்*

என இம்மந்திரம் சொல்லிக்கொண்டு அபிஷேகிப்பது, பிறகு மாஹேஸ்வரர் அச்சலத்தை மாவிலைகளினால் பதி, பத்தினி, இவர்கள் சிரசின் மீது

(12) புரோக்ஷணை மந்திரம்

*தத்சவிதுர்வ ரேண்யம் விஸ்வாமித்திர: சவிதா காயத்ரீ*
*ஆபோஹிஷ்டேதி நவர்ச் சஸ்யாம் பரீஷ:*
*சிம்துத் வீபா ஆபோ காயத்ரீ பம்சமி வர்த்தமானு*
*சப்தமி பிரதிஷ்டேம் தேத்வே அநுஷ்டுபௌ*
*ஆபோஹிஷ்டா மயோ புவஸ்தான*
*ஊர்ஜ் ஜெ ததாதன மஹேரணாய சக்ஷசெ*
*யோவஸ்சி வதமொரசஸ் தஸ்ய பாஜயதேஹந:*
*உசதீரிவ மாதர: தஸ்மா அரங்கமாமவே*
*யஸ்ய க்ஷயாய ஜன்வத ஆபோஜன யதாசன:*

என்னும் மந்திரம் சொல்லிப் புரோக்ஷிக்கவும். பிறகு பதி, புத்திரருள்ள புண்ணிய ஸ்த்ரீகள் ஆரதியும் மாஹேஸ்வரர் ஆசிர்வாதமும், செய்யத்தக்கது.

இஃது சுயம் புரோஹிதம்.

---

54 ம்-பக்கம், 6-வது கலச ஜபத்தின் தொடர்ச்சி.

*ருக்வேதோத யஜுர்வேதஸ் சாமவேதோஹ்யதர்வணம்*
*அமகைஸ்ச சஹிதஸ் சர்வெ கலசாம்பு சமாஸ்ரிதா:*
*கம்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி*
*நர்மதெ சிம்து காவேரி ஜலேஸ்மின் சன்னிதிம் குரு*

என்று கலசத்தைத் தொட்டு ஜெபித்து யுக்தமான உபசாரங்களால் பூஜாவிதியில் சொல்லிய மந்திர பூர்வகமாக சோடசோபசாரங்களால் பூஜித்துப் பிறகு

# சுத்தி அல்லது பிராயச்சித்தம்.

யாருக்காவதும் அபவித்ரத்வம் அல்லது பஹிஷ்காரம்அகஸ் மாத்தாகவாவது தெரியாமலாவது அன்னிய ஜாதியாருடைய அன்னம் தண்ணீர் சாப்பிட்டிருந்தாலாவது நிந்தையான வஸ் துக்களாலே அடித்துக் கொண்டிருந்தாலாவது அல்லது வேறே காரணங்களாலாவது குருவர்க்கத்தவராவது அல்லது சமாஜத் தார் தோஷி என்று நிர்ணயித்து ஸ்வஜாதியாரால் ஒதுக்கப்பட் டிருந்தால், அப்படிப்பட்டவரை சர்வ ஜனங்களுடைய சம்மதத் தின் பேரில் சுத்தி செய்ய வேண்டியதாயிருந்தால் பிராயச் சித் தம் செய்துக் கொள்ளுகிறவனால் தேசகாலாதிகளைச் சொல்ல வைத்துப்பிறகு

(1) சங்கல்பம்

மமகாயிக வாசிக மானசிக சாம் சர்க்கிக தோஷ நிரசன
பூர்வகம் சர்வ கர்ம சம்சுத்தி சித்தியர்த்தம் ஸ்ரீகுரு
சரணோதகேன பிராயச்சித்த ஸ்நான மஹம் கரிஷ்யே

என்னும் சங்கல்ப பூர்வகமாக குருபாதோத கத்தால் ஸ்நானம் செய்து சுசியாகி மடி வஸ்திரம் தரித்து விபூதி தாரணை செய்துக் கொண்டு சிவ பூஜை குரு பாத பூசை செய்து தீர்த்தம் ஸ்வீகாரம் செய்து குரு வர்க்கத்தாருக்கும் சமாஜத்தின் முக்கியஸ்தருக்கும் தனக்குண்டான தோஷத்திற்கு பச்சாத்தாப பூர்வகமாக மன்னிக் கவேண்டு மென்றுக் கேட்கவும் சபையார் மன்னித்துத் தயை செய்ய வேண்டியது, பிறகு சுத்தி செய்துக் கொண்டவன் யதா சக்தி பக்த மாஹேஸ்வரர் ஆராதனைச் செய்து சமாஜத்தின் வ்ரு த்தி கார்யங்களுக்கு ஏதாவது திரவய தானம் செய்ய வேண்டியது

பிராயச்சித்த விதி முற்றும்
இஃது சுயம் புரோஹிதம்.

---

## ஆனந்த வார்த்தை, அல்லது ஆனந்த ஒளி.

ராயச்சூர் ஜில்லா முதகல்ல கிராமத்தில் இவ்வருடம் பங்குனி-மீ 9-தேதி ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீ பஞ்சாசார்யர்களி லொருவரான ஹிமோத்கேதார ஏகோராம வைராக்ய சிம்ஹா சனாதீஸ்வரர் ஜகத்குருஸ்ரீ, 108 நீலகண்டலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகளின் திரியக் யந்தோலன மஹோர்ச்சவத்திற்காக நான் போயிருந்தேன், மகாசுவாமிகள் அக்கிராமத்தின் மத்தியகிரி(மலை) யின் கண்ணுள்ள வீரபத்திர தேவாலயத்தில் வாசமாயிருந்தார் ஜனக்கூட்டமானது மஹாபாதத்தின் தரிசனத்திற்காக கூட்டம்கூட் டமாக வந்துக்கொண்டிருந்தன, 8-தேதி, சனிக்கிழமை மாலை பக்

தாதிக ளெல்லாம் பலாசீர்வாதங்களை யடைந்து தங்கள் தங்களிடங்களுக்கேகினர். நான் மாத்திரம், மஹாபாத சன்னிதியிலேயே இருந்தேன், இரவு சிவார்ச்சனை முடிந்தபிறகு, 10-மணி சுமாருக்கு கொங்கவாட வீரபத்திர சாஸ்திரிகள் அநேக தர்ம தத்துவங்களை பேசிக்கொண்டே பேச்சின் மத்தியில், சூர்யன் அஸ்தமனமாகும் காலத்தில் தன் பிரகாசத்தை ஹிமாலயத்திலுள்ள ஜோதிர்லதைகளி (மின்னல் கொடியி டத்தும் மற்றும் அக்கினியிடத்தும், விளக்குகளிடத்தும் வைப்பானென்று காளிதாசாதி கவிகள் வர்ணித்திருக்கிறார்களெனச் சொன்னார், அப்போது ஜகதாசார்யர் அதேன் சூரியன் தன்பிரகாசத்தை யோகிகளிடத்தும் வைப்பதுண்டெனத் தெரியவில்லையா, அம்மாதிரியாக நமது நக சிகாந்தங்களிலுங்கூட காண்பிக்கிறோம் பாருங்களெனச் சொல்லித் தன் சிகையில் கை வைக்கவும் உடனே வித்யுர்லதைதையை(மின்னல் கொடியை)ப்போல பிரகாசம் ஜொலிக்க ஆரம்பமாயிற்று, அங்க பிரத்யங்களிலுங்கூட அஸ்தஸ்பர்சன மாத்திரத்தால் மின்னலைப்போல வெளிச்சமுண்டாயிற்று அப்போது கொங்கவாட கங்காதர சாஸ்திரிகளும், நாயகல் பசவராஜ சாஸ்திரிகளும், சன்னதியி லாஜராயிருந்தார்கள், அவர்களு மிதைக்கண்டு ஆச்சர்யங் கொண்டார்கள், மற்றும் இம்மஹா சிவாசார்யரானவர் யோகசாமர்த்தியத்தால் உங்கள் அங்கத்திலுங்கூட இப்பிரகாசம் வரும்படியாகச் செய்கிறோம் உங்கள் கைகளைக் கொடுங்களெனச் சொல்லி நாயகல் சாஸ்திரிகளின் கையை 5-நிமிஷம் பிடித்து, இம்மல்வஸ்திரத்தின்மீது கையை ஆட்டெனச் சொல்லவும் உத்திரவுப்படிக்கு அவர் கையையாட்டவும், புஷ்ப பாணத்தைப்போல நெருப்புப் பொறிபறக்க வாரம்பித்தது அவ்விடமிருந்தவர்களனைவரும் ஆச்சர்யங்கொண்டு மஹா குருக்களே இப்பிரகாசத்தின் மஹத்துவமென்ன இப்படியாகக் காரணமென்ன தயவுகூர்ந்துபதேசிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள், சிவாசார்யர் சொன்னதாவது யோக சாமர்த்தியத்தினலிப் பிரகாசம் வருமெனச்சொல்லி சந்தோஷப் படுத்தினர் ஆகையால் யோகிகளின் நடவடிக்கை யாருக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட சிரேஷ்டர்களிருக்கும் இக்காலத்திலும் சிலர் பீடாசார்யர்களை நிந்தித்து பாபத்திற்காளாகிறார்கள்,. குருதைவாத்பரம் நாஸ்தியென்னும் வாக்கியத்தை நம்பி ஜகத்குரு பீடாசார்யரைப் பூஜித்து சர்வரும் தன்னியராக வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

பிரத்யக்ஷதர்சி சித்தாபுரம் சிவலிங்கப்ப

24—4—30 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# அற்புத மஹிமை.

ஸ்ரீமத் பஞ்சாசார்யர்களி லொருவரான உஜ்ஜயனி சத்தர்ம சிம்ஹாசனதீஸ்வர ஸ்ரீ ஜகத்குரு சித்தலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகளவர்கள் மஹாராஷ்ட்ர தேசத்தின் வீரசைவ (லிங்காயுத)ர்களை யீடேற்றும் பொருட்டு இத்தேசத்திற்கு விஜயம் செய்து தற்காலம் பார்சி பட்டணத்திலிருந்தாரென்பது சகலருக்கும் தெரிந்த விஷயமாயிருக்கிறது. பிறதி தினமும் ஊளந்தகரின் மடத்தில் ஜகத்குருக்க ளவர்கள் சிஷ்யவர்க்கத்துக் கெல்லாம் மத தத்துவத்தைபோதித்துக் கொண்டிருந்தார். இம்மாதம் 8தேதியில், ஒரு விசித்திர மகிமை நடை பெற்றது அதென்னவெனில் பார்சி பட்டணத்தின் மத்தியிலுள்ள ஒரு ஏரியின் சமீபத்தில் ஒரு பயங்கரமானசர்ப்பம் ஒன்றுவந்தது அதைக்கொல்லுவதற்காக எவ்விடமிருந்தோ மூன்று கீரிகள் வந்து சர்ப்பத்தின் சமீபம் சேர்ந்தன. அச்சர்ப்பத்திற்கும் கீரிகளுக்கும் 15, நிமிட நேரம் யுத்தம் நடைபெற்றது. இதைப் பார்ப்பதற்காக ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவ்விடம்வந்து சேர்ந்து விட்டார்கள், இப்படி யிருக்கையில் ஸ்ரீஜகத்குருக்களின் சவாரியானது மகா-௱-௱-ஸ்ரீ, அண்ணு சாஹேப் அவர்களின் பங்களாவிலிருந்து பிரவசனத்திற்காகபுறப்பட்டு அண்ணுசாஹேப் முதலான வர்களுடன் வந்துக் கொண்டிருந்தார்கள், இவ்விருவிதபிராணிகளுக்கும நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்காக அண்ணு சாஹேப் முதலானவர்கள் வேண்டிய பிரயத்தினம் செய்தும், சண்டை நிற்கவில்லை, சர்ப்பமானது வெகு துக்காவஸ்தையிலிருந்தது, அப்பொழுது ஸ்ரீஜகத்குருக்கள் அப்பிராணிகளைப் பார்த்து நீங்கள் பரபரஸ்மாக சண்டை செய்யாமல் அவரவர்கள் ஸ்தானங்களுக்குச் செல்லுங்களென ஆக்ஞாபித்தார், உடனே அம்மூன்று கீரிகளும் புறப்பட்டுப்போயிற்று, சர்ப்பமும் ஒருதுவாரத்தில் நுழைந்துக் கொண்டது ஸ்ரீஜகத் குருக்களின் கட்டளையானவுடனேஜன்மசித்தவைரியுள்ள இப்பிராணிகள் தங்கள்விரோதபாவனையை விட்டு அவ்விடத்தினின்றுப் போனதைப் பார்த்து அங்குகூடியிருந்த எல்லா மதஸ்தர்களும்ஸ்ரீஜகத்குருக்களின் அற்புதமஹிமையைக் கொண்டாடி (துதித்து)க்கொண்டு புறப்பட்டார்கள், யோகிகளின் சந்நிதானத்தில் பரஸ்பரவிரோத பாவமுள்ள பிராணிகள் தங்கள் தங்களுடைய விரோதபாவத்தை விட்டு (அகற்றி) சாந்தமாக நடந்துக் கொள்ளுமெனச் சொல்லியுள்ள,

தத்சன்னிதௌ வைர தியாக:

என்னும் யோகசூஸ்திர விருத்தாந்தமானது பிரத்யக்ஷமாயிற்று இப்படிப்பட்ட சிவயோகிகளுடைய பாத விந்யாசத்தினல் புனீதமாய்க் கொண்டிருக்கும் பார்சி பட்டணமே மிக்க விசேஷமானது

17-10-32-பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு

# நூதன சஜ்ஜை.

புதுமாதிரியான சிறந்த, அதி செளந்தர்யமான சஜ்ஜை (லிங்கக்காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித ஜாதி வித்தியாசமு மின்றி எல்லா லிங்கதாரிகளும் நிராபாரமாக அணிந்து கொள்ளத் தகுதியானது குனிந்து, நிமிர்ந்து வளைந்து ஓடி, வேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பளுவும், பருமனுமில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது. இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையு மிடங்களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்று மிருப்பதில்லை. நூற் கயிறு சீக்கிரம் துண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும் இருபக்கங்களிலும் அஷ்டதள (எட்டுப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமாகையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்கு மேல் உயர்ந்து காணப்படுவதில்லை.

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—4—0 முதல் ரூ. 6—8—0 வரையிலும் தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரம் அரைவரடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

# வைத்தியாம்சம்!


56-பக்கமுள்ள புஸ்தகம், இதில் தாய்மார்களின் விஷயங்களும், சிசுக் (குழந்தை) களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8-வகைகளின் விபரங்களும், கிரந்தி, இருவகையும், பாலகிரகதோஷங்கள் 16-பிரிவும், வைசூரியில் 14, விதமும், வாந்திபேதியில் 3-விதமும், பிளேக்வியாதியி லிருவிதமும், முடக்குமாரி, இன்புளுயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறிகளும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தியங்களும். அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும், குளிசங்களும், பூசைகளும் மந்திரங்களும், பரிகாரங்க (சிகிச்சை) களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாகவெளிப் படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள், இரண்டணா தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

**வை. செ. குருசாமி ஐயர்,**

வைத்தியம், குகை, சேலம்.

மாத வெளியீடு

தனிப் பிரதி விலை அணா 2.



சிவமயம்.

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தை
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாய நம : வென்னும் திருவைந்தெழுத்தாலே
அவாய மற நின்றுடுவான்.

# சிவபக்தன்.

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | ஏகேஸ்வர பக்தி ... ... ... | 1 |
| 2 | ஸ்ரீ கேதாரநாத மஹா தேவாலயம் ... ... | 7 |
| 3 | மோக்ஷோ பாயம் ... ... ... | 10 |
| 4 | தத்துப்புத்ர ஸ்வீகார விதானம் ... ... | 13 |
| 5 | சக்தி விசிஷ்டாத்வைத மதம் ... ... | 17 |
| 6 | வீரசைவரின் நியமங்கள் ... ... | 21 |
| 7 | லிங்காயுத மத பிரவர்த்தி ... ... | 22 |
| 8 | விபூதி தயாரிக்கும் விதம் ... ... | 25 |
| 9 | ருத்திராக்ஷ உற்பத்தி ... ... | ,, |
| 10 | சந்தான விக்ரயம் ... ... | 26 |
| 11 | ஸ்திரீ விவாஹ காலம் ... ... | 28 |
| 12 | வித்தியாப்பியாசம் ... ... ... | 29 |
| 13 | புனர் விவாஹ சம்பிரதாயம் ... ... | 30 |
| 14 | விவாஹங்கள் 8-விதம் ... ... ... | 32 |
| 15 | மூன்றுவித வீரசைவ ஸ்ரூபம் ... ... | 33 |
| 16 | குருவர்க்கத்தின் கர்த்தவ்யம் ... ... | 38 |
| 17 | வீரசைவ (லிங்காயுத) விஜயம் ... ... | 41 |
| 18 | சிவபூஜா பிரபாவம் ... ... ... | 46 |
| 19 | ஷடங்கியோகம் ... ... ... ... | 50 |
| 20 | புண்ணியா வசனம் ... ... ... | 54 |
| 21 | சுத்தி அல்லது பிராயச்சித்தம். ... ... | 58 |
| 22 | ஆனந்தஒளி. ... ... ... | |
| 23 | அற்புத மஹிமை... ... ... | 60 |